விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 12 செவ்வாய்க்கிழமை (28.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 221





# தூண்டப்படுகிறது தெற்கில் இனவாதம்



(கொழும்பு)

நாட்டின் தெற்குப் பகுதிகளில் இனவாதத்தை தூண்டும் வகையில் தேர்தல் சுவரொட்டிகளும், சர்ச்சைக்குரிய கொடிகளும் திட்டமிட்ட வகையில் பிரசார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. (02ஆம் பக்கம் பார்க்க)

## அப்துல் கலாம் காலமானார்



(டில்லி)

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரும் விஞ்ஞானியுமான டாக்டர் அப்துல் கலாம் தனது 84-வது வயதில் நேற்றிரவு காலமானார்.

தமிழகத்தின் தெற்கே இராமேஸ்வரத்தில் 1931 இல் பிறந்த அவர் இந்தியாவின் பலஸ்டிக் ஏவுகணை திட்டத்

23 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்., கிளிநொச்சிக்கு இன்று ஜனாதிபதி மைத்திரி விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்றைய தினம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு தனிப்பட்ட ரீதியில் திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

மாலைதீவுக்கு இரண்டு நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த அவர் நாடு திரும்பியதும் முதல் பயணமாக வடக்கிற்கு வருகை தருகின்றார்.

இன்று காலை 10 மணியளவில் உலங்கு வானூர்தி மூலம் யாழ்.மாவட்டத்திற்கு வருகை தரவுள்ள ஜனாதிபதி, யாழ்ப்பாணம் முற்றவெளிப்

23 ஆம் பக்கம் பார்க்க













நடுவுநிலை தவறா... உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவு தினம்

தோற்றம்
02 - 01 - 1938



மறைவு
08 - 08 - 2014

அமரர் வைரமுத்து அப்புத்துரை

(உடுப்பிட்டி பல நோக்கு கூட்டுறவுச்சங்க முன்னாள் பணியாளர்)

திதி:- திரயோதசி - 29/07/2015

எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஓராண்டு காலம் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எந்நாளும் எங்களுடன்

29/07/2015 நாளை புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் மதிய போசன நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள், உறவினர்கள்.

அப்புத்துரை வீதி,
வல்வெட்டி.

(C-1677)


# தூண்டப்படுகிறது...

கட்சி அல்லது நிறம் எதுவானாலும் எங்கள் வாக்கு ஒரு சிங்கள பௌத்தருக்கே என்ற தொனிப்பொருளில் சிங்கள மொழியில் தெற்கின் பல பாகங்களில் தேர்தல் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டு வருகின்றன.

கேகாலை மாவட்டத்தில் குறித்த சுவரொட்டிகளை சிறுவர்கள் பலர் சேர்ந்து ஒட்டும் படங்களும் வெளியாகியுள்ளன.

தென்பகுதியில் போட்டியிடும் சிறுபான்மையின வேட்பாளர்களை இலக்கு வைத்தே மேற்படி சுவரொட்டிகள் வரையப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் கேகாலை மாவட்டத்தில் போட்டியிடுகின்ற ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் விசனம் வெளியிட்டுள்ளதுடன் தேர்தல்கள் ஆணையாளரிடம் முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

அதேவேளை யட்டிநுவர பிரதேசத்தில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டமொன்றில் சர்ச்சைக்குரிய சிங்களக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

நாட்டின் சிறுபான்மை இனச் சமூகங்களைக் குறிக்கும் வர்ணங்கள் நீக்கப்பட்டு பெரும்பான்மை சமூகத்தை மட்டும் குறிக்கும் வகையில் இந்தக் கொடிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இதேபோல், கடந்த ஏப்ரல் மாதமும் கொழும்பில் ராஜபக்ஷக்களுக்கு ஆதரவாக நடத்தப்பட்ட போராட்டத்தில் இந்த வகைக் கொடிகளை ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்தி சர்ச்சை ஏற்பட்டதுடன் நீதிமன்றமும் அதில் தலையிட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனம் தெற்கில் இனவாத நோக்கில் பார்க்கப்படுகிறது.

பிரதான கட்சிகள் இரண்டும் தேர்தல் பிரசார மேடைகளில் இந்த விஞ்ஞாபனத்தை கடுமையாகத் தாக்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (செ-11)


6 மாதங்களில் வெளிநாட்டு விசா & தொழில் ஏற்பாட்டுடன்

SIKARAM
Get Set for Careers & Take off Your Dreams

Business & Hotel Management

புதிய பிரிவு ஆரம்பம் - செவ்வாய், வியாழன் 10.00
Call:077 3616 798

Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம்) Tel: 021 222 00 11

விற்பனையாளர் தேவை

எமது புடைவை நிறுவனத்துக்கு புடைவை அனுபவம் உள்ள ஆண்/ பெண் ஊழியர்கள் தேவை.
பழக ஆர்வம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது
(மாநகர சபை எல்லைக்குள் உட்பட்டவர்கள் விரும்பத்தககது)

(1247) சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41,பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

FALC FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH IN NORTH

பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
இலகுவாக எழுத வாசிக்க சரியான உச்சரிப்புடன் கதைக்க...

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 970 மாணவர்கள் கற்றுள்ளனர்.....
உடன் அனுமதியைப் பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781

No. 40, பலாலி வீதி. ஆரிய குளத்துக்கும் இலுப்பையடி சந்திக்கும் இடையில் உள்ளது. | 181, பிரதான வீதி நெல்லியடி. | கண்டி வீதி, அரசடி, சாவகச்சேரி

Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

மக்களின் கூட்டுப்பிரார்த்தனை
எதிலும் வெற்றியளிக்கும்.





இன்று செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு கோவில் வீதியில் அமைந்துள்ள கைலாசப்பிள்ளையார் ஆலயத்தில் மக்களின் நல்வாழ்வு வேண்டி விசேட அபிஷேக ஆராதனை வழிபாடும் அன்னதான நிகழ்வும் நடைபெற இருக்கிறது. அனைத்து மக்களையும், ஆதரவாளர்களையும் இப்பிரார்த்தனையில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அங்கஜன் இராமநாதன்

புதிய நாடு ~ புதிய தலைவர் ~ புதிய தலைமுறை ~ புதிய எதிர்பார்ப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# மகிந்தவுக்கு வாக்களித்தால் வெள்ளை வான்களே பரிசு

## புரட்சியை பின் நகர்த்தாதீர்கள்-பிரதமர்



(கொழும்பு)

**ஜனவரி 8ஆம் திகதி ஏற்பட்ட மாற்றத்தின் புரட்சி பின்நோக்கி சென்றால், மீண்டும் வெள்ளை வான்கள் நாட்டில் உலாவும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

எட்டியாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஜனவரி 8ஆம் திகதி ஏற்பட்ட புரட்சி பின்நோக்கி சென்றால் அரச குடும்பத்துக்கு சொர்க்கமும், மக்களுக்கு நரகத்தை விட கொடிய துக்கங்களை அனுபவிக்ககூடிய ராஜபக்ஷ நரகம் கிடைக்கும்.

ஜனவரி 8 ஆம் திகதி புரட்சியை அப்படியே முன்னோக்கி கொண்டு சென்றால், வெள்ளை வான், ஹெரோயின், பாலியல் துஷ்பிரயோகம் என்பன இல்லாது ஒழியும். அத்துடன் வேலைவாய்ப்புகளும் வருமானமும் அதிகரிக்கும். விவசாயம் முன்னேற்றமடையும்.

நாங்கள் புதிய நாட்டை கோருகிறோம். புதிய பயணத்தை ஆரம்பிக்க ஓகஸ்ட் 17ஆம் திகதி வரம் ஒன்றை வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார். (செ-11)

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளியீடு

### கலந்து கொள்வாரா ஜனாதிபதி?

(கொழும்பு)


ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் கூட்டணியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இன்று இடம்பெறவுள்ள பொது தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டதாக சுதந்திர கட்சியின் பொது செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் தலைவர் என்றதனால் அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு தாமரை தடாக மண்டபத்தில் இன்றையதினம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொது தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் பிரசார குழு தலைவர்

23ஆம் பக்கம் பார்க்க

## தம்பிராசாவின் மகன் இன்னமும் மீட்கப்படவில்லை



(யாழ்ப்பாணம்)

கடந்த 23ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் காணாமல் போன, அடக்கு முறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் மு.தம்பிராசாவின் மகன் திருவளவன் (வயது 19) இன்னமும் தேடிக் கண்டுபிடிக்கப்படவில்லை.

இவர் காணாமல் போனதொடர்

23ஆம் பக்கம் பார்க்க

## விபத்துக்குள்ளானவர் நேற்று மரணம்

(கிளிநொச்சி)

வீதி விபத்துக்குள்ளான நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 25ஆம் திகதி சனிக்கிழமை மாலை கிளிநொச்சி கனகபுரம் தேவியர் கடைக்கு அண்மையில் மோட்டார் சைக்கிளும் துவிச்

23ஆம் பக்கம் பார்க்க

## சந்திரிகா இன்று விசேட உரை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க இன்று விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார்.

தற்போதைய அரசியல் சூழ்நிலைமை குறித்து அவர் உரையாற்ற உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாப்பது குறித்து கருத்து வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத்

23ஆம் பக்கம் பார்க்க

## குழந்தை மரணம்; மாணவன் கைது

(கொழும்பு)

கடந்த 19ஆம் திகதி கிளிநொச்சி உருத்திரபுரம் பிரதேசத்தில் சடலமாக மீட்கப்பட்ட 3 வயதான குழந்தை தொடர்பில் 14வயதான பாடசாலை மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட மாணவர், நேற்று கிளிநொச்சி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 10ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் அச்சுவேலி சிறுவர் முகாமில் தடுத்து வைக்க உத்தரவிடப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி குறித்த குழந்தை அவரின் தாயா

23ஆம் பக்கம் பார்க்க

## தாஜுடீனின் மரணம் விபத்தல்ல; கொலை

### நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

ரகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீனின் மரணம் வாகன விபத்தினால் ஏற்பட்டது அல்ல, கொலை என இரகசிய பொலிஸார் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

குறித்த வழக்கு தொடர்பான மேலதிக அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்த போதே அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் குறித்த வழக்கில் பிரேதப் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட வைத்தியர்களின் வாக்குமூலமும் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மன்றில் தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் இது விபத்தல்ல, கொலை என தெரியவந்துள்ளதாகவும் அவர்கள் நீதவானிடம் தெரிவித்தனர்.

அதேவேளை இந்த வழக்கு குறித்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இரகசியப் பொலிஸார் நீதிமன்றில் தகவல் குறிப்பிட்டுள்ளனர். (செ-11)

## ஆணின் சடலம் வாவியில் மீட்பு

(கொழும்பு)

பாராளுமன்றுக்கு அருகில் தியவன்ன ஓயாவில் மிதந்து கொண்டிருந்த நிலையில்சடலம்ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அடையாளம் தெரியப்படாத நிலையில் ஆண் ஒருவரின் சடலமே இவ்வாறு நேற்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சடலம் தொடர்பில் மேலதிக விசாரணை இடம்பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (செ-11)

## 10 ஆயிரம் கிலோ ஹெரோயின் நாட்டுக்குள் பதுக்கி வைப்பு

### ஔடத கட்டுப்பாட்டுச் சபை தகவல்

(கொழும்பு)

10 ஆயிரம் கிலோ கிராமுக்கும் மேற்பட்ட ஹெரோயின் போதைப் பொருள் நாட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக ஆபத்தான ஔடதங்களை கட்டுப்படுத்தும் தேசிய சபை தெரிவித்துள்ளது.

வருடாந்தம் நாட்டுக்குள் சுமார ஆயிரம் கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருள் பயன்படுத்தப்படுகிறது என அதன் தலைவர் மருத்துவர் திலங்க சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

சிறியளவில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் மற்றும் வியாபாரிகளிடம் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கு அமைய இந்தப் போதைப்பொருள் வியாபாரத்தில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளின் பட்டியல் இருப்பதாக வெளியிட்ட தகவல் காரணமாக தனக்கு உயிராபத்து இருப்பதாகவும் சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில், ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் கடந்த வியாழக்கிழமை இரவு முதல் நேற்று முன்தினம் மதியம் வரை தனக்கு அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது எனவும் தற்

23ஆம் பக்கம் பார்க்க

## புலி உறுப்பினர் திருச்சியில் கைது

(திருச்சி)

மற்றுமொரு முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர் நேற்று இராமநாதபுரம் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குமரகுரு எனப்படும் சந்தேகத்திற்குரியவர், திருச்சிராப்பள்ளி வானூர்தி நிலையம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு போலிக் கடவுச் சீட்டை பெற்றுக்கொள்வதற்கு உதவியதாக கருதப்படும் மேலும் இரண்டு பேர்

23ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 246

# அஹங்காரத்தை விடுதல்

...நான் என்ன சொல்கிறேன் என்றால் நீங்கள் என்பது உங்கள் உள் இருப்புத் தன்மை.

இந்த இருப்புத் தன்மையானது இப்பொழுது எது இல்லையோ அந்த பல்வேறுபட்ட செயற்படும் மற்றும் செயற்படா நிலையில் உள்ள அஹங் காரத்தினால் மாசு அடைந்திருக்கிறது. நீங்கள் அழிக்க வேண்டியதும்.

எது நீங்கள் இல்லையோ இதை அழித்து விடுங்கள்; நீங்கள் சேர வேண்டிய இடத்தை அடைத்து விட் டீர்கள்! என்று நான் சொல்வதும் இதைத்தான்.

நீங்கள் இந்தப் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் ஒரு பகுதிதான்; உங் களை மற்றவாறு எண்ண வைக்கும எதுவுமே உங்கள் அஹங்காரம்தான்.

அவ்வளவுதான். அது எவ்வாறு இருக்கிறதென்றால்.... ஒரு மீன், விருப்பம் இருப்பினும் இல்லாவிடி னும், ஏற்றுக்கொள்ளினும் இல்லா விடினும், நம்பினாலும் இல்லாவிடி னும், கடலின் ஒரு பகுதிதான்.

அதற்கு இரண்டு வாய்ப்புகள் இருக்கின்றன. ஒன்று, கடலில் மகிழ்ச்சியாக வாழ்வது; அல்லது கடலுடன் சண்டையிட்டுக்கொண் டும், வாழ்க்கையைத் துயரமாக்கிக் கொண்டும் அதிலேயே தொடர்ந்து வாழ்ந்துகொண்டிருப்பது.

நீங்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மை யுடன் இசைந்து சென்றால், உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தை யும் அனுபவிக்க முடியும். நீங்கள் உள் வாங்கும் தன்மையுடனும் உணர்வு பூர்வமாகவும் படைப்பாற்றலுடனும் திரவத் தன்மையுடனும் இருப்பீர்கள்.

ஒரு சின்னக் கதை...

ஒரு ஆசிரியை தனது மாணவர் களை சுற்றுலாவிற்காக வெளியே அழைத்துச் சென்றாள். அவர்கள் விளையாடினார்கள்; நொறுக்குத் தீனிகளைத் தின்று மகிழ்ந்தார்கள்.



திடீரென்று ஆசி ரியை அவர்களது கவன த்தை வானத்தில் தோன் றிய ஒரு அழகான வான வில்லை நோக்கித் திருப் பினாள். குழந்தைகள் அதை வியப்புடன் பார் த்தனர்.

அவர்களை கவனி த்த ஆசிரியை அறிவித் தாள், சரி இப்பொழுது நாம் இதற்குப் பின்னால் இருக்கும் ஓவியனுக்கா கக் கை தட்டுவோம்! ஒரு கணம் குழம்பிய மாணவர்கள், உடனே புரிந்துகொண்டு கரகோ ஷம் செய்தனர்!

குழந்தைகளுக்கு, அவர் களைச் சுற்றியுள்ள பிரபஞ்ச இருப்புத் தன் மையின் அழகைப் பாரா ட்ட கற்றுத்தரப்பட வேண்டும்.

இல்லாவி டில் அவர் கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடனான தொட ர்பை வெகு சீக்கிரத்தி லேயே இழந்துவிட்டு, அஹங்காரம் மிக்கவர்களாகிவிடுவார்கள்.

அவர்கள் அஹங்காரம் மிக்கவர்களாகவும் இயந்திரம் போலாகிவிடவும் அனுமதி த்துவிடக்கூடாது.

அவர்கள் மென்மையான வர்களாகவும் உணர்ச்சிமிக்க வர்களாகவும் வளர்க்கப்பட வேண் டும். உங்களால் பிரபஞ்ச இருப்புத் தன்மையை உணர்ந்து பாராட்ட முடியுமானால் நீங்கள் அதற்கு அருகாமையில் வந்துவிட்டீர்கள் என்று அர்த்தம்.

முழு இருப்புத் தன்மையுமே படைப்பாற்றல்தான். ஒரு படைப் பாளி அவனுடைய மூளையை விட, இதயத்திற்கு அருகில் இருக்கிறான்.

நீங்கள் படைக்கும்பொழுது கடவு ளுக்கு அருகில் இருக்கிறீர்கள். கடவுளே படைப்பவன், படைக்கப் பட்டது மற்றும் படைத்தல்.

நீங்கள் படைக்கும் பொழுது பிரபஞ்ச இருப்பின் தன்மையான உங்களுடைய இருப்புத் தன்மையை வெளிப்படுத்துகிறார்கள்.

நீங்கள் படைக்கும் பொழுது பிரபஞ்ச இருப்புத் தன்மையை நோக்கிய உங்கள் அன்பையும் பாராட்டுதலையும் காண்பீர்கள்; பிரபஞ்ச இருப்புத் தன்மையின் அழகை இன்னும் கொஞ்சம் கூட்டு கிறீர்கள். நீங்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையைப் பற்றிய ஆச்சரியத்தால் நிரம்பியிருப்பீர்களானால் உங்களால் படைக்க முடியும். (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி




### கப்பல், விமானத்தைப் பார்த்தாலே மயங்கி விழும் அதிசய பெண்!



பிரித்தானியாவில் பெண் ஒருவர் பெரிய பொருட்களை பார்த்தால் பயப்படும் வித்தி யாசமான நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவின் லிவர்பூல் பகுதியை சேர்ந்தவர் எமி கர்சன் (Amy Carson). இவர் மெகாலொபோபியா (Megalophobia) என்ற வித்தியாசமான நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி பெரிய அளவிலான பொருட்களை பார்த்தால் பயந்து சில சமயங்களில் மயங்கிவிடுகிறார்.

இது குறித்து எமி கூறியதாவது, அளவில் பெரிய பொருட்களான விமானம், கப்பல் லொறி ஆகியவற்றை பார்த்தால் என்னையும் அறியாமல் பயப்படத் தொடங்கிவிடுவேன்.

அந்த பொருட்களுக்கு திடீரென உயிர் வந்து தலை மற்றும் கால்களுடன் என்னை மிரட்டுவது போல் தோன்றும்.

இதனால் சில சமயங்களில் மயக்கம் போட்டு விழுந்துள்ளேன்.

எனினும் சில நேரங்களில் விமானம், கப்பல் போன்றவற்றின் புகைப்படங்களை பார்க்காமல் இருக்க முடியவில்லை.

எனது காதலர் பலமுறை என்னை எச்சரித்தும் என்னால் இந்த பழக்கத்தை விட முடியவில்லை. எனவே பெரிய பொருட்களை பார்க்கும் போது காதுகளை மூடியும் தலையை குனிந்தபடியும் சென்று விடுவேன்.

இந்த நோயின் கொடுமையே பயம் ஏற்படும் என்று தெரிந்தும் பெரிய பொருட்களின் படங்களை கட்டாயம் பார்த்தாக வேண்டும் என்பதுதான் என்று அவர் தெரிவித்துள்ளார்.




## இனிப்பு வடை



**தே.பொருட்கள்:**

அரிசி - 1/2 படி,

முட்டை - 3,

சர்க்கரை - 300 கிராம்,

நெய் - 100 கிராம்,

பெருஞ்சீரகத் தூள் - 2 டேபிள்ஸ்பூன்,

உப்பு - ஒரு சிட்டிகை, ஏலக்காய் தூள் - 1/2 டீஸ்பூன்.

**செய்முறை:-**

அரிசியை 1 மணி நேரம் ஊற வைத்து உலர்த்தவும். உலர்ந்ததும் முக்கால் பதமாக கொரகொரப்பாக திரிக்கவும். அரிசி மாவில், பெருஞ்சீரகத் தூளைச் சேர்த்து நெய்யை சூடுபடுத்தி ஊற்றவும்.

முட்டையை நன்கு நுரை பொங்க அடித்து, அதில் சர்க்கரை, உப்பு, ஏலக்காய் தூள் சேர்த்து மாவில் கலந்து நன்கு பிசைந்து உளுந்து வடை போல் தட்டி பொரித்து எடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Valampuri 0001.pdf 1 7/28/2015 12:11:01 AM

# ஜாதிக பலசேனாவின் தலைவருக்கு எதிராக ஞானசார தேரர் முறைப்பாடு

(கொழும்பு)

ஜாதிக பலசேனாவின் தலைவரும் நவசம சமாஜக் கட்சியின் வேட்பாளருமான வட்ட ரக்க விஜித்த தேரருக்கு எதிராக பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தேஞானசார தேரர், பொலிஸ் தலைமை யகத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேசியக் கொடி தொடர்பில் ஜாதிக பலசே னாவின் தலைவரும் நவசமசமாஜக் கட்சி யின் வேட்பாளருமான வட்டரக்க விஜி த்த தேரர் தெரிவித்ததாக கூறப்படும் கரு த்து தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டு ள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் இதுவரையி லும் முறைப்பாடு எதுவும் செய்யப்படவில்லை என்றும் முறைப்பாடு செய்யப்பட்டதன் பின்னர் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் உதவி பொலிஸ் அதிகாரி ருவான் குணசேகர நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்திருந்தார்.

தேசியக் கொடி விவகாரம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் கருத்துக்கள் பகிரப்பட்டுள்ள போதிலும் முறைப்பாடுகள் எதுவும் இதுவரையிலும் செய்யப்படவில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

வட்டரக்க விஜித்த தேரர் கூறி யதாக கூறப்படும் கூற்று தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ள போதிலும் முறைப்பாடுகள் இன்றி விசாரணைகளை முன்னெடுக்க முடியாது என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஜாதிக பலசேனாவின் தலைவரும் நவ சமசமாஜக் கட்சியின் வேட்பாளருமான வட்டரக்க தேரர், தேசியக்கொடிக்கு தீ வைக்க வேண்டும் என்றும் இது இனங்களுக்கு இடையில் பிரிவினையை ஏற்படுத்துவதாக வும் கூறி கடும் விமர்சனங்களை முன்வைத் துள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (இ-7)

# பேசும் படம்-69

இடம்: யாழ்.மின்சார நிலைய வீதி



ஓடர் பண்ணின மசாலாத் தோசை இன்னும் வரல பாஸ்

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16
தபால் முகவரி: ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்: ஸ்ரீ.துவாரகன், கொக்குவில்.

# பீரிஸிற்கு சவால் விடும் அர்ஜுன்

திறைசேரியின் பிணைமுறி பத்திர கொடுக்கல்- வாங்கல் தொடர்பில் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு, முன்னாள் அமை ச்சர் ஜீ. எல்.பீரிஸிற்கு மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் சவால் விடுத்துள்ளார்.

திறைசேரி பிணைமுறி பத்திரம் வழங்கல் குறித்து ஜீ.எல். பீரிஸ் பல்வேறு இடங்களில் அடிப்படையற்ற கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.

இது குறித்து தன்னுடன் நேருக்கு நேர் விவாதத்திற்கு வருமாறு ஜீ.எல்.பீரிஸிற்கு சவால் விடுப்பதாகவும் மகேந்திரன் கூறியுள்ளார். (இ-7)

# எனக்கு பயந்துதான் சஜித் கொழும்பை விட்டுச்சென்றார்

## விமல் பெருமிதம்



கொழும்பு, கெசெல்வத்தையில் பிறந்த சஜித் பிரேமதாஸ அம்பாந்தோட்டையில் போட்டியிடுவது தன்மீது கொண்டுள்ள பயத்தின் காரணமாகவா என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கேள்வியெழுப்பியுள்ளார்.

பெலியத்த பிரதேசத்தில் முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.


அம்பாந்தோட்டையில் இருந்து மகிந்த ராஜபக்ஷ குருநாகலைக்கு தப்பியோடியது தன்மீது காணப்பட்ட பயத்தினால் என சஜித் பிரேமதாஸ கருத்து வெளியிட்டமைக்கு சவால் விடுக்கும் வகையில் விமல் வீரவன்ச இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

2004, 2010 பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் விமல் வீரவன்ச அதிக வாக்குகளை பெற்றுக்கொண்ட ஒருவராவார்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு செய்ய முடியாத மாற்றத்தை அன்னத்தினால் செய்ய முடியும் என பலர் நம்பி ஏமாற்றமடைந்துள்ளார் கள் என விமல் வீரவன்ச மேலும் தெரிவித் தார். (இ-7)

# எந்த அரசியல்வாதிகளுக்கும் பண்புச் சான்றிதழ் இல்லை

## சோபித தேரர் மறுப்பு



கடந்த சில நாட்களாக பண்பு சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு தன்னிடம் வந்த வேட் பாளர்கள் சிலரை திருப்பி அனுப்பியதாக நியாயமான சமூகத்திற்கான தேசிய அமை ப்பின் ஏற்பாட்டாளர் மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் விளம்பரங்களுக்கு தனது கருத்துக்கள் மற்றும் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு குறித்த வேட்பாளர்கள் முயற்சிகளை மேற் கொள்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர்கள் கோட்டை ஸ்ரீநாக விகாரைக்கு வருகை தந்ததாகவும், தனிப்பட்ட ரீதியில் வந்த குறித்த வேட்பாளர்கள் பல்வேறு அரசியல் கட்சியை சேர்ந்தவர்கள் என அவர் கூறியுள் ளார்.எந்தவொரு அரசியல்வாதிக்கும் தான் பண்பு சான்றிதழ் வழங்கப் போவதில்லை எனவும் சுயாதீனமாக செயற்படுவத ற்கே சிந்திப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

எனினும் 49 அமைப்புகள் இணைந்து முன் வைத்த யோசனைகளை செயற்படுத்துவத ற்கு அவசியமான ஆதரவினை வழங்குவ தாகவும் சோபித தேரர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிரதமர் பதவியை மகிந்தவுக்கு கொடையாக வழங்கியுள்ளேன்

## நிமால் சிறிபால டி சில்வா கூறுகிறார்



(கொழும்பு)

பிரதமர் பதவியை மகிந்தவுக்கு கொடை யாக வழங்கியுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் பொதுவான நடைமுறையின் அடிப்படையில் அடுத்த பிரதமர் நானே. எனினும் நான் வெஸ்ஸந்தர சிறிசங்கபோ போன்ற பண் டைய கொடையாளிகளைப் போன்று பிரத மர் பதவியை கொடையாக வழங்கினேன்.

எனக்கு வர வேண்டிய பதவியை நான் மிகுந்த விருப்பத்துடன் முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவிற்கு விட்டுக்கொ டுத்தேன். ஏனெனில் நாம் மக்களின் பக்கம் இருக்கின்றோம்.

மக்களுக்கும் ஆசீர்வாதம் ஏற்படும் வகை யில் நாம் அரசியல் செய்ய வேண்டும். பதவி கள் பெரிதல்ல. கட்சி ஆதரவாளர்களே எமக்கு முக்கியம். கட்சி ஆதரவாளர்களை பாதுகா த்து, கட்சியை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

எமது அரசாங்கம் இருந்த காரணத்தி னால் பாரியளவில் அபிவிருத்தி மேற்கொ ள்ள முடிந்தது. மகிந்த ராஜபக்ஷவை பிரதம ராக நியமிக்க நம் அனைவருக்கும் தேவை ப்பாடு உண்டு.

அவருக்கு 113 ஐ விடவும் அதிகளவான ஆசனங்களை வழங்க வேண்டும் என நிமால் சிறிபால டி சில்வா ஊவா மாகா ணத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்ட மொன்றில் தெரிவித்துள்ளார்.

சிங்கள வரலாற்றில் வெஸ்ஸந்தர சிறி சங்கபோ போன்றோர் மிகப்பெரிய கொடை யாளிகளாக கருதப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமளவான போதைப்பொருட்கள் யாழ்ப்பாணத்தில் நேற்றுச் சிக்கின!

(யாழ்ப்பாணம்)

**பொதுமக்களால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலின் அடிப்படையில் பெருமளவான போதைப் பொருட்கள் யாழ்.நகரில் நேற்றைய தினம் கைப்பற்றப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எவயு.கே. வூட்லர் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸாரின் பிரதான நோக்கம் சிறுவர்களை துஷ்பிரயோகங்களில் இருந்து மீட்பதே ஆகும்.அதன் காரணமாக பாடசாலைகள், மேலதிக வகுப்புக்கள் மற்றும் பெற்றோர்களிடத்தில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இதன் விளைவாக பொது மக்களால் கொடுக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் இந்த போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதற்கு பொலிஸ் திணைக்களத்தின் ஊடாக மக்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கட்டளையின்படி யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பிரதான பொலிஸ் பரிசோதகர், உப பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட குழுவினர் இணைந்து நேற்றைய தினம் காலை 9 மணியளவில் கஸ்தூரியார் வீதியில் உள்ள வீடு ஒன்றில் பெருமளவான தடை செய்யப்பட்ட 10 புகையிலை பொதிகளும் மற்றும் கஞ்சா கலப்படம் செய்யப்பட்ட பாக்கு உள்ளடக்கப்பட்ட 12 பெட்டிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

கைது செய்யப்பட்டவருடன் இந்த விற்பனை தொடர்பாக தொடர்பில் இருப்பவர்களை மிக விரைவில் கைது செய்யவுள்ளோம்.

தொடர்ச்சியாக பொதுமக்கள் எமக்கு இவ்வாறான தகவல்களை வழங்கும் பட்சத்தில் யாழ்.மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தி சிறுவர்களையும் பாதுகாக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## வீதிக்கு காப்பெற் இடப்படவில்லை

(சித்தன்கேணி)

காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் சுமார் 22 கிலோமீற்றர் வீதியானது நீண்டகாலமாக காப்பெற் இடப்படாது காணப்படுவதாக பயணிகளால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதில் 786 இலக்க பேருந்து செல்லும் மூளாய் வீதி, 782 இலக்க பேருந்து செல்லும் பொன்னாலை வீதி என்பன இவ்வாறு காப்பெற் இடப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இவ்வீதியானது வட்டுக்கோட்டை, சங்கானை, காரைநகர் ஆகிய ஆதார வைத்தியசாலைகள் மற்றும் மூளாய் சுவட்டுறு வைத்தியசாலை என்பவற்றுக்கு செல்லும் பிரதான வீதியாக காணப்படுகின்றது.

இவ்வீதியூடாக தினமும் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்ற பயணிகள் பேருந்துகள் மற்றும் வைத்தியசாலை அம்புலன்ஸ் என பலரக வாகனங்கள் செல்வதில் மிகுந்த சிரமத்தினை எதிர்நோக்கி வருவதாக வாகன சாரதிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள்கவனத்தில்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பிரதேசங்களில் உள்ள பொதுமக்கள், சாரதிகள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர்.

இவ்வீதியானது ஈழத்துச் சிதம்பரம் செல்லும் பிரதான வீதி என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5-17)

## வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவு நிகழ்வும்

யாழ்ப்பாண பிரதேச கிராம/மாதர் அபிவிருத்திச் சங் கங்களின்சமாச வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவு நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் யாழ்.பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் யூட் ததேயுஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு யாழ். பிரதேச செயலக நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் ஜெனற்டியோணி யஸ்மின் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது.

இதில்தலைவராக ந.தனேந்திரன், உப தலைவராக திருமதி.இரா.புவனேஸ்வரி, செயலாளராக திருமதி. வ.சிரேகா, உபசெயலாளராக திருமதி. வே.ராஜமலா, பொருளாளராக க. தம்பிராசாவும் நிர்வாக சபை உறுப்பினர்களாக அ.யஸ்மின், என்.சாந்தினி, செ.வின்சன், செ.கெலன்திரோ, அ.கருணாற் மு.வொரி, செ.மேரிஅர்சலா, டி.ஜெ.ஜீத்தா, ரி.நிசாகரன் ஆகியோரும் தெரிவாகினர். (இ)




## பற்றைக்காடுகளுக்குள் சமுர்த்தி அலுவலகக் காணி

(கரணவாய்)

பொதுமக்களின் நிதிப் பங்களிப்பில் வாங்கப்பட்ட சமுர்த்தி அலுவலக காணி பற்றைகளால் முடப்பட்டு கவனிப்பாரின்றி காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கரவெட்டி சமுர்த்தி அலுவலகமானது இன்றுவரை வாடகை வீடு ஒன்றில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இதனால் அச் சமுர்த்தி அலுவலகப் பயனாளிகள் இணைந்து சமுர்த்திக் காரியாலயம் ஒன்றை புதிதாக கட்டுவதற்காக காணி ஒன்றினை தமது சொந்த நிதியில் வாங்கி சமுர்த்தி அலுவலரிடம் கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் அன்பளிப்பு செய்துள்ளனர்.

இதையடுத்து அக்காணி



யில் சமுர்த்தி அலுவலகத்தை அமைக்க சமுர்த்தி நிர்வாகம் முன்வந்தது.

சமுர்த்தி அலுவலகம் கட்டுவதற்கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு சமுர்த்தி உத்தியோகத்தர் தலைமையில் அடிக்கல்லும் நாட்டி வைக்கப்பட்டது.

ஆனால் இன்றுவரை 2 வருடங்கள் கடந்துள்ள நிலையில் கட்டடம் கட்டுவதற்கான எந்தவொரு வேலைத்திட்டங்களும் இடம்பெறவில்லை.

இதனால் கொள்வனவு செய்யப்பட்ட காணி பற்றைகளால் மூடி கவனிப்பாரின்றிய நிலையில் காணப்படுகின்றது.

அக்காணியை துப்புரவு செய்யும் நோக்கம் சமுர்த்தி நிர்வாகத்திற்கு இதுவரை காணப்படவில்லை என பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தம்மால் வாங்கிக் கொடுக்கப்பட்ட காணி பற்றைகளால் மூடி இருப்பதை கண்டித்து அச் சமுர்த்திப் பயனாளிகள் கோரிக்கை ஒன்றை கரவெட்டி பிரதேச செ லகத்திற்கு முன்வைத்துள்ளனர்.

அக்கோரிக்கையில் தமது சொந்த நிதியில் வாங்கிக் கொடுக்கப்பட்ட காணியானது துப்புரவு செய்யப்பட்டு சமுர்த்தி அலுவலகம் புதிதாக கட்டப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. (இ-5-60)

## சாரதி அனுமதிப்பத்திரத்திற்காக 70வீதமானவர்களே விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரத்திற்காக 70 வீதமானவர்களே விண்ணப் கின்றார்கள் என யாழ். மாவட்டச் செயலக பிரதான மோட்டார் வாகன போக்குவரத்து அதிகாரி கே.மதிவண்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிப்பவர்களின் தொகை மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டதாக காணப்பட்டது.

ஆனால் தற்போது மாதம் ஒன்றுக்கு 800 விண்ணப்பங்களே கிடைக்கப்பெறுகின்றன.

இந்த வருடம் விண்ணப்பிப்பவர்கள் தொகை சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆனால் இனிவரும் காலங்களில் 800 தொடக்கம் ஆயிரம் வரையான விண்ணப்பங்கள் சாதாரணமாக விண்ணப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர்மேலும் தெரிவித்தார். (இ-9)

## போக்குவரத்திற்கேற்ற தரத்தில் இல்லாத 200 வாகனங்கள் இனங்காணப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இம் மாதம் 200 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் போக்குவரத்துக்கு உகந்ததல்ல என இனங்காணப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டச் செயலக பிரதான மோட்டார் வாகன பரிசோதகர் கே. மதிவண்ணன் தெரவித்துள்ளார்.

யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வாகனங்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கை தொடர்பாக அவரை தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் பரவலாக போக்குவரத்து வாகனங்கள் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

வடமராட்சி, தென்மராட்சி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் இப்பரிசோதனை நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் ஆட்டோக்கள், சிற்றூர்திகள், பேருந்துகள் என்பன பரிசோதனை செய்யப்படுகின்றன.

தொடர்ச்சியாக இப்பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதனால் அனைத்து வாகன உரிமையாளர்களும் தமது வாகனங்களின் தரத்தை பரிசோதனை செய்து திருத்தம் செய்ய வேண்டும்.

இந்த நடவடிக்கையை மோட்டார் வாகன திணைக்களத்தின் பொலிஸாருடன் இணைந்து இரவு வேளைகளிலும் மேற்கொள்ளவுள்ளனர்.

சட்ட நடைமுறைகளை பன்பற்றாதவர்களுக்கு உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## மாகாண மட்ட ஆங்கில தினப் போட்டிகள் இம்முறை சாவகச்சேரியில் நடைபெறும்

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் நடத்திவரும் ஆங்கில தினப் போட்டிகளில் தேசிய ரீதியில் நடத்தப்படும் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் மற்றும் ஓகஸ்ட் முதலாம் திகதியும் நடைபெறவுள்ளன.

இதற்கமைய குழு நிகழ்ச்சிகள் மற்றும் தனிநிகழ்ச்சிகள் என்பன நாளையும் நாளை மறுதினமும் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் சகல வலயங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் பங்கு பற்றவுள்ளனர்.

ஆங்கில எழுத்தாக்கப் போட்டிகள் ஓகஸ்ட் முதலாம் திகதி யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா வடக்கு, தெற்கு மற்றும் துணுக்காய் ஆகிய வலயங்ளுக்குட்பட்ட மாணவர்கள் பங்கு கொள்கின்றனர்.

இதில் யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட வலயங்களின் மாணவர்களுக்கான எழுத்தாக்கப் போட்டிகள் யா/ திருக்குடும்ப கன்னியர் மட மகா வித்தியாலயத்திலும் மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட வலயங்களின் மாணவர்களுக்கான எழுத்தாக்கப் போட்டிகள் மன்/சென். சேவியர் ஆண்கள் கல்லூரியிலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட வலயங்களின் மாணவர்களுக்கான எழுத்தாக்கப் போட்டிகள் கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும் வவுனியா வடக்கு, தெற்கு, துணுக்காய் வலயங்களுக்குட்பட்ட மாணவர்களுக்கான எழுத்தாக்கப் போட்டிகள் வவு/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

இதனைவிட மாகாண மட்டத்திற்கு மட்டும் என வரையறுக்கப்பட்டுள்ள போட்டிகள் யாவும் இவ்வருடம் செப்டெம்பர் மாதத்தில் வடமாகாணக் கல்வித் திணைக்கள மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் அறிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத நிலையில் வீதி

கரவெட்டி மத்தி கவுன் டில் வீதி ஜே/367 கிராம சேவை யாளர் பிரிவிற்குட்பட்ட வீதியா னது 15 வருடமாக திருத்தப்ப டாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. மிகவும் தேச மடைந்த நிலையில் காணப் படுவதால் இதனூடாக போக்கு வரத்தில் ஈடுபடும் குறித்த மக் கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகிறனர்.

அத்துடன் இவ்வீதியால் செல் லும் துவிச்சக்கர வண்டிக ளின் ரயர்கள் விரையில் பழுதடைந்து விடுகின்றன.

இது தொடர்பாக சம்பந்தப்பட் டவர்களுக்கு வாய்மொழி மூலம் கோரிக்கைகளை முன்வைத் தும் எந்தவொரு பயனும் இல்லை என இப்பிரதேச மக் களால்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பாக சம் பந்தப்பட்ட தரப்பினர் உரிய கவனம் செலுத்தி வீதியினை விரைவில் திருத்தி தர நட வடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கி ன்றனர். (இ-5-60)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கட்டப்பிராய் கலைமாணி சனசமூக நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வருடாந்த இல்ல மெய்வல்லு நர் போட்டிகள் விரைவில் நடைபெறவுள்ளன.

எனவே இதில் பங்குபெற விரும்பும் மாணவ, மாணவி கள் மேற்படி சனசமூக நிலை யத்துடன் தொடர்பு கொள் ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறி வித்துள்ளனர். (இ-5-136)


பாராளுமன்றத் தேர்தல் – 2015
யாழ்.மாவட்டம்



5

ந.மதிஅழகராசா (மதி)
வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்
X 5
தமிழர் விடுதலைக் கூட்டணி
வெறும் பேச்சுக்களை நம்புபவன் தமிழன் அல்ல...
(சி-255)



பாராளுமன்ற பொதுத் தேர்தல்–2015
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்



4

காசிப்பிள்ளை குலசேகரம்
B.A. Dip-in Ed, MEd
தமிழர் விடுதலைக் கூட்டணி
X 4
இல்லாமை இல்லாத சமூகத்தை உருவாக்குவோம்
(020)



## தென்னிந்திய யாத்திரை

பாடசாலை விடுமுறையை அனுசரித்து நடைபெறும் யாத்திரை
தமிழ்நாடு, ஆந்திரா,கேரளா,பாண்டிச்சேரி,கர்நாடகா ஊடான யாத்திரை

**நாட்கள் 16 யாத்திரிகர் 10 ஆரம்பம் 10.08.2015**

மலைக்கோட்டை விநாயகர், பஞ்சபூதத்தலங்கள், ஆறுபடை வீடுகள், இராமேஸ்வரம், திருப்பதி, 9 நவக்கிரக ஆலயங்கள், மேல்மருவத்தூர்,பொற்கோவில், மதுரைமீனாட்சி, குருவாயூர், மைசூர் சாமுண்டேஸ்வரி, திருக்கடையூர், கன்னியாகுமரி, ஸ்ரீரெங்கம், பிரம்மாகோவில் உட்பட 65க்கும் அதிக ஆலயங்களை தரிசிக்கலாம்.

*பெற்றுக் கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்:*

(இரு வழி விமான ரிக்கட், மூன்று வேளை உணவு, குடிநீர், தரமான தங்குமிடம், AC வாகன வசதி எயார் போட் போக வர வாகன வசதி, 60 புகைப்படங்கள் மற்றும் ஆலய தரிசனக் கட்டணங்கள் உட்பட) மேல் விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்யவும்.

விபரங்களுக்கு:-
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்
மகன் ஜராஜன்
**0777680102, 0777362154**

(C-1435)


## கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கைநெறி முழுநேரம்
## இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள்-2014/2015

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் 24/08/2015 ஆம் திகதி முதல் 04/09/2015 ஆம் திகதி வரை நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்க்ள் 27/07/2015 ஆம் திகதி முதல் 05/08/2015 ஆம் திகதி வரை கலைப்பீடாதிபதி அலுவலகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்களை கலைப்பீடாதிபதி அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சார்த்திகள் பரீட்சைக்கட்டணத்தினை பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம். பற்றுச்சீட்டை பரீட்சை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**24.07.2015**

(சி-1676)


## கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 34
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: BBA/ அரச தொழில்
தொ.இ: B/942

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 11
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்
தொ.இ: B/943

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 32
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: Dip in physical education/ ஆசிரியர்
தொ.இ: B/954

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 14 உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BBM/ லண்டன் PR
தொ.இ: B/966

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 84 செவ் 1 இல்
தகைமை/தொழில்: A/L/ லண்டன் NOT PR
தொ.இ: G/1726

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 25 செவ் 8 இல்
தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்
தொ.இ: G/1728

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 27 செவ் 8 இல்
உயரம்: 4'8"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/1731

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 38 சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Diploma/ ஆசிரியர்
தொ.இ: G/1734

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)


## இராசி பலன்

28.07.2015
(ஆடி 12, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
துவாதசி முன்னிரவு 9.10 மணிவரை
கேட்டை பிற்பகல் 12.25 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சுபநேரம்-10.32-12.02 மணிவரை
ஆடிச் செவ்வாய் விரதம்,
சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | செவ் |
| | பகல் 12.24 இற்கு தனு-சந் | | சூரி புதன் |
| | | | குரு சுக் |
| | சந் | சனி | ராகு |

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மனதில் இனம் புரியாத மகிழ்ச்சி குடிகொள் ளும், போசன நன்மையுண்டு.

**மேடம்:** மனக்குறைவகன்று மகிழ்ச்சி கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், சேமிப்பை ஈடு கட்டும் எண்ணம் உருவாகும், வீண்பழிகள் மாறும்.

**இடபம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுற்றத்தாரை அனுசரித்து செல்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, பயணங்களின் போது விழிப் புணர்வு அவசியம்.

**மிதுனம்:** விருந்தினர் வருகையால் கலகல ப்பான சூழ்நிலை உருவாகும், நண்பர்களால் ஒரு சில நன் மைகள் நடைபெறலாம், ஆசை ப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்:** வருமானத்தை அதிகரிக்க முற்படு வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், சமயோசிதப் புத்தியால் பல ரையும் கவர்வீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் மகிழ்ச்சி உண்டு.

**கடகம்:** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பழைய கடன்களை அடைக்க புதிய வழி களை கையாள்வீர்கள், கௌர வமான சம்பவங்கள் இடம்பெறும்.

**மகரம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெற லாம், பெரியவர்களின் ஆலோசனை களை கேட்டு நடப்பது நல்லது, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** எண்ணங்கள் எளிதில் நிறைவே றும் நாள், அதிகாரிகள் அனுகூ லமாக நடந்து கொள்வர், சிறப் பான நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**தனுசு:** சிக்கனத்தை கட்டுப்படுத்த முற்படு வீர்கள், திடீர் பயணத்தால் வழ க்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், சிந்தனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், குடும்பத்தி னரின் எண்ணங்களை நிறைவேற் றுவீர்கள்.

**துலாம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**கன்னி:** வம்பு வழக்குகளை சமாளி த்து வளம் பெறுவீர்கள், வழி பாடுகளில் நம்பிக்கை கூடும், குடும்பத்தினர் உங்களின் சொற் களை கேட்டு நடக்க முன்வருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலதினப் போட்டியின் தேசிய மட்டப் போட்டிகள்


(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் கீழ் இயங்கும் பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடைபெறவுள்ள ஆங்கில தினப்போட்டியின் தேசிய மட்டப்போட்டிகள் எதிர்வரும் 29,30 மற்றும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆகிய தினங்களில் நடைபெறும் என வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகளின் குழு நிகழ்ச்சிகள், தனி நிகழ்ச்சிகள் என்பன எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் வடக்கு மாகாண கல்வித்திணைக்களத் தின் கீழுள்ள அனைத்து கல்வி வலயங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு நடைபெறவுள்ளது.

இதேவேளை ஆங்கில எழுத்தாக்கப் போட்டிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டத்திற்குட்பட்ட கல்வி வலயங்களில் உள்ள பாடசாலை மாணவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு யா/திருக்குடும்பக் கன்னியர்மட மகா வித்தியாலயத்திலும் மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட கல்வி வலயங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு மன்/சென். சேவியர் ஆண்கள் கல்லூரியிலும் முல்லைத்தீவு,கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் கல்வி வலயங்களில் உள்ள பாட சாலை மாணவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும் வவுனியா வடக்கு,வவுனியா தெற்கு, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களில் உள்ள பாடசாலை மாணவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வவு/சைவ பிரகாச மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இதேவேளை மாகாண மட்டத்திற்கு மட்டுமென வரையறுக்கப்பட்டுள்ள போட்டிகள் யாவும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# சீரற்ற நீர் விநியோகத்தினால் 23 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு

## விவசாயிகள் கவலை

முல்லைத்தீவு, வவுனிக்குளம் நீர்ப்பாசனக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கைக்கு முறையான விதத்தில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படாமையால் சுமார் 23 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளதாக வவுனிக் குளத்தின் கீழ் சிறுபோக செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

வவுனிக்குளத்தின் கீழ் இம்முறை சுமார் 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் இடதுகரை வாய்க்காலின் முதலாம், 2ஆம் மற்றும் 3ஆம் வாய்க்கால்களை அண்மித்த வயல் நிலங்களில் மேற்கொள்ளப்பட்ட சுமார் 23 ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வவுனிக்குளம் அலுவலகம் தெரிவிக்கையில்,

சிறுபோக செய்கைக்குத் தேவையான போதியளவு நீர் வவுனிக்குளத்தில் இருக்கின்றது. சிறுபோக செய்கை விவசாயிகளுடன் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய நீர் விநியோகம் சீராக மேற்கொள்ளப்பட்டது. இருந்தும் கிளை வாய்க்கால்களுக்கு நீர் விநியோகம் செய்வதற்கு பொறுப்பானவர்களின் தவறால் அல்லது சீரற்ற நீர் விநியோகத்தால் 23 ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினர். (2)




# சுற்றுலா நீதிமன்றம் மீண்டும் ஆரம்பம்

முல்லைத்தீவு மாவட்ட மற்றும் நீதவான் நீதிமன்றத்தின் துணுக்காய் சுற்றுலா நீதிம ன்றத்தின் அமர்வுகள் மீண்டும் கடந்த 8ஆம் திகதியில் இருந்துஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாதத்தின் இரண்டாம் மற்றும் நான்காம் புதன் கிழமைகளில் இந்நீதிமன்ற அமர்வுகள் துணுக்காய் பிரதேச செயலகத்திற்கு அருகிலுள்ள கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

மாங்குளம் மற்றும் மல்லாவி பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட மக்களின் நலன் கருதி கடந்த வருடம் தற்காலிகமாக ஆரம்பிக் கப்பட்ட இந்நீதிமன்றம் மூன்று மாதங்கள் மட்டுமே செயற்பட்டது. (2)

# வன்னித் தொகுதியில் 334 வாக்களிப்பு நிலையங்கள்

## வவுனியா மாவட்ட பிரதித்தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

**நடைபெறவுள்ள 8 ஆவது பாராளுமன்றத் தேர்தலின் போது வன்னித் தேர்தல் தொகுதியில் 334 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் ஏ.ஓ.எம்.நபீல் தெரிவித்துள்ளார்.**

ஊடகவியலாளர்களுக்கான சந்திப்பொன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 705 வாக்காளர்களும் மன்னார் மாவட்டத்தில் 79 ஆயிரத்து 433 வாக்காளர்களும்முல்லைத்தீவுமாவட்டத்தில்63ஆயிரத்து 920 வாக்காளர்களும் இம்முறை வாக் களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்கள் வாக்களிப்பில் ஈடுபடுவதற்காக வவுனியா மாவட்டத்தில் 134 வாக்களிப்பு நிலையங்களும் மன்னார் மாவட்டத்தில் 70 வாக்களிப்பு நிலையங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 130 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

வன்னித்தேர்தல் தொகுதியில் 8 ஆவது பாராளுமன்றத்திற்காக 6 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு 2 இலட்சத்து 53 ஆயிரத்து 58 வாக்காளர்கள் வாக்களிப்பில் ஈடுபடவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' எனும் செயற்றிட்டத்தின் ஊடாக முல்லைத்தீவு பிரதேசத்தில் இருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து தாய் அல்லது தந்தையை இழந்த வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்த 'தேவை உடைய' கல்வி கற்கின்ற 4 பிள்ளைகளுக்கு அவர்களின் கற்றல் காலம் முடியும் வரை ஒவ்வொரு பிள்ளைக்கும் தலா 2 ஆயிரம் ரூபா மாதாந்தம் கல்வி ஊக்குவிப்பு தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது.

# நெடுங்கேணிப்பகுதியில் அரிசியாலை எவ்வித பயனுமின்றி காணப்படுகிறது

(கிளிநொச்சி)

வவுனியா வடக்கு (நெடுங்கேணி) பிர தேச செயலக பிரிவில் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள அரசியாலை எதுவித பயன்பாடுமின்றி காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

87 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இவ்வரிசியாலை வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் பயன்பாட்டில் காணப்படுகின்றது.

எனினும் இவ்வரிசியாலை பல வருடங்களாகப் பயன்பாட்டின்றி காணப்படுவதால் விவசாயிகள் சிரமங்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

நெடுங்கேணி பிரதேசமானது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இடமாகும்.

எனவே இவ்வரிசியாலையை பயன்பாட்டிற்கு விடுவிக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்று வேலைகளில் மு.கா.

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலின்போது அம்பாறை மாவட்ட முஸ்லிம்களை ஏமாற்றி வாக்குவேட்டையாடும் முயற்சியில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஈடுபட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை இம்முறை முஸ்லிம் வாக்குகளைக் குறிவைத்து பல்முனைப் போட்டி நிலவுகின்றது.

கடந்த காலங்களில் சோம்பேறித்தன அரசியலை முன்னெடுத்த இக்கட்சியின் ஒருசிலர், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்படாமை போன்ற விடயங்கள் அக்கட்சிக்கு பாதகமாக அமைந்துள்ளன.

தவிரவும் மூவின மக்களும் செறிவாக வாழும் அம்பாறையில் இன நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் எதுவித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

குறைந்த பட்சமாக முஸ்லிம் காங்கிரஸின் கோட்டையான கல்முனையில் தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்குத் தடையாக இருந்ததைத் தவிர முஸ்லிம் காங்கிரஸ் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க வகையில் எதனையும் சாதிக்கவில்லை.

இதன் காரணமாக முன்னைய காலங்களில் இந்த மாவட்டத்தில் முஸ்லிம்களின் வாக்குகளைப் பெருவாரியாகப் பெற்ற கட்சியான முஸ்லிம் காங்கிரஸின் கட்சியின் வாக்குகளில் கணிசமான வாக்குவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனை ஈடுகட்டுவதற்காக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்கள் தற்போது பல்வேறு வியூகங்களை வகுத்துள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக எதிர்வரும் வாரத்தில் அம்பாறைக்கு விஜயம் செய்யவுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூலம் சாய்ந்தமருதுவுக்கு தனியான பிரதேச சபை அமைத்துத் தரப்படும் என்று வாக்குறுதியளிக்க வைக்கவும் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல்வாதிகள் திட்டம் தீட்டியுள்ளனர்.

இதன் மூலம் அப்பகுதி மக்களின் வாக்குகளை ஏமாற்றிக் கொள்ளையடிக்கும் முயற்சிகளை மேற்கொள்ள இவர்கள் எதிர்பார்த்துள்ளனர். (இ-7)

# தேர்தல்கள் திணைக்களம்

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2015.08.17

வலிமையிழப்பொன்றிற்கு இலக்காகிய வாக்காளரொருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டை அடையாளமிட்டுக் கொள்வதற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்குத் தேவையான சட்ட விதிகளை ஏற்பாடு செய்தல்.

2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 (2)(இ) ஆம் பிரிவிற்கமைய 2015.08.17 ஆம் திகதி நடத்தப்படவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ பார்வைப் பாதிப்பொன்றிற்கு அல்லது வேறேதேனும் உடல் ரீதியான வலிமையிழப்பொன்றிற்கு இலக்கான வாக்காளர் ஒருவருக்கு வாக்களிப்பு நிலையத்தில் வைத்து வாக்குச் சீட்டினை அடையாளமிட்டுக் கொள்வதற்காக உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்லத்தக்கவாறான சட்ட விதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

02. ஆயினும், அவ்வாறு உடனழைத்துச் செல்லும் அவ்வுதவியாளர் 18 வயதைப் பூர்த்தி செய்த ஒருவராக இருக்க வேண்டுமென்பதோடு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவர் அல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். அதே போன்று பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் அரசியற் கட்சியொன்றின் அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவராகவோ அல்லது வாக்களிப்பு நிலையத்தின் முகவரொருவராகவோ செயற்படுகின்றவரல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் ஏதேனும் வலிமையிழப்பொன்றிற்கு உட்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

03. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்காக உரிய சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையினூடாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள தகுதிச் சான்றிதழொன்றை உரிய வாக்களிப்பு நிலையத்தின் அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இத்தகுதிச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை அனைத்து மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலும் மற்றும் கிராம அலுவலர் அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும். பார்வைக் குறைபாடுள்ள அல்லது வேறேதேனும் உடல்ரீதியான வலிமையிழப்பிற்குள்ளாகிய ஒருவர், கிராம அலுவலரிடமிருந்து விண்ணப்பப் படிவமொன்றைப் பெற்று அதனை பூரணப்படுத்தி கொடுத்து கிராம அலுவலரின் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல் வேண்டுமென்பதோடு அதன் பின்னர் அச்சான்றிதழை அரசாங்க வைத்திய அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். வைத்திய அலுவலரினால் வாக்காளர் பரீட்சிக்கப்பட்டு அப்படிவத்தில் வாக்காளரின் தகைமை குறிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படும்.

05. வலிமையிழப்பிற்கு ஆளாகிய வாக்காளர் தனது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை, தேசிய அடையாள அட்டை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஏதேனுமோர் அடையாள அட்டை மற்றும் இத் தகுதிச் சான்றிதழ் என்பவற்றை எடுத்துக்கொண்டு உதவியாளரையும் உடனழைத்துக் கொண்டு வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்லுதல் வேண்டும். வாக்களிப்பு நிலைய பணியாட் குழுவினால் வாக்காளரின் அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து வாக்களிப்பு நிலையத்தின் வழமையான நடைமுறையைப் பின்பற்றி வாக்குச் சீட்டொன்று விநியோகிக்கப்படும் என்பதோடு, அவ்வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாளரோடு வாக்காளர் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் ஆற்றுப்படுத்தப்படுவார். உதவியாளரும் தம்மோடு தேசிய அடையாள அட்டையை அல்லது வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் அடையாள அட்டையொன்றை எடுத்துச் செல்லல் இன்றியமையாததாகும்.

06. வாக்களிப்பு நிலையத்தில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரினால் வாக்காளரின் தகுதிச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படும் என்பதோடு அழைத்து வருகின்ற ஆளிடமிருந்து தகுதிச் சான்றிதழின் II ஆம் பகுதியில் காட்டப்பட்ட உரிய வெளிப்படுத்துகை பெறப்படும். அதைத் தொடர்ந்து வாக்களிப்பு பணியாட் குழுவினர் ஒருவரோடு வாக்காளரும் உதவியாளரும் வாக்களிப்புச் சிற்றறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் பணியாட் குழுவின் அங்கத்தினர் ஒருவர் ஆகியோர் முன்னிலையில் வாக்குச்சீட்டு அடையாளமிடப்பட்டு வாக்குப்பெட்டிக்குள் இடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்

07. மேற்குறித்த தகுதிச் சான்றிதழொன்று இல்லாமல் வாக்களிப்பு நிலையத்திற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்ல முடியாது என்பது வலியுறுத்தப்படுகின்றது. வாக்கு அடையாளமிட்டதன் பின்னர் உரிய தகுதிச் சான்றிதழை சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் தன்வசம் வைத்துக் கொள்வார்.

08. எவ்வாறாயினும் உதவியாளர் ஒருவரோடு வருவதற்கு இயலாத வாக்காளரொருவருக்குத் தேவைப்படின், இதற்கு முந்திய வாக்கெடுப்புக்களில் போன்றே வாக்கெடுப்பு நிலைய அலுவலர் ஒருவரின் முன்னிலையில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரூடாக தனது வாக்குச் சீட்டினை அடையாளமிட்டுக் கொள்ள அவகாசமுள்ளதென்பது அறிவிக்கப்படுகின்றது.

தேல்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2015.07.28

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்.

## வலிமையிழப்பிற்கு உட்பட்ட ஆளொருவருக்கு வாக்களிப்பதற்கென 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் நியதிகளின் படி (பிரிவு 40 (2) (இ) ) வழங்கப்படும் தகுதிச்சான்றிதழ்.

### பாகம் I

### விண்ணப்பதாரரின் / வாக்காளரின் வெளிப்படுத்துகை

முழுப்பெயர் :- ....................................................
முகவரி :- ....................................................
தொழில் :- ....................................................
பிறந்த திகதி :- ....................................................
தே.அ.அ / சாரதி அனுமதிப்பத்திரம் / கடவுச் சீட்டு இல:- ....,........................
திகதி :....................வாக்காளரின் பெயர் :-..................................
கையொப்பம் :- ....................................................
....................................................என்னும் முகவரியைச் சேர்ந்த
.............................................. ஆகிய நான் ..............................
மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர் ஒருவராகவிருந்து வலிமையிழப்பிற்கு உட்பட்டவராக இருக்கின்றமையால், மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் செவ்வையானவையுமாகும் என வெளிப்படுத்துவதுடன் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல்களுக்கான சட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வலிமையிழப்பிற்குட்பட்ட ஆளொருவராக வாக்களிப்பதற்கு என்னை உரித்துடையவராக்கும் தகுதிச் சான்றிதழொன்றின் வழங்கீட்டிற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

### கிராம அலுவலரின் சான்றிதழ்

மேலே தரப்பட்டுள்ள விபரம் சரியானதெனவும், ..................................
(விண்ணப்பதாரரின் / வாக்காளரின் பெயர்) என்பவரின் விண்ணப்பம் தொடர்பில் பின்வரும் தகவல்கள் என்னால் பேணப்படும் பதிவேடுகளுக்கிணங்க சரியானதெனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பெயர்:- ....................................................
வாக்காளர் நிரலிலுள்ள இல:- ....................................................
தேர்தல் மாவட்டம்:-....................................................
மாவட்டம் :- ....................................................
வாக்கெடுப்பு மாவட்டம் :- ....................................................
இயைபான வேறு தகவல்கள் :- ....................................................
திகதி:- ....................................................

கிராம அலுவலரின் கையொப்பம் :-..................................
கிராம அலுவலரின் பெயர்:- ..................................
பிரிவு :- ..................................
இலச்சினை:- ..................................

### பாகம் II

### அரசாங்க மருத்துவ அலுவலரின் சான்றிதழ்

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலின் போது வலிமையிழப்பிற்கு உட்பட்ட ஆளொருவராக வாக்களிப்பதற்கு உரித்துடையவராவதற்கென விண்ணப்பித்துள்ள ..................................என்ற முகவரியைச் சேர்ந்த .............................. என்பவரை நான் நேரடியாகப் பரிசோதனை செய்துள்ளேன் என்பதுடன் .............................. (வாக்காளரின் /விண்ணப்பதாரியின் பெயர்) சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வலிமையிழப்பிற்கு உட்பட்ட ஆள் ஒருவராக வாக்களிப்பதற்கு உரித்துடையவராவர் / உரித்துடையவராகமாட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

திகதி:- ....................................................
அரசாங்க மருத்துவ அலுவலரின் பெயர் :- ..................................
அரசாங்க மருத்துவ அலுவலரின் கையொப்பம்:-..................................
இலச்சினை :- ....................................................
(A)

### அலுவலக உபயோகத்திற்கு

சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் இந்தப் பகுதியை பூர்த்தி செய்துகொள்ளல் வேண்டும்.

உடன் செல்லும் ஆளின் பெயர் :- ..................................
தேசிய அடையாள அட்டை இல :- ..................................
வதிவு முகவரி :- ..................................

வலிமையிழப்பிற்குள்ளாகியிருக்கும் மேலே I ஆம் பகுதியில் பெயர் காணப்படும் வாக்காளர் சார்பாக வாக்கை அடையாளமிடுவதற்காக வந்த நான் இந்த தேர்தலின் வேட்பாளரொருவரோ/ அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவரோ/ வாக்கெடுப்பு நிலைய முகவரொருவரோ அல்லது வாக்கெடுப்பு நிலைய பணிக்குழு அங்கத்தவரொருவரோ அல்லரெனவும் ஏதேனும் வலிமையிழப்பிற்குள்ளான ஆளொருவர் அல்லரெனவும் வெளிப்படுத்துகின்றேன்.

..................................
உடன் செல்லும் ஆளின் பெயர்
பெயர் :- ..............................

சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரின் கையொப்பம் :..............................
பெயர்:- ....................................................
வாக்கெடுப்பு நிலையம் :- ....................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அன்பு இருந்தால்...

சில தினங்களாக கண்ணனின் மனதில் மகிழ்ச்சி நிரம்பியிருந்தது. அதற்குக் காரணம் அவனுக்காக வீட்டில் ஒரு தனி அறையைக் கட்டித்தரப் போவதாக அவனுடைய அப்பா சொல்லியிருந்தார.

கண்ணனின் வீடு சிறிய ஓட்டு வீடுதான். அடுக்களையைத் தவிர ஒரேயொரு அறைதான் இருந்தது. ஆனாலும் வீட்டைச் சுற்றி சிறிய தோட்டம் இருந்தது. தோட்ட த்தில் ஒரு வேப்பமரம், ஒரு மாமரம் மற்றும் இரண்டு தென்னை மரங்கள் இருந்தன. கூடவே கண்ணனின் அம்மா தோட்டத்தில் சின்னஞ்சிறிய பூச்செடிகளும் நட்டு வளர்த்திருந்தனர். நிழல் படர்ந்து இருக்கும் அத்தோட்டத்தில் எப்போதும் குருவிகளும் வேறு சில பறவைகளும் கூடு கட்டி வசித்தன. அவை காலை வேளையில் இனிமையாக சத்தமிட்டுக் கொண்டிருக்கும்.

ஏழாம் வகுப்பு படிக்கும் கண்ணனும் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் அவனுடைய அக்கா வித்யாவும் ஒரே அறையில் அமர்ந்து படிப்பார்கள். வித்யா சாதுதான். ஆனால் கண்ணன் எப்போதும் தன் அக்காவுடன் வம்பு செய்வான்.

அக்காவைக் கேட்காமல் அவளுடைய பேனாவை எடுத்துக்கொள்வான். பென்சிலை எடுத்து ஒளித்து வைப்பான். தம்பியின் மீது பாசம் இருந்தாலும் சிலநேரம் கண்ணனின் குறும்பு எல்லை மீறும்போது அவனைக் கண்டிப்பாள். கண்ணனும் அக்கா வித்யாவுடன் சரிசமமாக சண்டை பிடிப்பான்.

சில தினங்களுக்கு முன்பு கண்ணன் வித்யாவின் கணக்கு நோட்டுப் புத்தகத்தில் ஏதோ கிறுக்கி வைத்துவிட அவள் கண்ணனை லேசாக அடித்துவிட்டாள். கண்ணன் பதிலுக்கு அவளை அடிக்கப்போக அவன் அப்பாதான் வந்து தடுத்தார்.

கூடவே அவர்களிடம் "நீங்கள் ஒரே அறையில் அமர்ந்து படித்தால் இப்படித்தான் சண்டை போட்டுக் கொண்டிருப்பீர்கள். இனி நம் தோட்டத்திலிருக்கும் சிறிய இடத்தில் நம் வீட்டோடு சேர்த்து ஓர் அறை கட்டிவிடலாம். கண்ணன் இனி அங்கே இருந்து படிக்கட்டும்!" என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார்.



அப்பா சொன்னதைக் கேட்டதும் கண்ணனுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது! "கூடிய சீக்கிரம் எனக்கே எனக்கென்று ஒரு தனி அறை கிடைக்கப்போகிறது. என் அறையில் என் புத்தகங்கள், உடைகள் உட்பட எல்லாவற்றையும் வைத்துக் கொள்வேன். அறைக்குள் யாரையும் நுழைய அனுமதிக்கமாட்டேன்." என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான் அவன்.

புதிதாக அறை கட்டப்போவதாகச் சொன்ன இடத்தில்தான் வேப்பமரம் இருந்தது. வேப்ப மரத்தை வெட்டிவிட்டு அந்த இடத்தில்தான் அறைகட்ட வேண்டும். ஆனால் கண்ணன் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. எப்படியோ தனக்கென்று ஒரு அறை கிடைக்கப்போகிறது என்ற மகிழ்ச்சி மட்டுமே அவனுக்குள் இருந்தது.

அன்று விடுமுறை நாள் என்பதால் கண்ணன் தன் நண்பன் வீட்டிற்குப் புறப்பட்டான்.

ஐந்து ஆண்டுகள் பிரசாத்துடன் நட்பு இருந்தது. பிரசாத்தின் வீட்டருகில் கண்ணனின் வயதையொத்த பல சிறுவர்கள் உண்டு. அவர்களின் வீடுகளுக்கும் பிரசாத் கண்ணனை அழைத்துச் செல்வான்.

அவர்கள் அனைவரும் அருகிலிருந்த மைதானத்தில் கிரிக்கெட் விளையாடுவார்கள். அவர்களில் பலர் வீட்டில் நிறைய விளையாட்டுப்பொருட்கள் உண்டு. பிரசாத் வீட்டிற்குச் சென்றால் போதும். பிறகு நேரம் போவதே தெரியாமல் கண்ணன் விளையாடிக் கொண்டிருப்பான்.

பிரசாத்தின் வீட்டை நோக்கி நடந்து செல்லும் போதே தனக்காக வீட்டில் தனி அறை ஒன்று கட்டப் படவிருப்பதை பிரசாத்திடம் சொல்ல வேண்டும்.

கூடவே அவன் வீட்டின் அருகிலுள்ள நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு கிரிக்கெட் விளையாட வேண்டும் என்பதான பல எண்ணங்கள் கண்ணனின் மனதிற்குள் ஓடிக் கொண்டிருந்தன.

சுமார் அரை கிலோ மீட்டர் தூரத்திலிருந்த பிரசாத்தின் வீட்டிற்குச் சென்று பார்த்தான் கண்ணன். வீடு பூட்டியிருந்தது.

"பிரசாத் எங்கே போயிருப்பான்? ஒரு வேளை ஊருக்கு எங்கேயாவது போயிருப்பானோ? அப்படி ஏதேனும் இருந்தால் என்னிடம் சொல்லியிருப்பானே?" என்று நினைத்த கண்ணன், பக்கத்தில் இருந்த வீட்டில் போய் விசாரித்தான்.

"நீ, யாரப்பா? பிரசாத்தோட நண்பனா? பிரசாத்தோட குடும்பம் நேற்றே வீடு மாறி போயிட்டாங்களே..., உங்கிட்டே சொல்லலியா?" என்றாள் பக்கத்துவீட்டு அம்மா.

"தெரியாதே ஆன்டி! சரி..., இப்போ அவங்க வீடு எங்கே இருக்குது?" என்று கேட்டான் கண்ணன்.

"முகவரி கொடுத்துட்டு போயிருக்காங்க! இங்கிருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரம் இருக்கும். பக்கத்துல வேற வீடு எதுவும் கிடைக்கலியாம். அதனாலதான் அங்கே மாறிப் போயிட்டாங்களாம். இரு..., அட்ரஸ் எழுதித் தரேன்." என்ற பக்கத்துவீட்டு அம்மா ஒரு துண்டு காகிதத்தில் பிரசாத்தின் புதிய வீட்டு முகவரியை எழுதி கண்ணனிடம் கொடுத்தார்.

பிரசாத்தின் முகவரி கிடைத்துவிட்டாலும் கண்ணனால் உடனேயே பிரசாத்தைப் போய்ப் பார்க்க முடியவில்லை. ஐந்து கிலோ மீட்டர் அவனால் எப்படி நடந்து செல்ல முடியும்? அவன் பேசாமல் தன் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான். ஆனாலும் வழியெங்கும் அவன் மனதில் பல சிந்தனைகள் ஓடின.

"பிரசாத் வீடு மாறிச் சென்றுவிட்டான். இனி எப்படி அடிக்கடி பிரசாத் வீட்டிற்குச் செல்ல முடியும்? பிரசாத்தோடும் அவனுடைய நண்பர்களோடும் எப்படி விளையாட முடியும்?" என்றெல்லாம் யோசித்துக் கொண்டே வந்த கண்ணனுக்குள் திடீரென்று அந்தச் சிந்தனை வந்தது.

"பிரசாத் வீடு மாறிச் சென்றதால் எனக்கு இவ்வளவு வருத்தம் தோன்றுகிறதே..., அதுபோலத்தான் என் வீட்டிலுள்ள வேப்ப மரமும் இருக்கிறது. அந்த வேபப மரத்தில் எத்தனை குருவிகள், அணில்கள், காகங்கள் வசிக்கின்றன. விளையாடுகின்றன.

அந்தப் பறவைகளுக்கு வேப்பமரம் ஒரு நல்ல நண்பன்தானே? நாளை எனக்காக அறை கட்ட வேண்டும் என்று அந்த வேப்ப மரத்தை வெட்டிவிட்டால் அந்தப் பறவைகள் எங்கே போகும்? அவையும் தன் நண்பனைக் காணாமல் என்னைப்போல் துன்பப்படும் அல்லவா?

ஒரு வேப்ப மரத்தில் விதவிதமான பறவைகள் வசிக்கும்போது ஓர் அறையில் நானும் அக்காவும் ஏன் ஒன்றாக அமர்ந்து படிக்கக்கூடாது? நான் அக்காவுடன் அடிக்கடி சண்டை போடுவதால்தானே அப்பா அந்த வேப்பமரத்தை வெட்டிவிட்டு எனக்காக அறை கட்ட வேண்டும் என்று தீர்மானித்தார்?" என்று சிந்தித்துக்கொண்டே வந்த கண்ணனுக்கு தன் தவறு புரிந்தது. அவன் மனதில் பெரிய மாற்றம் நிகழ்ந்தது.

அவன் தன் வீட்டிற்கு வந்ததும் அப்பாவிடம், "அப்பா! நான் இனி அக்காவுடன் சண்டை போட மாட்டேன். அவளுடன் எந்த வம்புக்கும் செல்ல மாட்டேன். நாங்கள் இருவரும் ஓர் அறையிலேயே அமைதியாக படிப்போம்! எனக்கான அறை கட்டுவதற்காக வேப்பமரத்தை வெட்ட வேண்டாம்!" என்று தழுதழுத்த குரலில் சொன்னான்.

காரணத்தை அறிந்து கொண்ட அவனுடைய அப்பா, "வேப்பமரத்தை வெட்ட வேண்டாம்..., நீயும் அக்காவும் ஒரே அறையில் படியுங்கள். உன் நண்பன் பிரசாத்துக்கு இப்பகுதியிலேயே ஒரு நல்ல வீடாகப் பார்த்துக் கொடுப்போம்!" என்றார்.

கண்ணனின் மனதில் அமைதியும் மகிழ்ச்சியும் தோன்றின.





- 1493 - மாஸ்கோவில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது.
- 1540 - இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியின் ஆணைப்படி தோமஸ் குரொம்வெல் நாட்டுத் துரோகக் குற்றஞ்சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டார். அதே நாளில் ஹென்றி தனது ஐந்தாவது மனைவி கத்தரீனை மணந்தான்.
- 1586 - முதற்தடவையாக உருளைக் கிழங்கு பிரித்தானியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டது.
- 1609 - பெர்முடாவில் ஆங்கிலேயர்கள் குடியேறினர்.
- 1794 - பிரெஞ்சுப் புரட்சி: மாக்சிமிலியன் ரோப்ஸ்பியர் தலை துண்டிக்கப்பட்டு மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டான்.
- 1821 - பெரு ஸ்பெயினிடமிருந்து விடுதலை பெற்றது.
- 1914 - முதலாம் உலகப் போர் ஆரம்பமானது. சேர்பியா மீது ஆஸ்திரியா-ஹங்கேரி போர் தொடுத்தன.
- 1915 - ஐக்கிய அமெரிக்காவின் ஹெயிட்டி முற்றுகை ஆரம்பமானது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் ஹாம்பூர்க் நகர் மீது பிரித்தானியா குண்டுத் தாக்குதல் மேற்கொண்டதில் 42,000 ஜேர்மனியர்கள் கொல்லப்பட்டனர்.
- 1945 - அமெரிக்க போர் விமானம் ஒன்று எம்பயர் ஸ்டேட் கட்டிடத்தின் 79 ஆம் மாடியில் தவறுதலாக மோதியதில் 14 பேர் கொல்லப்பட்டனர்.
- 1957 - ஜப்பானின் இசகாயா என்ற இடத்தில் மழை, மற்றும் மண்சரிவு காரணமாக 992 பேர் கொல்லப்பட்டனர்.
- 1965 - வியட்நாம் போர்: தெற்கு வியட்நாமில் அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கையை 75,000 இலிருந்து 125,000 ஆக அதிகரிக்கப்படும் என அமெரிக்க அதிபர் லின்டன் ஜோன்சன் அறிவித்தார்.
- 1976 - சீனாவில் டங்ஷான் நகரில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 242,769 பேர் கொல்லப்பட்டனர். 164,851 பேர் காயமடைந்தனர்.
- 1996 - வோஷிங்டனில் கென்னவிக் என்ற இடத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 2005 - ஐரியக் குடியரசு இராணுவம் தனது 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தை முடிவுக் கொண்டு வருவதாக அறிவித்தது.
- 2005 - இங்கிலாந்து, பேர்மிங்காம் நகரைச் சூறாவளி தாக்கியதில் +4,000,000 பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்தன. 39 பேர் காயமடைந்தனர்.
- 2006 - ஈழப்போர்: வாகரையில் இலங்கைப் போர் விமானங்கள் தாக்கியதில் பலர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1936 - சோபர்ஸ், மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் துடுப்பாளர்
- 1951 - சந்தியாகோ கலத்ராவா, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கட்டிடக்கலைஞர்
- 1954 - குகொ சவெஸ், வெனிசுவேலா ஜனாதிபதி
- 1977 - மனு ஜினோபிலி, ஆர்ஜெண்டீனிய கூடைப்பந்து ஆட்டக்காரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிலடி கொடுக்குமா இந்தியா?



ஒருபுறம் சமாதான பேச்சு-., கைகுலுக்கல், மறுபுறம் எல்லையில் துப்பாக்கியால் சுடும் பாகிஸ்தானுக்கு, இந்தியா சரியான பதிலடி கொடுக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

ரஷியாவில் நடந்த பிரிக்ஸ் மாநாட்டின் போது, இந்திய பிரதமர் நரந்திர மோடியும், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும், நீண்ட இடைவெளிக்கு பிறகு சந்தித்து பேசினார்கள். அப்போது இருவரும், பத்திரிகையாளர்களுக்கு முன் கைகுலுக்கி, இருவரும் ஒருமித்த கருத்தை கொண்டிருப்பதை உறுதிப்படுத்தினார்கள்.

இரு தலைவர்களும் சந்தித்தபோது, "நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்தியா-பாகிஸ்தான் அதிகாரிகள் மட்ட பேச்சுவார்த்தையை தொடருவது" என்று முடிவு செய்தனர். இந்த சந்திப்பின் போது, இருவரும் கூட்டாக அறிக்கை வெளியிட்ட போதும், ஒருமித்த சமாதான கருத்தை வலியுறுத்தி இருந்தனர்.

இரு நாட்டு தலைவர்களின் சந்திப்பைத் தொடர்ந்து.. இருநாட்டு இராணுவ அதிகாரிகள்மட்ட பேச்சுவார்த்தை செப். 9 ஆம் திகதி நடக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நரேந்திர மோடியும், நவாஸ் செரீப்பும் சந்தித்த அதே நாளில், இந்திய எல்லைக்குள் பாகிஸ்தான் இராணுவத்தினர் துப்பாக்கியால் சுடும் சம்பவங்களும் நடக்க தொடங்கின. இந்த அத்துமீறல், தொடர்ந்து 7 நாட்களுக்கு நீடித்துள்ளது. கடந்த 2003 ஆம் ஆண்டு இரு நாடுகள் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்படி "எல்லை கட்டுப்பாட்டு கோடு" என்ற எல்லையும் வரையறுக்கப்பட்டது. இந்த எல்லை கட்டுப்பாடு கோட்டின் பாகிஸ்தான் பகுதியில் பாகிஸ்தான் இராணுவமும், இந்திய பகுதியில் இந்திய இராணுவமும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றன. இதில் அடிக்கடி இந்திய இராணுவ முகாம்கள் மீது, பாகிஸ்தான் இராணுவத்தினர் துப்பாக்கியால் சுடும் சம்பவங்கள் நடந்து வருகின்றன. இப்படிப்பட்ட நிலையில், கடந்த 15 ஆம திகதி கானாசாக், அக்னூர் ஆகிய பகுதிகளில் பாகிஸ்தான் இராணுவத்தினர், இந்திய எல்லையிலுள்ள கிராமங்கள் மீது துப்பாக்கியால் சுட்டனர். இதில் பொலி தேவி என்ற பெண் பரிதாபமாக இறந்தாள். மேலும் இந்திய பாதுகாப்பு படையினர் 6 பேர் காயம் அடைந்துள்ளனர்.


காஷ்மீரில் ஆர்.எஸ்.புரா பகுதியிலும் பாகிஸ்தான் இராணுவத்தினர் 5 எல்லைப்புற இந்திய இராணுவ முகாம்கள் மீது பீரங்கி தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த சம்பவத்தில் கிராமப்புற மக்கள் 5 பேர் காயம் அடைந்துள்ளனர். இதுபோல பூஞ்ச் பகுதியிலுள்ள ஷாபூர் கெர்னி எல்லை கட்டுப்பாடு கோடு பகுதியிலும், இந்திய இராணுவ நிலைகள் மீதும், இந்திய கிராமங்கள் மீதும், பாகிஸ்தான் இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இதில் கிராம மக்கள் 7 பேர் காயம் அடைந்துள்ளனர். இதனால், எல்லைப்புறத்திலுள்ள கிராம மக்கள் பாதுகாப்பான இடத்துக்கு செல்லுமாறு, இந்திய இராணுவத்தினர் அறிவுறுத்தியுள்ளனர். மொத்தத்தில் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் 3 பேர் உயிர் இழந்துள்ளனர், 15 பேர் வரை காயம் அடைந்துள்ளனர். மேலும் ரம்சான் திருநாளை முன்னிட்டு, இந்திய இராணுவ வீரர்கள் வழங்கிய இனிப்பு பார்சல்களை வாங்கவும், பாகிஸ்தான் இராணுவத்தினர் மறுத்து விட்டனர்.

பாகிஸ்தான் இராணுவத்தினர், இந்திய எல்லைக்குள் துப்பாக்கியால் சுட்டு இந்திய இராணுவத்தினரின் கவனத்தை திருப்பும் அதே நேரத்தில், இந்திய எல்லைக்குள் தீவிரவாதிகளை அனுப்பும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர். ஆனால், இந்த முயற்சியை, இந்திய இராணுவ வீரர்கள் தடுத்துவிட்டனர். இதற்கிடையில், பாகிஸ்தானின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் "ஆக்கிரமிப்பு காஷ்மீர்" பகுதியில் இந்தியாவின் ஆள் இல்லாத உளவு விமானம் பறந்ததாகவும், அதனை பாகிஸ்தான் இராணுவத்தினர் சுட்டு வீழ்த்திவிட்டதாகவும், பாகிஸ்தான் கூறியிருப்பதுடன், அது தொடர்பாக ஒரு படத்தையும் வெளியிட்டுள்ளது. இது பற்றி இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஜெய்சங்கர், கூறுகையில் "அந்த ஆள இல்லா விமான சிதைவுகளை பார்த்தால், அது சீன தயாரிப்பு போல் தெரிகிறது. அதுபோன்ற ஆள் இல்லா விமானத்தை, பாகிஸ்தான் தான் பயன்படுத்தி வருகிறது. தனது சொந்த விமானத்தையே, பாகிஸ்தான் சுட்டு வீழ்த்தியுள்ளதா? என்ற கேள்வி எழுகிறது. அது, நமமுடையது அல்ல., நாம் "நேத்ரா" ரக உளவு விமானத்தைதான் பயன்படுத்தி வருகிறோம்" என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்த நிலையில், பாகிஸ்தான் அத்து மீறல் பற்றி உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், இராணுவ அமைச்சர் மனோகர் பாரிக்கர், வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் குமார் தோவல், வெளியுறவு செயலாளர் ஜெய்சங்கர் ஆகியோர்அவசர ஆலோசனை நடத்தினார்கள். இதனை தொடர்ந்து, டெல்லியிலுள்ள பாகிஸ்தான் தூதரை அழைத்து, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளது. அதுபோல் இஸ்லாமாபாத்திலுள்ள இந்திய தூதரை அழைத்து, பாகிஸ்தான் தனது கண்டனத்தை பதிவு செய்திருக்கிறது.

மொத்தத்தில், இந்தியா-பாகிஸ்தான் இடையே அமைதி ஏற்பட வேண்டுமானால், காஷ்மீர் மாநிலத்தை தனி நாடாக அறிவிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் முயன்று வருகிறது. அதே நேரத்தில், இந்தியாவுக்கு உரிமையுள்ள "ஆக்கிரமிப்பு காஷ்மீரை இந்தியாவுக்கு விட்டுக்கொடுக்க பாகிஸ்தான் தயாராக இல்லை. இப்படியாக காஷ்மீரை துண்டாட பாகிஸ்தான் விரும்புகிறது., இதனை இந்தியா எந்த சூழ்நிலையிலும் ஏற்காது என்பதை பாகிஸ்தான் உணர வேண்டும். அவ்வாறு உணர வைக்க, என்ன பதிலடி கொடுக்கப்போகிறது, இந்தியா? என்ற கேள்வி ஒவ்வொரு இந்தியனின் உள்ளத்திலும் எழும் அதே நேரத்தில், "இந்தியா-பாகிஸ்தான் எல்லை பிரச்சினை பற்றிய நிலைமையை, நாங்கள் உன்னிப்பாக கவனித்து வருகிறோம்" என்று, அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ஜான் கெர்பி தெரிவித்துள்ளார்.

-இணையம்-






**வைரமுத்து-198**

...கண்ணுக்குக் கீழயிருந்த கருவளையத்த ஆள்காட்டி விரல்ல அழுந்த நீவிவிட்டா.

ரொம்ப நாளாச்சு குங்குமம் வச்சு; மறந்துகூடப் போச்சு. காடா வெளக்கத் தூண்டிவிட்டுக் குங்கும டப்பியத் தேடுனா. ஒறஞ்சுபோன ஆட்டு ரத்தம் மாதிரி கருஞ்செவப்பா இத்துனூண்டு இருந்துச்சு குங்குமம்; எடுத்து இழுகிக்கிட்டா.

நடந்துட்டா.

முப்பத்தேழு வருசத்துக்கப்புறம் வாக்கப்பட்ட வீடு தேடி எட்டுவச்சுப் போறா.

வள்வளன்னு ஒரு பட்டினக்கத்துக் கத்தி அடங்கிருச்சு சொகமில்லாத ஒரு சொறிநாயி.

எலையில்லாத மரத்துல உய் உய்ன்னு அடிக்குது ஊதக்காத்து.

தேசாந்தரம் போயிருந்த மேகங்க எல்லாம் வந்து குமியுதுக மந்தை மந்தையா.

இன்னைக்கு என்னமோ நடக்கப் போகுது இந்த பூமியிலன்னு மேகச் சந்து வழி உத்து உத்துப் பாக்குது ஓரம் தேஞ்சு ஒச்சமாகிப்போன உச்சி நெலா.



ஒஞ்சதடியாத்தா ஒங்கதை.... ஓடிப் போன்னு எந்த வீடு வீதியில் தள்ளி வெளியேத்துச்சோ அதே வீடு தேடி முப்பத்தேழு வருசத்துக்கு அப்பறம் நடுங்குற காலோட நடந்து போறாய்யா கருவாச்சி.

பக் பக்குது மனசு. நெஞ்சாங்கூ[illegible]டுக்கும் தொண்டைக் குழிக்குமா தார் போட்ட மாதிரி கெட்டியா என்னமோ கட்டி நிக்குது.

போகலாமா? வேணாமா?

இது நல்லதுக்கா? கெட்டதுக்கா?

பாப்பம்.

நல்லெண்ணத் தோடதான் நான் போறேன்; அப்பறம் விதிவிட்ட வழி.

தொட்டா விரல்ல ஒட்டிக்கிர்ற [illegible] ராத்திரி. ஆள் இல்ல; அரவமில்ல. வெறிச் சோன்னு கெடக்கு வீதி. வெதச்ச வெதையெல்லாம் மொளைச்சமாதிரி வெற்றி புத்துக் கெடக்கு ஆகாயம். தும்பறுத்த கன்னுக்குட்டிக மாதிரி அதுகபாட்டுக்கு அலையுதுக மேகங்க.

தன்ன யாராச்சும் பாக்குறாகளான்னு சுத்தியும் முத்தியும் பாத்தா; ஒரு நாதி இல்ல. கண்ணு முழிச்சிருந்தா கடவுள் தான் பாக்கணும்.

நெஞ்சுல வைராக்கியம் கட்டி நிக்குது; கண்ணுல கண்ணீரு முட்டி நிக்குது. வந்து நிக்கிறா கட்டையன் வீட்டு வாசல்ல. அவ வாக்கப்பட்ட வீடு; இத்துனூண்டு வாழ்ந்த வீடு; அவ கன்னி கழிஞ்ச வீடு; அவ கர்ப் பத்துக்குள்ள காறித் துப்புன வீடு. கண்ணும் மூக்கும் போன மண் மொம்மை மாதிரி இன்னைக்குக் கண்றாவியா நிக்கிற வீடு. தலவாசக்கதவு வரைக் கும் வந்து தடுமாறி நிக்கிறா கரு வாச்சி.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வியூகம்

## ஏமாற்றும் அரசியல் கலாசாரம் இருக்கும்வரை தமிழ்ச் சமூகம் விமோசனம் அடைய முடியாது

### கணேஷ்வரன் தெரிவிப்பு



குடாநாட்டில் பிறந்தோம் என்ற குற்றத்திற்காக முடிந்த யுத்தத்தின் காரணத்தினால் சிறுபராயம் முதல் ஒரு பக்கம் வறுமையின் கோரப்பிடியிலும் மறுபக்கம் கல்வி மீதான தாகத்திலும் துன்பங்களோடு போராடிக் கொண்டிருககின்றோம். நோயுற்றுள்ள ஒருவரை வைத்தியசாலைக்கு எடுத்துச சென்று அந்த நோயைக் குணப்படுத்த பணவசதி இல்லாமல் உயிரையே மாய்த்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு உள்ளாகி எத்தனையோ தாங்கமுடியாத துன்பங்களுடன் எமது குடா நாட்டு மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையை இங்கு எவரும் கவனத்தில் கொள்வதில்லை. தேர்தல் காலம் மட்டும் வந்தால் அது வேண்டும். இது வேணடும் அது செய்வோம் இது செய்வோம் என்ற உணர்ச்சி வகையிலான பரப்புரைகளைச் செய்து பொது மக்களை ஏமாற்றி வருகின்றார்கள். இவ்வாறு ஏமாற்றும் அரசியல் கலாசாரம் இருக்கும் வரைக்கும் எமது தமிழ் சமூகம் ஒரு போதும் விமோசனத்தை கண்டு கொள்ள முடியாது. இந்த நிலையிலிருந்து விடுபடுதல் வேண்டும் என்று ஆறாம் சுயேட்சைக் குழுவின் கேடயம் சின்னத்தில் போட்டியிடும முதன்மை வேட்பாளர் வே. கணேஷ்வரன் தெரிவித்தார்.

பொதுத் தேர்தலில் கற்கோவளம் ஆதவன் முன்பள்ளியில் ஆறாம் இலக்கச் சுயேட்சையில் கேடயம் சின்னத்தில் போட்டியிடும் முதனமை வேட்பாளர் வே.கணேஷ்வரன் பருத்தித்துறையில் மகளிர் மத்தியில் தம்முடைய தேர்தல் பிரசாரத்தின் போது அவர் இவ்வாறு இதனைத் தெரிவித்தார்.


அவர் தொடர்ந்து பேசுகையில்,

எதுவானாலும் நாங்கள் எல்லோரும் மனிதர்கள். ஒரு சாரார் கடுமையான துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பதை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எமது பகுதிகளிலுள்ள நலன் புரி முகாம்களில் வாழும் மக்கள் எவ்வகையான துன்ப ங்களை அனுபவித்துக் கொ ண்டிருக்கின்றார்கள் என்பதை நேரில் சென்று பார்த்தால் நன்கு தெரியும். உடலை மறைப்பதற்கு ஓங்கான ஆடைகள் இருக்காது. இருப்பதை மீணடும் மீண்டும் கந்தை யாலும் கசக்கிக் கட்டு என்ற வாய்மொழிக்கு ஏற்ப இருக்கும் ஓர் ஆடையை திரும்பத் திரும்ப போட்டு தங்களை அழகு படுத்திக் கொண்டி ருக்கிறாரகள். ஆனாலும் நாங்கள் பன்சனுக்கு ஒரு ஆடையும் ஒரு காரும் என ஆடம்பரங்களுடன் வாழ்ந்து வருகின்றோம். வேலையற்ற யுவதிகள எத்தனையோ போ தங்களுடைய வீடுகளில் முடங்கி கிடக்கிறார்கள். இந்த நாட்டில் தென்னிலங்கையை எடுத்துப பாருங்கள் பெரும்பான்மையினத்தை சேர்ந்த யுவதிகள் அனைவரும் ஏதாவதொரு தொழில் துறைகளில் பணியாற்றுக் கொண்டிருப்பதை நாம் பார்க் கின்றோம். போரினால் பாதிக்கப்பட்ட துன்பங்களோடு இன்னும் எத்தனையோ சொல்லொண்ணாத் துன்பங்களுடன் எங்கள் தமிழ் மக்களவாழ்ந்து வருகின்றார்கள்.

குடா நாட்டில் வாழும் மக்கள தற்போது சமூகத்தின் தேவை கருதி நாடாளுமன்ற உறுப்பினர்களை எதற்காகப் பெற வேண்டும் என்பதை நுணுக்கமாக ஆராய்ந்து வாக்களிக்க வேண்டிய தேவை இருக்கிறது. நாங்கள் இதுவரை காலமும் பெற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பி னர்களால் என்ன பயனைக் கண்டுள்ளோம் என ஆழ அகல மாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். வெறுமனே தமிழ் மக்களின் பிரதிநிதி, தமிழ் மக்களின் இதயம், சிந்தனைச் செம்மல் என்றெல்லாம் புகழ் பாடி வாக்குகளை வழங்கிக் கொண்டிருக்கிறோம். சமூகததின் நலனுக்காக நாடாளுமன்றம் அனுப்பியவாகள் தமது சேவையை சரி வரச் செய் துள்ளார்களா? என்ற கேள்விக்கு சரியான விடையை நாங்கள் தேடிப் பார்க்க வேணடும். என மேலும் தெரிவித்தார். (இ-7)

## எங்களின் தலைமைத்துவம் உள்ளவரை மக்களை தாழ்ந்துபோக விடமாட்டோம்

### சந்திரகுமார் தெரிவிப்பு



எமது மண்ணிலே எமது தலைமைத்துவம் நிலைத்திருக்கும் வரை எமது மக்களை ஒருபோதும் தாழ்ந்துபோக விடமாட்டோம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். சிவன் சோலையில் நடைபெற்ற மக்கள் சந்தப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மீள்குடியேற்றத்திற்குப் பின் எமது மக்களின் வாழ்வை மீள நிலை நிறுத்துவதற்காக நாம் பாடுபட்டோம். அதன் போது பல சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டோம். எதிர் அரசியல் தரப்புக்கள் சிங்களவர்களிடமிருந்து பெற்று வருகின்றார்கள் என்ற காரணத்தைக்காட்டி எம்மை பலவாறு விமர்சித்தன, அழித்தவனைக் கொண்டே ஆக்கவேண்டும் என்ற எமது தந்திரோபாயத்தை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் எந்த விமர்சனங்களையும் நாம் பொருட்படுத்தவில்லை. விமர்சனங்கள் எழுப்பப்படுகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் எமது மக்கள் எதிர்கொள்ளும் அவலங்களும் அதிலிருந்து மக்களை மீட்க வேண்டும் என்ற திடமான கொள்கையும் மட்டுமே எங்கள் மனங்களில் நிலைத்திருந்தன.


தமிழ் மக்களால் பெரும்பான்மைப் பலத்துடன் தெரிவு செய்யப்பட்ட கட்சிகளும் அதன் பிரதிநிதிகளும் கூட எமது மக்களின் மேம்பாட்டைப் பொறுக்கமுடியாது எம்மீது அவதூறு வார்த்தைகளை கணைகளாக வீசி எறிந்தார்கள். அவர்கள் எமக்கு சவால் வடுகின்ற ஒவ்வொறு கணங்களும் எமது செயற்பாட டின் வீச்சை மேலும் அதிக ரித்ததே தவிர அதன் வேக த்தை குறைத்து விடவில்லை. அவ வாறு நாம் எதிர்கொணட சவால்களின் பிரதிபலனாக இன்று எமது மக்களின் வாழ் நிலைகள் மேம்பட்டுள்ளன. எமது பிரதேசங்கள் மீளவும் புதுப் பொலிவு பெற்றுள்ளன. மக்கள் எதிர்கொண்டுவந்த பல நெருக்கடிகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன. எமது மக்கள் தமது சொந்த மண்ணிலேயே அனைத்து அடிப்படைத் தேவைகளையும் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையை உருவாக்கியுள்ளோம். இன்று எம் மக்கள் அவற்றின் பயனை அனுபவிக்கின்ற நிலைமையினைக்கண்டு நாம் மகிழ்வடைகின்றோம். அவற்றின் முன் தூற்றல்கள் அனைத்தும் தூசுகளாகிப்போயின.

களமுனைகளில் எதிரிகளுடன் களமாடி உயிர்த் தியாகங்களைச் செய்த ஆயிரமாயிரம் போராளிகளை உருவாக்கிய இந்த மண்ணில் மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்ற அவர்களின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் நிறைவேற்றமுடியாத தரப்புக்கள் அவர்களின் தியாகங்களால் அரசியல் ஆதாயம் தேடிக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில். நாம் எம்மால் முடிந்தவரை மக்களின் வாழ்வை எமது மண்ணிலே மீள நிலை நிறுத்துவதற்காக உழைத்திருக்கின்றோம் என்பதை எண்ணி நாம் பெருமிதமடைகின்றோம். அந்த நன்றியுணர்வு எமது மக்களின் மனங்களில் நிலைத்திருக்கின்றமையே எமக்கு ஆத்ம திருப்பதியைத் தருகின்றது.

எனவே எமது தலைமைத்துவம் இந்த மண்ணிலே நிலைத்திருக்கின்ற காலம் வரை எமது மக்களை எதற்காகவும் தாழ்ந்து போக நாம் விடமாட்டோம். அதற்காக எந்த சவால்களையும் நாம் எதிர்கொள்ள தயாராக இருக்கின்றோம் என அவர்மேலும தெரிவித்தார். (இ-7)

## தமிழர் தியாகங்களை முதலீடாக வைத்து அரசியல் செய்பவர்களை ஓரங்கட்டுங்கள்

### குகேந்திரன் தெரிவிப்பு



1987 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்துடன் நிறுத்தப்பட்டிருக்க வேண்டிய ஆயுதப் போராட்டத்தை அரசியற் தேவைகளுக்காக சுயநலமாக்கிய தன் விளைவாகத்தான் இன்று வரை தமிழ் மக்கள் எந்தவொரு உரிமைகளையும் தீர்வுகளையும் பெற்றுக்கொள்ள முடியாத இனமாக இலங்கையில் வாழ வேண்டியுள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான கா.வேலும்மயிலும் குகேந்திரன் (வி.கே. ஜெகன்) தெரிவித்துள்ளார்.


மானிப்பாய் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கலந்துரையாடலின்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைப்பாளர்,

ஒற்றுமையாக வாழ்ந்த தமிழ் மக்களை திட்டமிட்ட வகையில் விரோதிகளாக்கி தன்னினத்துக்குள்ளேயே அழிவுகளை ஏற்படுத்த காரணமானவர்களை இன்றுவரை தமிழ் மக்கள் இனங்கண்டு கொள்ளாது தொடர்ந்தும் அத்தகையவர்களிடம் தமது அரசியற் பலத்தை கொடுத்து வருவதனாலும்தான் நாம் அழிவுகளிலிருந்து மீழ முடியாத இனமாக வாழ்ந்து கொண்டிருக்க வேண்டியுள்ளது.

இந்த நிலைமைகளை மாற்றியமைத்து புதிய வாழ்வியற் பாதையை உருவாக்கிக் கொள்ள தமிழ் மக்களுக்கு சுயநலமற்ற ஒரு அரசியற் பலம்தான் தற்போது தேவையாகவுள்ளது. அத்தகைய மாற்றத்தை செய்வதற்காக பல ஆண்டுகளாக எமது செயலாளர் நாயகம் போராடி வந்தாலும் எமக்கு இன்று வரை மக்கள் போதியளவான அரசியற் பலத்தை தந்திருக்க வில்லை.

60 வருட தமிழ் மக்களது வரலாற்றுத் தடங்களை புரட்டிப்பார்ப்போமானால் சுயநலத்தால் ஏமாற்றப்பட்டதும் மீழமுடியாத வடுக்களை சுமந்ததையும் தவிர வேறெந்த பதிவுகளும் பதியப்பட்டிருக்காது என்பதே உண்மை. இந்த நிலைக்கு யார் காரணம்? போராடியவர்களா? போராடும் படி சுயநலத்திற காக துணை டியவர்களா? சிந்தித் துப் பாருங்கள் என அவர் மேலும் தெரிவிததாா. (இ-7)



## எதிர்பார்த்த அமைதிவாழ்வு எமக்குக் கிடைக்கவில்லை

### சர்வானந்தன் கவலை



சுய கௌரவமிக்க அமைதி வாழ்வே எமது இன்றியமையாத தேவையாகும். ஆயினும் இன்று வரை நாம் எதிர்பார்த்த கௌரவமான சுயாதீனமான அமைதி வாழ்வு எமக்குக் கிடைக்கவில்லை.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளரும் யாழ்.மாவட்ட வேட்பாளருமான சர்வானந்தன் தெரிவித்தார். நேற்றைய தினம் தென்மராட்சியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இனவாதம் எம்மை இரண்டாம் தர பிரஜைகளாக நடத்தும். அதே வேளை எம்மவர்கள் எம்மை ஆடையாளப்படுத் தியவர்கள். பாராளுமன்ற நாற்காலிகளுக்காக எம் உணர்வை உசுப்பேத்திசுகபோகம் அனுபவித்துக் கொண்டு தேர்தல் காலத்தில் மட்டும் எம்மை தேடி வரும் பிரதிநிதிகள் ஆகி விடுகிறார்கள். இதில் மாற்றங்கள் ஏற்படாவிடில் எம்மக்களின் வாழ்வில் விமோசனம் ஏற்படப் போவதில்லை. நாம் எல்லோரும்இணைந்துநல்லாட்சிக்கான சூழலை ஏற்படுத்துவோம். இன வாதம் எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வாய்ப்புக்களைவீணடிக்கச்செய்துள்ளது.

இந் நிலையில் நேர்மையான ஆக்கபூர்வமமான நேச சக்திகளுடன் இணைந்துதமிழ் மக்களின் நல்வாழ்வையும் சுய கௌரவத்தையும் மேம்படுத்த நாம் ஐக்கிய தேசியக் கட்சியின்யாழ்.மாவட்டகிளையுடன் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளோம். இனவாதமும் அரசியல் வாதிகளின்சுயநலமும் அற்ற ஒரு நல்லாட்சி மிக்க சூழலை ஏற்படுத்துமாறு நாங்கள் கோரி நிற்கிறோம். நாங்கள் விரும்புவது என்னவென்றால் நிலையான அரசியல் தீர்வே.

அத்துடன் எமது பகுதிகளில் அனைத்து வீதமான பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதுடன் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி கல்வி, சுகாதாரம் ,போக்குவரத்து சேவைகளை உயர்த்த நடவடிக்கை எடுப்போம். உங்கள் வாக்குகளால் எங்கள் வெற்றியை உறுதி செய்யுங்கள்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் 180 பேர் கைது

(கொழும்பு)—

**நாடளாவிய ரீதியில் தேர்தல்கள் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டுத் தொடர்பில் 180 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்ககோனின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இடம்பெற்று வரும் தேர்தல்கள் குறித்த சுற்றிவளைப்புக்கள் மற்றும் தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளின் பிரகாரமே 180 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து நேற்று முன்தினம் மாலை 4 மணி வரையிலான காலப்பகுதியில் சுற்றிவளைப்புக்கள் மற்றும் முறைப்பாட்டு விசாரணைகள் உள்ளிட்ட 120 சம்பவங்கள் தொடர்பில் இந்த 180 பேரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சர் சட்டத்தரணி ருவான் குணசேகர தெரிவித்தார். இதில் பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கேகோனின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இடம்பெற்ற 65 சுற்றிவளைப்புக்களில் 156 பேரும் 56 முறைப்பாடுகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் 24 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர சுட்டிக்காட்டினார்.

இதனிடையே தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 541 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் திணைக்களத்தின் தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவு தெரிவிக்கின்றது. பதவிகள் வழங்கப்பட்டமை, பதவி உயர்வுகள் வழங்கப்பட்டமை மற்றும் இடமாற்றங்கள் உள்ளிட்டவை தொடர்பில் இதில் 145 முறைப்பாடுகள் அடங்குவதாகவும் இதனை விட சுவரொட்டி ஒட்டுதல், பொருட்களை விநியோகித்தல் போன்ற முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளதாக அந்த பிரிவு மேலும் குறிப்பிட்டது.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பிலான அதிக முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் இருந்தே தமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல்கள் திணைக்கள முறைப்பாட்டுப் பிரிவு குறிப்பிட்டது. கொழும்பிலிருந்து 86 முறைப் பாடுகளும் பதுளையிலிருந்து 42 முறைப்பாடுகளும் அம்பாந் தோட்டையில் இருந்து 29 முறைப் பாடுகளும் தமக்கு இவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ளதாக அந்த பிரிவு மேலும் குறிப்பிட்டது.

இதேவேளை 26 வன்முறைச் சம்பவங்கள் அடங்கலாக 536 தேர்தல்கள் தொடர்பிலான சட்டமீறல்கள் தொடர் பில் தமக்கு பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பான கபே குறிப்பிட்டது. கபே அமைப்பின் தலைவர் கீர்த்தி தென்னக்கோன் இந்த தகவலைத் தெரிவித்தார்.

இதனைவிட பவ்ரல் அமைப்புக்கு நேற்று முன்தினம் பகல் வரை 398 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாக அந்த அமைப்பு குறிப்பிட்டது. (இ-7)


## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 250 | 200 |
| தக்காளி | 120 | 120 | 160 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 |
| கோவா | 80 | 80 | 80 | 80 |
| கரட் | 120 | 250 | 200 | 120 |
| பூசணி | 30 | 50 | 60 | 30 |
| புடோல் | 40 | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 120 | 110 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 120 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 120 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 60 | 90 |
| லீக்ஸ் | 100 | 90 | 140 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 100 | 70 |
| கறிமிளகாய் | 150 | 170 | 160 | 140 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 120 | 150 |
| போஞ்சி | 140 | 180 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 15 |
| தேசிக்காய் | 60 | 60 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 35-40 | 50 |
| இராசவள்ளி | 160 | — | — | 120 |
| வெங்காயப்பூ | 140 | 20 | 200 | 160 |
| முள்ளங்கி | 30 | 50 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 25 |


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 417

Search for people, places and things    Nagendram Home

செல்வா செல்வன்




கிருசாலினி கிருசா




சிவலோஜினி லோஜினி





மாஸ் சுகன்யன்




நிருத்திகா வேதநாயகம்





சர்மா சிவசர்மா




**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைக் குதிரைகளா? சண்டிக் குதிரைகளா?



இந்திய நாடாளுமன்றத்தில் வசந்தமாக வீச வேண்டிய "விவாதம்" என்ற சுதந்திரக் காற்றுக்கு மக்கள் பிரதிநிதிகளே பூட்டுப் போட்டு வைத்திருக்கிறார்கள்.

ஜுலை 22 ஆம் திகதி தொடங்கிய நாடாளுமன்றக் கூட்டம் மூன்றாவது நாளாக முடங்கிப் போயிருக்கிறது. ஆளும் பா.ஜ.க. அரசுக்கு எதிராக காங்கிரஸ் தலைமையில் எதிர்க்கட்சிகள் பிரயோகித்துள்ள இந்த "நாடாளுமன்றம் முடக்கம்" என்ற அஸ்திரம் ஜனநாயகத்தின் அத்திபாரத்தை அசைத்துப் பார்க்கிறது.

கருத்து மோதல்கள், ஆழமான விவாதங்கள், அற்புதமான சுவாரஸ்யங்கள் எல்லாம் மக்கள் பிரதிநிதிகள் மத்தியில் வாக்களித்தவர் கள் கேட்டுப் பெற வேண்டிய பொக்கிஷங்களாக மாறிக் கொண்டிருக்கின்றன.

கம்பீரமாக காட்சியளிக்கும் லோக்சபாவும், ராஜ்ய சபாவும் இன்றைக்கு அந்த அவையின் உறுப்பினர்களின் ஆர்ப்பாட்டத்தால் பெருமைப்பட்டுக் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது.

"நாடாளுமன்ற ஜனநாயகத்தின் பாதுகாவலனாகவும்", "எதிர்க்கட்சி உரிமைகளின் காப்பாளராகவும்" திகழ்ந்த ஜி.வி. மௌளாங்கர் - சபாநாயகராக இருந்து நடத்திய நாடாளுமன்றமே இந்திய நாடாளுமன்றம். அதனால்தான் ஜவஹர்லால் நேரு கூட அவரை, "லோக்சபாவின் தந்தை" என்றே அழைத்தார். அப்படிப்பட்ட புகழ்பெற்ற அவையில் இப்போது எல்லாம் "சபாநாயகர் இருக்கை நோக்கி முற்றுகை" என்பது சர்வசாதாரண நிகழ்வாகி விட்டது. "கூட்டத் தொடரை நடத்த விடாமல் ரகளை" என்பது தினமும் நடக்கும் கூத்தாகிவிட்டது.

சென்றமுறை ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு இருந்தபோது, "2ஜி அலைக்கற்றை", "பொதுநலவாய விளையாட்டு ஊழல்", "நிலக்கரி முறைகேடு", "லோக்பால் மசோதா" - போன்ற விவகாரங்கள் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசை கசக்கிப் பிழிய, அப்போது எதிர்வரிசையில் இருந்த பாரதீய ஜனதாக் கட்சிக்கு கிடைத்தது. அப்போது ராஜ்ய சபையின் பா.ஜ.க. கட்சித் தலைவராக இருந்த அருண் ஜேட்லி (இப்போது நிதித்துறை அமைச்சர்), "நாங்கள் நாடாளுமன்றத்தை இயங்க விடவில்லை என்கிறார்கள்.. இப்போது நாங்கள் செய்வதே (இயங்க விடாமல் இருப்பது) முக்கியமான நாடாளுமன்ற பணி" என்று பதிலடி கொடுத்தவர்.

குளிர் காலக் கூட்டத்தொடரை நடத்த முடியாததால், 1.50 கோடி ரூபாய் வீண் ஆகிறதே என்று அப்போது கேள்வி எழுப்பிய போது, "இந்த நட்டத்தை விட 2ஜி அலைக்கற்றை விவகாரத்தில் நாங்கள் நாடாளுமன்றத்தை நடத்த விடாமல் பிரச்சினை எழுப்புவதால் அரசு முறையாக 3 ஜி ஏலத்தை விட்டுள்ளது. அதனால் அரசுக்கு இலாபம்தான் ஏற்பட்டுள்ளது" என்று கூறி, நாடாளுமன்றத்தை பா.ஜ.க. முடக்குவதால் அரசாங்கத்துக்கு இலாபம் என்று தன் வழக்கறிஞருக்கே உள்ள வாதத் திறமையை வெளிக்காட்டியவர் அருண் ஜேட்லி.

பா.ஜ.க. அன்று காங்கிரஸுக்கு கொடுத்ததை இன்று காங்கிரஸ் பா.ஜ.க.வுக்கு திருப்பிக் கொடுக்கிறது. லோக்சபாவில் ஆளும் பா.ஜ.க. அரசுக்கு பெரும்பான்மை இருந்தாலும் கடந்த 22 ஆம் திகதியிலிருந்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் செயற்பட முடியாமல் முடக்கப்பட்டுள்ளன. "ஐ.பி.எல். கிரிக்கெட் லலித் மோடி" விவகாரத்தில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் ராஜஸ்தான் மாநில முதல்வர் வசுந்தர ராஜே உதவியது எல்லாவற்றையும் முன்னிறுத்தி அவர்களை ராஜினாமா செய்ய வைத்தால் நாடாளுமன்றத்தை நடத்த அனுமதிப்போம் என்பது காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் வாதம்.

அந்த விவகாரம் ஆறிப் போவதற்குள் அடுத்த விவகாரமாக மத்திய பிரதேச மாநிலத்தில் "வியாபம்" முறைகேடு எதிர்க்கட்சிகள் கையில் சிக்கியது. மத்திய பிரதேசத்தில் அரசு பணி நியமனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் சேர நுழைவுத் தேர்வு போன்றவற்றின் முறைகேடுதான் "வியாபம்". [illegible] தொடங்கிய இந்த முறைகேடு 2015 இல் பரபரப்பாகி விட்டது.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் ஒன்றான மத்திய பிரதேசத்தில் முதலமைச்சராக இருப்பவர் சவுகான. இந்த ஊழலில் அந்த மாநில ஆளுநர் ராம் நரேஷ்யாதவே சர்ச்சைக்குள்ளாகியிருக்கிறார். "லலித் கேட்" டை மிஞ்சிய இந்த "வியாபம்" முறைகேடு, இந்திய அரசியலை உலுக்கிக் கொண்டிருக்கிறது.

இந்த முறைகேட்டில் சம்பந்தப்பட்டவர்கள், சாட்சிகளாக இருப்பவரகள், புலன் விசாரணை செய்யும் பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட 40 இற்கும் மேற்பட்டவர்கள் அடுத்தடுத்து "மர்மமான" முறையில் மரணம் அடைந்தது "வியாபம்" ஊழலை இந்திய வீதிகளுக்கு இழுத்து வந்து விட்டது. இப்போது "வியாபம்" ஊழல் புகார்களை விசாரிக்கும் பொறுப்பை இந்திய உச்சநீதிமன்றமே தலையிட்டு சி.பி.ஐ.யிடம் ஒப்படைத்து விட்டது.

இந்த "வியாபம்" முறைகேட்டுக்கு பொறுப்பேற்று மத்திய பிரதேச முதலமைச்சர் சவுகான் - ராஜினாமா செய்ய வேண்டும் என்பது காங்கிரஸ் கட்சியின் புதிய கோரிக்கை. இது தவிர சட்டிஷ்கர் மாநிலத்தில் "அரிசி முறைகேடு" புகாருக்கு பொறுப்பேற்று அம்மாநில முதலமைச்சர் ராமன்சிங் ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கின்றன.

இந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் "சுஷ்மா சுவராஜ்", "வசுந்தர ராஜே", "சவுகான்", "ராமன்சிங்" என்று பா.ஜ.க. மத்திய அமைச்சர்களும், மாநில முதல்வர்களும் எதிர்க்கட்சிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தாலும், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் விவகாரம்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. "லலித் மோடிக்கு உதவியதில் அவர் குற்றச் செயலில் ஈடுபட்டிருக்கிறார்" என்று காங்கிரஸின் துணைத் தலைவர் ராகுல்காந்தி பேட்டியளித்தது நாடாளுமன்ற நிலைவரத்தை மேலும் கலவரமாக்கியிருக்கிறது. "ராகுல்காந்தி மன்னிப்பு கேட்க வேண்டும்" என்றும், "பா.ஜ.க. அமைச்சர்கள் [illegible]" என்றும், "மாநில முதல்வர்கள் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் எழுப்பக் கூடாது" என்றும் பா.ஜ.க. வலுவாக வாதிட்டு வருகிறது.

"நாங்கள் நாடாளுமன்றததுக்குள் எப்படிப்பட்ட விவாதத்துக்கும் தயார்" என்று பா.ஜ.க. கூறுகிறது. ஆனால, காங்கிரஸ் கட்சியும் எதிர் கட்சிகளும், "அமைச்சர்கள் ராஜினாமா செய்ய வேண்டும்" என்ற கோரிக்கையை முன் வைப்பது மட்டுமின்றி, அதைச் செய்யாவிட்டால் நாடாளுமன்றத்தை நடத்த விடமாட்டோம் என்பதில் உறுதியாக இருக்கிறது. எதிர்க்கட்சிகளின் இந்த பிடிவாதத்தில் "நாடாளுமன்ற ஜனநாயகம்", "நிலம் எடுப்பு மசோதா", "சேவை வரி விதிப்பு மசோதா" என்பது உள்ளிட்ட பல முக்கிய விடயங் கள் தடுமாறி நிற்கின்றன. தேசியக் கட்சிகளாக இருக்கும் இந்த இரு கட்சிகளின் அரசியல் இந்திய நாடாளுமன்றத்தை திணற வைத்திருக்கிறது.

ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் பிரதமராக இருந்த மன்மோகன் சிங் இதுபோன்ற "விவகாரங்கள்" எழுந்த போது "ஏன் மௌனமாக இருக்கிறார்" என்று பா.ஜ.க. கேள்வி எழுப்பியதுண்டு. அவரை "மௌன்சிங்" என்றெல்லாம் பட்டப் பெயர் கொடுத்து அழைத்தது உண்டு. அந்த மன்மோகன்சிங்கின் பாணியை அப்படியே கடைப்பிடிக்கிறார் இப்போது பிரதமர் நரேந்திரமோடி என்ற குற்றச்சாட்டு எங்கும் கேட்கிறது.

இந்த முறைகேடுகள், ஊழல்கள் குறித்து பிரதமர் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை என்பதே தனி பிரசாரமாக மாறி விட்டது. "எங்கே பிரதமரின் கருத்து" என்று ஏலம் போட்டுக் கேட்காத குறையாக எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல- மக்கள் கூட கேட்கத் தொடங்கிவிட்டார்கள்.

நாடாளுமன்றத்தின் இந்தக் கூட்டத்தொடர் இதுவரை மூன்று நாட்கள் எந்தப் பணியும் இல்லாமல், ஒத்திவைப்பு என்ற ஒரே நிகழ்ச்சி நிரலில் முடிந்துவிட்டது. அன்றைய தினமும் எதிர்க்கட்சிகளுக்கும்- ஆளுங்கட்சிக்கும் இதே மோதல் நீடித்தால், நாடாளுமன்றத்தின் பணிகள் முழுமையாக முடக்கப்படும் அபாயம் இருக்கிறது. "நாடாளுமன்றத்தை செயற்பட வைக்க வேண்டியது" ஆளுங்கட்சியின் பணி மட்டுமா அல்லது எதிர்க்கட்சிகளும் அதற்கு பொறுப்பேற்க வேண்டுமா என்பதுதான் இப்போதைய கேள்வி. பிரதமர் நரேந்திரமோடியைப் பொறுத்தமட்டில் "எதிர்க்கட்சிகளுக்கும் பொறுப்பு இருக்கிறது" என்று வலியுறுத்திப் பேசுகிறார்.

ஆனால், முறைகேடுகள் குறித்த தன் கருத்தை சொல்ல மறுக்கிறார். இந்தியாவின் முதல் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு - நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்புகள் பற்றிக் கூறும் போது, "உறுப்பினர்களின் திறமை, நாடாளுமன்ற விவாதத்தில் ஈடுபாடு, சுயகட்டுப்பாடு, பெரிய அளவிலான ஒத்துழைப்பு எல்லாம் நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு மிகவும் அவசியம்" என்றார்.

இதை வலியுறுத்திய முன்னாள் சபாநாயகர் மனோகர் ஜோசி, "நாடாளுமன்றம் நடப்பதற்கு உறுப்பினர்களின் கண்ணியமும் கட்டுப்பாடும் முக்கியம்" என்று தெளிவுபடுத்தியிருக்கிறார். இதுவரை இருந்த சபாநாயகர்களில் சமீப காலங்களில் இருக்கும் சபாநாயகர்கள் விவாதங்களை ஒழுங்குபடுத்துவதற்குப் பதில் தன் முன் வந்து முற்றுகையிடும் உறுப்பினர்களை சமாதானம் செய்வதற்கே பெரும் பகுதியான நேரத்தை செலவிட வேண்டிய சூழல் எழுந்துள்ளது.

இன்றைக்கு நேரு வழி நடக்கும் காங்கிரஸ் கட்சியும் சரி, இதற்கு முன்பு எதிர்க்கட்சி அந்தஸ்தில் இருந்த பா.ஜ.க.வும் சரி "நாடாளுமன்ற ஜனநாயக நெறி முறைகளை" அடியோடு மறந்துவிட்டு அன்றைய அரசியலுக்கு என்ன தேவை என்பதை மட்டும் மையமாக வைத்து செயற்பட்டன. இப்போதும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதனால், நாடாளுமன்ற முடக்கம் என்பது அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி ஏதோ சகஜமான ஒன்றாக இந்திய ஜனநாயகத்தில் மாறிவிட்ட கொடுமை அரங்கேறிவிட்டது.

வாக்களித்த மக்கள் கன்னத்தின் மீது கையை வைத்துக் கொண்டு கவலையில் உறைந்து போயிருக்கிறார்கள். ஆளுங்கட்சியைப் பொறுத்தமட்டில் "பிரச்சினைக்கு தீர்வு கண்டு" சுமூகமாக அவையை நடத்த அனுமதிப்பதற்குப் பதில் "எங்களை நீங்கள் யார் கேட்க?" என்ற எதேச்சாதிகார பாணியில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சராக இருக்கும் வெங்கய்யா நாயுடு அனைத்து கட்சிகளையும் அரவணைத்துச் செல்ல வேண்டியவர். அவரே, "எங்கள் அரசுக்கு பெரும்பான்மை இருக்கிறது. எங்களை யாரும் நிர்பந்திக்க முடியாது" என்று மனம் போன போக்கில் கருத்துச் சொல்லுகிறார்.

எதிர்க்கட்சியினரின் கருத்தைக் கேட்டு அதற்கு விடை காண்போம் என்று கருதாமல் "காங்கிரஸின் வதேரா (சோனியா மருமகன்) முதல் குவத்ரோச்சி (போபர்ஸ் நாயகன்) வரையிலான முறைகேட்டை விவாதிக்கலாமா" என்று ஏட்டிக்குப் போட்டி அரசியலில் ஆளுங்கட்சி குதித்துள்ளது. அதே நேரத்தில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகளும் "நாடாளுமன்றத்தை மூன்று தினங்கள் முடக்கி" ஒரு பாடத்தை பா.ஜ.க.வுக்கு கற்றுக் கொடுத்தோம் என்ற அளவில் இனி நாடாளுமன்ற ஜனநாயகத்தை செயற்பட வழி விட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் கிளம்பியிருக்கிறது. ஆளுங்கட்சியும், எதிர்கட்சியும் நாடாளுமன்றத்தை சுமூகமாக நடத்த "இரட்டைக் குதிரைகள்" போல் பணியாற்ற வேண்டும்.

ஆனால், அவை "சண்டிக் குதிரைகளாக" இருக்கின்றன என்பது திருவாளர் வாக்காளர்களின் எண்ணவோட்டமாக இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்திய எம்.பிக்கள் இதை உணருவார்களா?

-எம். காசிநாதன்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளை ஒழிக்க இணைந்து செயற்படுவோம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**பிராந்திய வலயத்தில் போதைப்பொருட்களை இல்லாதொழிக்க இணைந்து செயற்படுவோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



தெற்காசிய வலயத்தின் அனைத்து அரச தலைவர்களும் பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் போதைப்பொருளை இல்லாதொழித்தல், கிரமமான உள்நாட்டு உணவு உற்பத்திகளை ஆரம்பித்தல், சுற்றாடல் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகியனவே எனது ஆட்சிக்காலத்தின் நோக்கங்களாகும்.

இந்த இலக்குகளை அடைவதற்கான ஆரம்ப கட்டப்பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மாலைதீவின் 50வது சுதந்திர தின நிகழ்வுகளில் விசேட விருந்தினராக கலந்து கொள்ளும் நோக்கில்,ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாலைதீவிற்கு விஜயம் செய்துள்ளார்.


மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா அப்துல்லாவை சந்தித்த போது இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (இ-7)

# சேறுபூசும் அரசியலில் ஈடுபடப் போவதில்லை

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

சேறு பூசும் அரசியலில் ஈடுபடப் போவதில்லை என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.



நாம் சேறு மற்றும் இழிவுபடுத்தும் அரசியலில் ஈடுபடுவதில்லை. எனினும் சில சில அரசியல் கட்சிகள் வழமையான சேறு பூசும் அரசியலில் ஈடுபட்டு வருகின்றன.

அதிகாரம் இழந்து போய்க் கொண்டிருக்கும் தரப்புக்கள் இவ்வாறு போலிப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன. ஜே.வி.பி. கட்சியின் மீது சேறு பூசும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிலர் கடுமையான பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர். இவ்வாறான இழிவான அரசியல் பிரசாரங்களில் நாம் ஈடுபடப் போவதில்லை.

சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிநுட்பமான வேட்பாளர்களை நாம் தேர்தலில் போட்டியிடச் செய்கின்றோம் என ரில்வின் சில்வா நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# 1250 பௌத்த பிக்குனிகள் வாக்களிக்க முடியாத நிலை

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டை இல்லாத பௌத்த பிக்குனிகளினால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.


சுமார் ஆயிரத்து 250 பௌத்த பிக்குனிகளினால் இவ்வாறு தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக ரங்கிரி தம்புள்ள இனாமலுவே சிறி சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு முதல் பௌத்த பிக்குனிகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கைகளை தேசிய ஆட்பதிவு திணைக்களம் இடைநிறுத்தியுள்ளது.

இதனால் பௌத்த பிக்குனிகளினால் தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பௌத்த பிக்குனிகள் வாக்களிக்க சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமெனவும் அவ்வாறு செய்யாவிட்டால் அது அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் அமையும் எனவும் சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளரிடம் அவர் கோரியுள்ளார்.



இதேவேளை . இவ்வாறான பௌத்த பிக்குனிகள் தற்காலிக அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டு தேர்தலில் வாக்களிக்க முடியும் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## அந்த ஐந்துபேர்!

'இவர் மாதிரி இந்த உலகத்தில் வேறு எவரும் இருக்க முடியாது. இவர் கோடியில் ஒருவர்' என்று சில பேரை அறிமுகப்படுத்துவது உண்டு.

இந்த உலகத்தில் அபூர்வமான அருமையிலும் அருமையானவர்கள் ஐந்துபேர் உண்டு என்கிறார் கிருபானந்த வாரியார். யார் அந்த ஐந்து பேர்?

தனது பொருளின் கெடுதியையும் கூறும் வியாபாரி! புகழை விரும்பாத கொடையாளி! மாற்றைக் குறைத்துச் சொல்லாமல் பொன் வாங்கும் வணிகர். எந்தவித இலஞ்சமும் வாங்காத உத்தியோகத்தர். தண்டனையை நியாயம் என்று ஒப்புக்கொள்ளும் குற்றவாளி!

இந்த ஐந்து பேரும்தான் அருமையிலும் அருமையானவர்கள்.

தன்னுடைய பொருளின் கெடுதியைக்கூறும் வியாபாரி யாராவது உண்டா?

உளுத்தம் பருப்பு ஒரு கிலோ கொடுங்க – என்று கேட்கிறீர்கள். 'வேண்டாம் சார்... எங்கள் கடையில் இருக்கும் உளுத்தம்பருப்பு நல்லதல்ல! எதிரில் ஒருவன் கடைவைத்திருக்கிறான். அந்த கடையில் இருப்பது நல்ல தரமானது! அங்கேபோய் வாங்கிக்கொள்ளுங்கள்!' என்று யாராவது சொல்வார்களா? சொன்னால் 'அந்த ஆளுக்குப் புத்தி மாறிவிட்டது போல' என்று தான் நினைப்போம்!

அதேமாதிரி தான் புகழை விரும்பாத கொடையாளி! இந்தக் காலத்தில் கொடையாளி ஆவதே புகழுக்காகத் தான்!

இடதுகை கொடுக்கிறது வலது கைக்குத் தெரியக்கூடாது என்பார்கள். ஆனால், இன்றைக்கு எதைக் கொடுத்தா லும் இரண்டு கைகளாலும் சேர்த்துக் கொடுத்துத்தான் போட்டோ பிடிக்கிறோம். இடதுகை வாங்கிறது வலது கைக்குத் தெரியக்கூடாது என்று வேண்டுமானால் சொல்லலாம் அது இந்தக் காலத்துக்குப் பொருத்த மாக இருக்கும்!

மூன்றாவது அபூர்வமான ஆள்... மாற்றைக் குறைத்து சொல்லாமல் பொன் வாங்குபவர். கூட்டிச் சொல்லி வாங்கினால் அவரின் நிலைமை என்ன ஆகிறது?

அடுத்ததாக உள்ள அபூர்வமானவர் எந்தவித இலஞ்சமும் வாங்காத உத்தியோகத்தர்.

உத்தியோகத்தர் என்றால் அதற்கு விளக்கம் என்ன தெரியுமா?

இலஞ்சம் வாங்குவதற்குப் பல உத்திகளைத் தெரிந்து வைத்திருக்கிறவர்... அதனால் அவர் யோகஸ்தர்! அதுதான் உத்தியோகஸ்தர்!

இன்றைக்கு உலகத்தில் இலஞ்சம் வாங்காமல் கூட எப்படியாவது இருந்துவிடலாம். ஆனால், இலஞ்சம் கொடுக்காமல் யாரும் காலம் தள்ளமுடியாதுபோல் இருக்கிறது!

இலஞ்சம்கொடுப்பதென்றாலும் வாங்குவதென்றாலும் சரி அதற்கு இந்தக்காலத்தில் சிபாரிசு வேண்டியிருக் கிறது. அருமையிலும் அருமையானவர்களில் ஐந் தாவது ஆள் தண்டனையை நியாயம் என்று ஒப்புக் கொள்ளும் குற்றவாளி!

எனக்கு நீதிமன்றில் பத்துவருட கடுங்காவல் தண்டனை என்று தீர்ப்பாகிவிட்டது. அது நியாயமான தண்டனைதான்! அந்த தண்டனையைக் கொடுத்த நீதிபதி எனக்குத் தெய்வம் மாதிரி! என்றா சொல்லிக் கொண்டிருப்பான் அந்தக் குற்றவாளி.

இப்படியான ஆட்களைப் பார்ப்பது மிகக் கஷ்டம். அப்படி யாராவது கண்ணில் பட்டால் அவர்கள் அருமையிலும் அருமையானவர்கள் தான்! ஒருவர் நல்ல கௌரவமான உத்தியோகத்தில் இருந்துகொண்டு இலஞ்சம் வாங்கினார்.

'ஏன் சேர்... இவ்வளவு கௌரவமான உத்தியோகத்தில் இருந்து கொண்டு இலஞ்சம் வாங்குகிறீர் களே... இது தவறு இல்லையா?' என்று கேட்டேன் அவரிடம்!

'இதில் தவறு இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஏனென்றால் இந்தக் கௌரவமான உத்தியோகத்தையே நான் இலஞ்சம் கொடுத்துத்தான் வாங்கியிருக்கிறேன்!' என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பமாகிறது ஆட்சி மாற்றத்தின் இறுதி அத்தியாயம்!

ஆட்சிமாற்றத்தின் இரண்டாம் அத்தியாயத்தில் காலடி எடுத்து வைத்திருக்கிறது இலங்கை அரசியல். மகிந்தரின் "நீடித்த" ஜனாதிபதி ஆசை ஜனவரி 9 இல் கனவாகிப்போக, புதிதாக வந்த அவரின் சக தோழர் மைத்திரி, 19 இன் ஊடாக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை "மென்சக்தி" நிலைக்கு மாற்றிவிட்டார்.

முதலாம் பாகத்தில், "தமிழ் பேசும் மக்கள்" மூலம் இழந்ததை, நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றுவிடலாமென்று மகிந்தர் நம்பிக்கை கொண்டுள்ளார்.

இந்த ஆட்சி மாற்ற ஆட்டத்தில், வெளியாரின் வகிபாகம் குறித்து பேசாமல், கடந்து செல்ல முடியாது என்கிற உண்மையும் உண்டு.

உள்ளூரில் நடக்கும் கட்சிக் காய்நகர்தல்கள், அணிமாற்றங்கள், அரை மந்திரிகளின் பதவி துறப்புகள், ஊழல் குறித்த பெரிய "ஊதல்கள்" போன்ற எல்லாவற்றின் பின்னணியிலும் பிராந்திய- மேற்குலக ஏகாதிபத்திய வல்லாளர்களின் வலிமையான மாயக் கரங்கள் இருப்பதை உணரக்கூடியதாகவுள்ளது.



பூகோள அரசியலில், ஆசியப்பிராந்தியமே தற்போதுள்ள கொதிநிலை மையமாகும்.

பங்குச் சந்தையில் மூன்றிலொரு வீத சரிவு ஏற்பட்டாலும், அதிலிருந்து மீளும் பொருண்மிய வல்லாண்மை சீன தேசத்திற்கு உண்டு என்பது மறுபடியும் நிரூபிக்கப்பட்ட நிகழ்வு, மேற்குலக ஆதிக்கத்தினுள் இயங்கும் நிதி நிறுவனங்கள், கடன் வழங்கும் நிதியங்கள், அனைத்துலக வங்கிகளுக்கு பெரும் சவாலாக இருக்கிறது.

சீனாவிற்கும் இந்திய- மேற்குலக கூட்டிற்குமிடையிலான தீவு பிடிக்கும் பனிப்போர் தென்சீனக் கடலிலிருந்து விரிவடைந்து, இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் நாடு பிடிக்கும் மென்போராக மாறுவதைக் காணலாம்.

மக்களின் பொதுப்பார்வையில், ஊழலிற்கு எதிரான ஐக்கிய தேசிய முன்னணி அணிக்கும், மகிந்தரின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கும் ( மைத்திரி இதில் sleeping partner ) இடையில் நிகழும் அக்கப்போர் போன்றதொரு தோற்றப்பாட்டினை இது கொடுத்தாலும், நிஜத்தில் இத்தேர்தலானது வல்லாதிக்கங்களின் போட்டிக்களம் என்பதே உண்மை.

"சுதந்திரக் கட்சியை உடைத்துக்கொண்டு செல்ல நான் விரும்பவில்லை. சுதந்திரக்கட்சியை சிதறடித்தால் அது ஜனநாயகத்திற்கு எதிரான சக்திகளுக்கு வாய்ப்பாக அமைந்துவிடும்" என்று மைத்திரிபால சிறிசேன அவர்கள் கூறும் அதேவேளை, "எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ச வெற்றிபெற மாட்டார். நான் மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர் இல்லை. அவருக்கு வேட்புமனு வழங்கியதில் எனக்கு உடன்பாடு இல்லை" என்றும் கூறியுள்ளார்.

ஆகமொத்தம் இவருடைய பிரச்சினை, "கட்சியை உடைத்தார்" என்கிற பழி தன் மீது விழுந்து விடக்கூடாதென்பதுதான். அத்தோடு, ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தருக்கு எதிராக போட்டியிட்ட பின்னர், எவ்வாறு நாடாளுமன்றத் தேர்தலில் அவரைக் கட்சிக்காக ஆதரிப்பது என்ற சங்கடமும் சேர்ந்து வாட்டுகிறது.

இன்னும் ஒரு மாதகாலம் இருக்கிறது. பூகோள அரசியல் போட்டிக்கு அமைவாக இரண்டு அணிகள் தேர்தலில் களமிறங்கியுள்ளன. ஆனால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் குறித்து இங்கு போட்டியிடும் எவருக்கும் அக்கறையில்லை.

மலையக மக்களின் தினக்கூலி உயர்வற்காக குரல் கொடுப்போர், மாதச் சம்பளம் பெற்றுக் கொடுக்க முற்படுவதில்லை. "குந்தியிருக்கச் சொந்த நிலம்" என்கிற வாழ்வுரிமைக் கோரிக்கை என்னவாச்சு என்று தெரியவில்லை.

உலகமயமாதலின் கார்பரேட் பிதாமகர்களுக்கு, தரகு சேவகம் புரிய முண்டியடிக்கும் அரசியல் கட்சிகளே இப்போது எண்ணிக்கையில் அதிகம். "தூங்கும்" ஆலயங்களின் டொலர்களுக்காக, மக்களின் உணர்வுகளை மூலதனமாக்கும் அரசியல் வியாபாரிகளும் அதிகம்.

இந்த நிலையில், வட-கிழக்கு அரசியலில் என்ன நிலைப்பாடு என்று பார்ப்போம்.



ஒரு காலத்தில் "ஊடகச் சமராடி" என்று எம்மால் விளிக்கப்பட்ட வித்தியாதரன் அவர்கள், சுயேட்சைக் குழுவொன்றின் முதன்மை வேட்பாளராக யாழ்.மாவட்ட தேர்தல் களத்தில் குதித்துள்ளார்.

வட மாகாணசபைத் தேர்தலில் வருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட வித்தியாதரன், நாடாளுமன்றத் தேர்தலில் போராளிகளுடன் இறங்கியிருப்பது, வட - கிழக்கு தமிழ் அரசியலில் சிறு அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது போல் தெரிகிறது.

அதாவது, முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் (போராளிகள்) சிலர், வித்தியாதரன் தலைமையில் உருவாக்கிய " ஜனநாயகப் போராளிகள்" கட்சியே , சுயேட்சையாகக் களமிறங்குகிறது.

இவர்களின் வேட்பாளர் பட்டியலில், முன்னாள் ஈரோஸ் இயக்கத்தின் மூத்த உறுப்பினர் சிவகுரு முருகதாஸ் ( ரவிதாஸ்) அவர்களும் இணைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாவட்டத்திற்கு இரண்டு போராளிகளை சேர்த்துக்கொள்ளுமாறு வித்தியாதரன் விடுத்த வேண்டுகோளை, சம்பந்தர் அவர்கள் ஏற்க மறுத்துவிட்டார்.

அதாவது, "சர்வதேச நாடுகள் இதனை விரும்பாது" என்கிற சம்பந்தரின் பதில், ஜனநாயகப் போராளிகள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

லண்டன் தொலைகாட்சி ஒன்றில் தமது நிலைப்பாட்டினைத் தெரிவித்த முன்னாள் புலி உறுப்பினர்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது காட்டமான விமர்சனத்தை முன் வைத்திருந்தார்கள்.

கூட்டமைப்பினைப் பலப்படுத்த எடுத்த முயற்சி தோல்வியடைந்ததால், சுயேட்சையாக களமிறங்குகின்றோம் என்று தன்னிலை விளக்கமளிக்கும் ஜனநாயகப் போராளிகள் குழுவினரின் ஒருங்கிணைப்பாளர் வித்தி, "ஏனைய மாவட்டங்களில் போட்டியிடாமல் தவிர்த்தது அங்கு வாக்குகள் சிதறிவிடாமல் இருக்க வேண்டும்" என்கிறார்.

இதேவிதமான வாக்குச் சிதறல், யாழ். மாவட்டத்திலும் ஏற்படும் என்பது நிஜம்.

இங்கு கூட்டமைப்பின், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டால், ஈ.பி.டி.பியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஓரிரு ஆசனங்களைப் பெறும் வாய்ப்புண்டு.

அதேவேளை போராளிகளை உள்ளே அனுமதித்தால் "சர்வதேசம்" முகத்தைச் திருப்பிக் கொள்ளும் என்ற சம்பந்தன் அவர்களின் அரசியல் விளக்கத்தைக் கேட்கும் போது, வட மாகாணசபைத் தேர்தலில் திருக்கோணமலை மாவட்டத்தின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனின் (சசிதரன்) மனைவி அனந்தியை, வற்புறுத்தி அழைத்து வந்த மாவை.சேனாதிராஜா மற்றும் ஸ்ரீதரனின் செயற்பாடுகளே நினைவிற்கு வருகிறது.

"அன்று சர்வதேசம் ஏன் முகத்தைத் திருப்பிக் கொள்ளவில்லை" என்கிற கேள்வியினை அவர்களிடமே விட்டுவிடுவோம். ஆனால் அனந்தி பெற்ற 87 ஆயிரம் புலி ஆதரவு வாக்குகளையிட்டு மேற்குலகும் இந்தியாவும் ஆனந்தப்படவில்லை. அந்த நேரத்தில், மாகாண சபை முறைமையை அதிகப்படியான வடக்கு மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்கிற செய்தியை சிங்களத்திற்கும், சர்வதேசத்திற்கும் சொல்ல வேண்டிய அவசியம் மட்டுமே அவர்களுக்கு இருந்தது.

இவைதவிர, "தன்னிடமிருந்து உதவி பெற்ற கடா, மார்பில் பாய்ந்து விட்டது" என, கிழக்கிலிருந்து அவலக்குரல் கேட்கிறது. அந்தக் குரலின் சொந்தக்காரர் யார் என்பது சொல்லாமலே புரியும். ஈழத் தமிழினம் இலகுவில் மறக்கக்கூடிய பெயரல்ல அது.

தமிழீழ விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு, தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி உதவி செய்ததால், அக்குரலுக்கு தேசியப்பட்டியலில் இடமும் கட்சியில் உதவித் தலைமைப் பொறுப்பும் அன்று கிடைத்தது. இப்போது காட்சிகள் மாறி விட்டன. அவருக்கு பேரினவாதத்தின் நிழல் வெளியில்கூட இளைப்பாற இடமில்லை.

"மக்களின் வாக்கினைப் பெற்று எம்பியாக முடிந்தால் உள்ளே இரு" என்பது தான் ஸ்ரீ.ல.சு.கட்சியின் தீர்ப்பு.

மக்கள் விரோதப் போக்கு, எவ்வாறு இந்தச் சமூகத்திலிருந்து ஒருவரை அந்நியமாக்கும் என்பதற்கு, இந்த தேசியப்பட்டியல் விவகாரத்தில் சிக்குண்டவரே முன்னுதாரணமாவார். அவர் தேர்தலில் போட்டியிட்டால் மக்களால் நிராகரிக்கப்படுவார் என்பதுதான் நிதர்சனமான உண்மை.

"அரசியல்வாதிகளில் இத்தனை நிறங்களா..?" என்ற கேள்வியோடு எனது பத்தி எழுத்தினை நிறைவு செய்கின்றேன்.

அதாவது, மகிந்த அரசாங்கத்தில் பதவி வகித்தவர்கள், சலுகைகளைப் பெற்றவர்கள், தம்புள்ள பள்ளிவாசல் தாக்கப்பட்ட போதும், கிரீஸ் முகமூடிகள் பெண்களைத் துரத்தும்போது அடக்கி வாசித்தவர்கள், இப்போது மகிந்த மறுபடியும் ஆட்சிக்கு வந்தால் கிரீஸ் மனிதர்கள் வருவார்கள் என்று கூறுவதைப் பார்க்கையில் வேடிக்கையாக இருக்கிறது. அடுத்த 20;21 நாட்களில், இன்னும் பல வேடிக்கை மனிதர்களின் போலி முகங்களை மக்கள் இனங் காண்பார்கள்.

**-இதயச்சந்திரன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான்தாக்குதல் தீவிரம் ஏமனில் 120 பேர் பலி !

(சனா)

**ஏமன் நாட்டில் செங்கடல் நகரான தைஜ நகரில் மின் உற்பத்தி நிலையம் ஒன்றின் பொறியியலாளர்களி, பணியாளர்கள் தங்கியுள்ள மோக்கா பகுதியில் சவுதி கூட்டுப்படைகள் நடத்திய வான் தாக்குதல்களில் 120 பேர் பலியாகியுள்ளனர்.**

கடந்த மார்ச் மாதம் 26ஆம் திகதியில் இருந்து சவுதி கூட்டுப் படைகள் நடத்தி வந்த தாக்குதல்களில், இந்த தாக்குதல்கள் மிக கடுமையானவை என தெரிவிக்கப்படுகிறது.

இடைவிடாது குண்டுமழை பொழிந்ததில் கட்டடங்கள் தரை மட்டமாகி விட்டதாகவும், 120 பேர் கொன்று குவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தப் பகுதி தீப்பிடித்து எரிந்ததில் குறிப்பாக குழந்தைகள், பெண்கள், வயதானவர்களின் உடல்கள் எரிந்து சாம்பலாகின.



சவுதி கூட்டுப்படைகளின் தாக்குதல்களை நேரில் கண்ட வாஹிப் முகமது என்பவர் கூறும்போது, குண்டுகள் வெடித்ததன் அழுத்தத்தால் இறந்தவர்களின் உடல்கள் கிழித்தெறியப்பட்டு, உறுப்புகள் சிதறின. இறந்தவர்களின் உடல்கள் சேகரிக்கப்பட்டு, மொத்தமாக அடக்கம் செய்யப்பட்டன என்றார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் முதல் 5 நாட்கள் சண்டை நிறுத்தம் அங்கு அமுலுக்கு வந்துள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

## சிறுமி தற்கொலைத் தாக்குதல் கமரூனில் 20 பேர் உயிரிழப்பு

ஆபிரிக்க நாடான கமரூனில், நைஜீரியா மற்றும் சாட் ஆகிய நாடுகளின் எல்லையில் மரோயுவா என்ற நகரம் உள்ளது. இது கமரூனில் உள்ள வர்த்தகநகரங்களில் ஒன்றாகும்.

அங்குள்ள ஒரு மதுபானக் கடை ஒன்றில் மக்கள் கூட்டம் அலை மோதியது. அப்போது அங்கு நுழைந்த 12 வயது சிறுமி தனது உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்தாள்.

இத்தாக்குதலில் அங்கு இருந்த 20 பேர் உடல் சிதறி பலியாகினர். 79 பேர் காயம் அடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. எனவே பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. இத்தாக்குதலுக்கு யாரும் பொறுப்பு ஏற்கவில்லை. ஆனால் போகோஹராம் தீவிரவாத அமைப்பின் சிறுமி அத்தாக்குதலில் ஈடுபட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

கடந்த 3 நாட்களுக்கு முன்பு தான் அங்குள்ள வர்த்தக கட்டடத்தில் 2 சிறுமிகள் தற்கொலை தாக்குதலில் ஈடுபட்டனர். அதில் 13 பேர் பலியாகியிருந்தனர்.

இதே போன்று நைஜீரியாவிலும் மனித குண்டு தாக்குதல் நடந்தது. வட கிழக்கில் உள்ள டமத்ரு நகரில் மக்கள் அதிகம் கூடும் வர்த்தக நிலையத்தில் ஒரு பெண் தீவிரவாதி புகுந்து தற்கொலை தாக்குதலில் ஈடுபட்டாள். அதில் 15 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

## தீராப்பகை போரில் முடிந்தது திருமண வீட்டில் சூடு; 20 பேர் பலி

### ஆப்கானிஸ்தானில் கொடூரம்

ஆப்கானிஸ்தானில் இரு குடும்பங்களுக்கு இடையில் நிலவி வந்த தீராத நெடும்பகையின் விளைவாக திருமண வீட்டில் நேற்று முன்தினமிரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு விருந்தினர்கள் உட்பட 20 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

வடக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள பக்லான் மாகாணம், அந்த்ராப் மாவட்டத்தில் வசித்துவரும் இரு குடும்பங்களுக்கு இடையில் நீண்ட காலமாக பகை நீடித்து வந்ததாக கூறப்படுகிறது. அதில் ஒருவரது இல்லத் திருமண விழா நேற்று முன்தினமிரவு மகிழ்ச்சி ஆரவாரத்துடன் களைகட்டி இருந்தது.

இந்த மகிழ்ச்சியை சகித்துக் கொள்ள முடியாத எதிர் கோஷ்டியினர் திடீரென கைகளில் துப்பாக்கிகளுடன் அந்த திருமண வீட்டை சுற்றி வளைத்தனர். கண்ணிமைக்கும் நேரத்துக்குள் காக்கை, குருவியை சுடுவதுபோல் அங்கிருந்தவர்களை அந்த கும்பல் சுட்டுத் தள்ளியது.

இச்சம்பவத்தில், திருமணத்துக்கு வந்திருந்த விருந்தினர் உட்பட 20 இற்கும் அதிகமானோர் பலியாகினர்.

பத்துக்கும் மேற்பட்டோர் குண்டு காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (3-7)

## இரண்டு பிள்ளைகளின் தாயான இங்கிலாந்தின் இரும்பு மங்கை



58 கிலோ தாஜ்மஹால் என்று வர்ணிக்கலாம்தான். ஆனால், இங்கிலாந்து ஆண்கள் கேத்தரின்னைப் பார்த்தாலே பத்தடி தள்ளி நடக்கிறார்கள். காரணம், அவர்தான் இங்கிலாந்தின் இரும்பு மங்கை.

இங்கிலாந்தின் சவுத்தாம்டன் கவுண்டியைச் சேர்ந்த கேத்தரின் பார்லெட்டின் எடை வெறும் 58 கிலோதான். ஆனால் 171 கிலோ எடையை சாதாரணமாக தூக்குகிறார்.

அதைவிட அதிக எடையுள்ள கார், லொறி என்று எதையும் விட்டுவைக்காமல் மூச்சைப் பிடித்துக் கொண்டு இழுத்து ஒரு பெண்ணால் முடியாதது என்ன? என்பதை சொல்லாமல் செய்து காட்டுகிறார்.

31 வயதாகும் கேத்தரின் விளையாட்டுத்துறையில் நுழைந்து 3 வருடங்கள்தான் ஆகிறது.

இது பற்றி கேத்தரின் கூறுகையில், சிகையலங்கார நிபுணராக இருந்த எனக்கு ஸ்ட்ராங்மேன் என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்த பிறகுதான் பளுதூக்குவதில் ஆர்வம் வந்தது.

அந்த ஆர்வத்தில் ஜிம்முக்கு சென்ற போதுதான் ஒரு உடல் வலிமைமிக்க பெண்ணின் அறிமுகம் கிடைத்தது.

அவரைப் போலவே நானும் வலிமையானவளாக வேண்டும் என்று நினைத்தேன். ஸ்ட்ராங்வுமன் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக ஜிம்மிலேயே தவமிருந்து தீவிர பயிற்சி மேற்கொண்டேன்.

என் குடும்ப வாழ்க்கைக்கு நடுவில் தான் நான் இவ்வளவு சாதனைகள் புரிந்தேன்.

என் ஐந்து வயது மகன் கார்சனும், 12 வயது மகள் ஜலிசும் பாடசாலையில் இருக்கும் போது, நான் ஜிம்மில் இருப்பேன். சில நேரம் அவர்கள் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்த பின்னும் கூட ஜிம்மில் இருப்பேன். இப்படிப்பட்ட தருணங்களில் என் கணவர் எனக்கு உதவியாக இருப்பார். (3-7)

## அமெரிக்காவில் 40 விதமான பழங்கள் காய்க்கும் ஒரு மரம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நியூயோர்க் அருகே ஒரே மரத்தில் பிளம்ஸ், பீச், செரி உள்ளிட்ட 40 விதமான பழ வகைகள் காய்க்கின்றன. இந்த விந்தையான மரத்தை விவசாய துறை பேராசிரியர் சாம் வன் அகென் என்பவர் உருவாக்கியுள்ளார்.

இவர் சிராகங் பல்கலைக்கழகத்தில் பேராசிரிராக பணிபுரிகிறார். விவசாயத்தில் நாட்டம் உடைய அவர் பிளம்ஸ், செரி உள்ளிட்ட 40 விதமான பழ மரங்களை ஒட்டு முறையில் ஒரே மரமாக உருவாக்கினார்.

கடந்த 2008ஆம் ஆண்டு நியூயோர்க் மாகாண விவசாய பரிசோதனை பண்ணையில் இதை உருவாக்கினார். தற்போது அவை பூவாகி, காயாகி தற்போது பழங்களாக பழுத்து குலுங்குகிறது. (3-7)

## 5 ஆண்டுகளின் பின் பூத்தது பூ



உலகின் பழையதும் பெரியதும் என நம்பப்படும் இராட்சதப் பூ ஜப்பான் டோக்கியோ நகரில் ஐந்து ஆண்டுகளின் பின் பூத்திருப்பதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

டைட்டன் அரூம் **(Titan arum)** என்ற இந்த அரிதான பூ 2 மீற்றர் (6.5 அடி) உயரத்திற்கு பூத்திருப்பதால் அதனைப் பார்ப்பதற்காக மக்கள் போட்டி போட்டு வரத் தொடங்கியுள்ளனர்.


சொபு நகரில் ஜிண்டாய் தாவரவியல் பூங்காவில் இருக்கும் இந்தப் பூ பூத்து இரண்டு நாட்களே கடந்துள்ள நிலையில் இதனைப்பார்ப்பதற்கு நூற்றுக்கணக்கான மக்கள் வரிசையில் நின்று பார்த்து வருகின்றனர் என ஜப்பான் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவை பூர்வீகமாக கொண்ட இந்த பூ தனது 40 ஆண்டு கால வாழ்நாளில் மூன்று அல்லது நான்கு தடவைகளே பூப்பதாக கருதப்படுகிறது.

அத்துடன் இந்தப்பூ வகைகள் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு மட்டுமே பூத்திருக்கும் எனவும் கருதப்படுகிறது.

குறித்த இந்தப் பூ இப்பூங்காவில் கடைசியாக 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் திகதி பூத்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சுசில், அனுரவை பதவியிலிருந்து நீக்க வேண்டும்

### அமைச்சர் அர்ஜூன தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா ஆகியோரை பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டுமென அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஐந்து பேரை மத்திய செயற்குழுவிலிருந்து நீக்கப் போவதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. முதலில் சுதந்திரக்கட்சி மற்றும் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர்களே நீக்கப்பட வேணடும்.

வேட்பு மனு வழங்கப்பட்டுள்ள விதத்தை அவதானிக்க வேண்டும். வேட்பு மனு வழங்கப்பட்ட நபர்கள் தொடர்பில் திருப்தி அடைய முடியாது. வேட்பு மனுவில் கூட்டமைப்பின் தலைவரும் கையொப்பமிட்டுள்ளார். எவ்வாறு கொள்கையொன்றின் அடிப்படையில் இந்த வேட்பு மனுவில் கையொப்பமிட முடியும். பணம் சம்பாதித்தல், பணத்தை சுரட்டுதல் மற்றும் நாட்டை அழிவடையச் செய்தல் ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் இவ்வாறு வேட்புமனு வழங்கப்பட்டுள்ளது.

நாடு அழிவடைவதனை தடுக்கவே மக்கள் கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி எம்முடன் இணைந்து கொண்டார்கள்.

நாட்டை அழிக்க முயற்சிப்போருக்கு இடமளிக்கப்பட மாட்டாது என அர்ஜூன ரணதுங்க சிங்களப் பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார். (இ-7)

### புலிகளுடனான போரை

# ராஜபக்ஷவினர் வெல்லவில்லை



### மங்கள சமரவீர சுட்டிக்காட்டு

**விடுதலைப் புலிகளுடனான போரை ராஜபக்ஷவினர் வெல்லவில்லை எனவும் நாட்டின் முப்படையினரே அதனை வென்றதாகவும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

வெலிகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ராஜபக்ஷ அரசாங்கம் மக்களுக்கு எதனையும் செய்யவில்லை. யுத்த வெற்றியினை தமக்கு சாதகமாக பயன்படுத்தி கொண்டு தமக்குரியவைகளை செய்து கொண்டனர்.

2009 ஆம் ஆண்டு போர் வெல்லப்பட்டது. அது குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம். யுத்தத்தை வென்றது ராஜபக்ஷவினர் அல்ல. இந்த நாட்டின் முப்படையினரே அதனை வென்றனர்.

யுத்தத்தில் வெற்றி பெறும் பின்னணியை இந்த நாட்டில் ஆட்சி செய்த அனைத்து அரசாங்கங்களும் உருவாக்கின.

1994 ஆம் ஆண்டு ஆட்சியை சந்திரிகாவிடம் ஒப்படைக்கும் முன்னர், முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்துதான் கிழக்கு மாகாணத்தை மீட்டனர்.

1994 ஆம் ஆண்டுக்கு பின்னர், விடுதலைப் புலிகளின் தலைமையிடமாகவும் பிரபாகரனின் அலுவலகம் அமைந்திருந்த யாழ். கச்சேரி உட்பட யாழ்ப்பாணத்தை புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணத்தை சந்திரிகா தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் படையினர் கைப்பற்றினர்.

முல்லைத்தீவில் இறுதியாக இருந்த புலிகளை மகிந்த ராஜபக்ஷ தோற்கடித்தார். எனினும் போர் வெற்றியினால் கிடைத்த பிரதி பலன்களை மக்களுக்கு கொடுக்காத மகிந்த ராஜபக்ஷ, போர் வெற்றியை தமது குடும்பத்தின் வெற்றியாக காண்பித்து, அதன் மூலம் தனது சர்வாதிகாரத்தை நாட்டில் உறுதிப்படுத்த முயற்சித்தார் எனவும் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

## சிங்கள மொழியை இழிவுபடுத்தும் மகிந்த

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிங்கள மொழியை இழிவுபடுத்தியுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திருடன் என்ற பதத்திற்கு புதிய அர்த்தமொன்றை கற்பித்து சிங்கள மொழியை மகிந்த இழிவுபடுத்தியுள்ளார்.

ஹொரா(திருடன்) என்ற சிங்கள சொல்லுக்கு ஹொந்த ராஜ்ய பாலகயா (நல்ல அரச தலைவர்) என பொருள்படும் என அண்மையில் மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

தான் திருடன் என்பதனை ஒப்புக்கொண்டே மகிந்த மக்களிடம் வாக்கு கேட்கின்றார்.

செய்த திருட்டுக்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளவும் இவ்வாறு வாக்கு கேட்கின்றார்.

போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அல்லாத கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் ஜனாதிபதி மைத்திரி பாலவின் கட்சித் தலைமைக்கு சவால் விடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்சித் தலைமையகம் சிறிகொத்தவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

## எனக்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கு மகிந்த ராஜபக்ஷ தயாராகி வருகிறார்

### அநுரகுமார தெரிவிப்பு

தன்னால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் வழக்கு தொடுப்பதற்கு மகிந்த ராஜபக்ஷ நடவடிக்கை மேற்கொள்வதனை அறிந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நீதிமன்றில் இது தொடர்பில் கருத்து தெரிவிப்பதற்கும் விருப்பத்துடனே இருக்கின்றேன் என அவர் தெரிவித்தார்.

நான் வெளியிடும் கருத்துகளுக்கு எதிராக வழக்கு தொடுப்பார்களாம் என்று சிலர் கூறுகின்றார்கள்.

மகிந்த ராஜபக்ஷவை நீதிமன்றில் சந்திப்பதில் நானும் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன்.

ஏன் என்றால் அவர் தொடர்பில் மேடைகளில் மாத்திரம் கருத்து வெளியிடுவதில் பயனில்லை.

மகிந்த ராஜபக்ஷவுக்கு முன்னின்று அவரது முகத்திற்கு நேராக கூற வேண்டியதனை கூற வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)


## ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியை உறுதி செய்ய ஜனாதிபதி கடும் முயற்சி

### வாசுதேவ சாடல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியை உறுதி செய்ய, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சித்து வருவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை தோற்கடித்து ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றி பெறச் செய்வதே ஜனாதிபதியின் திட்டமாக அமைந்து ள்ளது.



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், ஜனாதிபதி மைத்திரி பாலவிற்கும் இடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மீண்டும் ரணிலை பிரதமராக்கி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமொன்றை உருவாக்குவதே அந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.

இந்த தருணத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சியின் ஒப்பந்தமொன்றை நிறைவேற்றி வருகின்றார்.

இந்த ஒப்பந்தம் காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது என வாசுதேவ நாணயக்கார சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7)

## கொழும்பில் வாகன விபத்து; 16 மாணவர்கள் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பு - பௌத்தாலோக்க மாவத்தையில் நேறறு காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 16 பாடசாலை மாணவர்கள் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்றும் ஜீப் வண்டி ஒன்றும் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்களில் 12 மாணவிகளும் 4 மாணவர்களும் அடங்குவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் பேருந்து சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை கறுவாத்தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### ஏனைய மாகாணங்களைச் சேர்ந்த

# அரசியல் கைதிகளின் குடும்பங்களும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்

## வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு

அடுத்த கட்டமாக புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் மற்றும் பிள்ளைகளை இழந்தவர்களின் பதிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான செயற்றிட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள அரசியல் கைதிகளின் குடும்பங்களை நேற்று முற்பகல் 10.30 மணியளவில் வவுனியா மாவட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பலநோக்கு மண்டபத்தில், கிராம அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட குடும்பங்களை சந்தித்து அவர்களுக்கு நிரந்தர வாழ்வாதாரம் பெற்றுக்கொடுக்கும் நோக்கோடும், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.



இவ்விசேட சந்திப்பில் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர், அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன் ஆகியோர் இணைந்து மக்களுடன் கலந்துரையாடினர்.

இதன்போது அமைச்சர் தனது உரையில்,

வடக்கு மாகாணத்தில் உள்ள மக்களுக்கு ஓர் நிரந்தர வருமானம் தரக்கூடிய வாழ்வாதாரத்தை உருவாக்கிக்கொடுக்கும் நோக்கோடு இத்திட்டத்தை செய்வதற்கு கடந்த வரவு செலவுத் திட்டத்தில் 43 மில்லியன் நிதியை ஒதுக்கி வேலைத்திட்டத்தை தற்போது ஆரம்பித்துள்ளோம்.

இவ்வாறான வடக்கு மாகாணம் முழுவதும் உள்ள அனைத்து பதிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவுள்ளோம்,

ஏற்கனவே மூன்று தடவைகள் பதிவதற்கான கால நீடிப்பு வழங்கியும் இதுவரை பதிவு செய்யாமல் இருக்கும் இவ்வாறான அரசியல் கைதிகளின் குடும்பங்கள் விரைவாக தமது பதிவுகளை தங்கள் பகுதி மாதர்/கிராம அபிவிருத்தி சங்கங்கள் மூலமாகவோ அல்லது கிராம அபிவிருத்தி திணைக்களம் ஊடாகவோ அல்லது எனது அமைச்சின் செயலாளர் அலுவலகம் ஊடாகவோ விரைவாக பதிவு செய்து இத்திட்டத்தினை பெற்றுக்கொள்ளுங்கள்.

அடுத்த கட்டமாக இத்திட்டத்தின் கீழ் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் மற்றும் பிள்ளைகளை இழந்தவர்களின் பதிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான செயற்றிட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் நடைமுறைப்படுத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்தோடு விசேட விதமாக அரசியல் கைதிகள் தொடர்பில் எமது மாகாணம் தவிர்ந்து ஏனைய மாகாணங்களில் உள்ள கணிசமான அரசியல் கைதிகளின் குடும்பங்களையும் இத்திட்டத்தில் விசேடமாக உள்வாங்கவுள்ளதாகவும், அவ்வாறு வேறு மாகாணத்தை சேர்ந்தவர்களும் நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்னாரில் உள்ள உப அலுவலகத்தில் உரிய ஆவணங்களுடன் வருகைதந்து தமது பதிவுகளை மேற்கொண்டு இவ் விசேட உதவித்திட்டத்தினை பெற்று தங்கள் வாழ்வாதாரத்தையும் பெருக்க முடியும் என அவர் தெரிவித்தார். (2-9-250)




# இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு வதிவிடச் செயலமர்வு

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கடமையாற்றுவதற்காக புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த ஆசிரியர்களுககு "ஆசிரியர் சேவைக்கான முன்தேவைப்பயிற்சி" வதிவிடச் செயலமர்வு இரு தடவைகள் நடைபெறுமென வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இலங்கை ஆசிரியர் சேவையினுள் புதிதாக இணைக்கப்பட்டுள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் இவ்வதிவிட செயலமர்வு நடைபெறவுள்ளது.

இதற்கமைய முதலாவது வதிவிடச் செயலமர்வு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை "பொதுக்கல்வி புலத்தில் ஆசிரியர் சேவைக்கு திசைக்கோட்படுத்தல்" எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணம் கோப்பாயிலுள்ள தேசிய கல்வியியற் கல்லூரியில் அமைந்துள்ள முன் சேவை பயிற்சி விசேட கருமபீடத்தில் நடைபெறும்.

இரண்டாவது தடவையாக நடைபெறவுள்ள வதிவிடச் செயலமர்வு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை "அறிவுசார் பொருண்மியத்துக்கான ஆசிரியர் சேவை" எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணம் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் அமைந்துள்ள முன் சேவை பயிற்சி கரும பீடத்தில் நடைபெறும்.

அத்தோடு இரு தடவைகளாக நடைபெறும் வதிவிடச் செயலமர்வுகளை முழுமையாக நிறைவு செய்யும் பயிற்சி ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.


இவ் வதிவிடச் செயலமர்வு தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற விரும்பும் ஆசிரியர்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாக மாகாண கல்வி அபிவிருத்தி பிரிவின் 021 739 0603 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற முடியுமென அவர் மேலும் அறிவித்துள்ளார். (2-15)

# விழிப்புணர்வூட்டும் செயலமர்வு இன்று

(பணிக்கன்குளம்)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் சமூக ஒருமைப்பாட்டின் தேவைப்பாடு தொடர்பாக வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வூட்டும் செயலமர்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெறும்.

எனவே இச்செயலமர்விற்கு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் பணியாற்றுகின்ற கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூகசேவை உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர், பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், விளையாட்டு உத்தியோகத்தர் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2-281)





வவுனியா தேசிய சேமிப்பு வங்கி நடத்திய 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை -2014 இற்கான பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி விண்மீன் வி.கழகத்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தெரிவானது யங்கம்பன்ஸ்





தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் யாழ். மாவட்ட ரீதியான 9 நபர் கொண்ட உதைப்பந்தாட்ட சுற்றுத்தொடரின் லீக் போட்டியின் வரிசையின் நேற்று முன்தினம் நடைபெற்றஅரையிறுதி ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற முதல் பாதியில் யங்கம்பன்ஸ் அணி வீரர்களான குகரதன் மற்றும் பிரகாஷ் மிகவும் சிறந்த முறையில் 2 கோல்களை பெற்றுக்கொடுத்தனர்.

ஆட்டத்தின் பிற்பாதியில் விண்மீன் ஒரு கோலைப்பெற்றபோதும் சிறிது இடைவெளியில் யங்கம்பன்ஸ் அணி வீரர் தர்ஷன் ஒரு கோலைப் பெற 3 : 1 என்ற கோல் கணக்கில் யங்கம்பன்ஸ் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்திற்கு தெரிவாகியுள்ளது.

போட்டியின் ஆட்ட நாயகனாக யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக வீரர் ரகுகரன் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார். (க)



# ஸ்கந்தா ஸ்ரார் வெற்றி

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டித் தொடர் (25) யாழ்.இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகியது.

இதில் இடம்பெற்ற போட்டியொன்றில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும், ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதியது.

நாணயற்சுழற்சியில் வென்ற கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன் படி 21 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் ஸ்கந்தா. ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சார்பில் புருஷோத்மன் மற்றும் சிந்துஜன் தலா 3 விக்கெட்டுகளையும், கதியோன் 2விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 136 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 18 ஓவர்களில் 3 விக்கெட்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சார்பில் துடுப்பாட்டத்தில் கதியோன் 55 ஓட்டங்களையும், துபீசன் 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதன் மூலம் இப் போட்டியில் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 7 விக்கெட்டுகளால் இலகுவாக வெற்றியீட்டியது. (க-23)



அரியாலை சனசமூக நிலைய 66 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இல்ல மெய்வல் லுநர் போட்டியை நடத்தியது. இதில முதலாம் இடத்தினை கணநாதன் இல்லமும் இரண்டாம் இடத்தினை ஐயாத்துரை இல்லம் பெற்றுக் கொண்டன. வெற்றி பெற்ற அவ் அணியினரை படத்தில் காணலாம்.

# தருமக்கேணி இளம்புயல் வி.கழக மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி

## அதிசயம் வி.கழகம் சம்பியன்







மென்பந்து சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய அணிகளுக்கு முன்னாள் பா.உ..சந்திரகுமார் வெற்றிக் கேடயங்களை வழங்கினார்.

தருமக்கேணி இளம்புயல் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்துச் சுற்றுப்போட்டி கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நேற்று முன்தினத்துடன் நிறைவுற்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்குட்பட்ட சுமார்13 அணிகள்பங்கு கொண்ட இச்சுற்றுப்போட்டியில் அதிசயம் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தையும் துர்க்கா விளையாட்டுக் கழகம் இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இதில் பங்கு கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கான வெற்றிக் கேடயங்களை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் வழங்கினார்.

தருமக்கேணி இளம்புயல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்களான இராசதுரை மற்றும் அன்ரன் அன்பழகன், சமூக சேவையாளர் தருலிங்கம் ஆகியோரும் விளையாட்டு கழகங்களின் தலைவர் செயலாளர்களும் மற்றும் விளை யாட்டு வீரர்களும் கலந்துகொண்டிருந்தனர். (க)

## இன்றைய போட்டிகள்

யாழ்.உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 3.45 மணிக்கு இடம்பெறவுள்ள போட்டியில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.சேவியர் விளையாட்டுக் கழகமும் மாலை 4.45 மணிக்கு நடைபெவுள்ள போட்டியில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

## செம்மீன் வி.கழக வி.போட்டிகள்

பொலிகண்டி செம்மீன் விளையாட்டுக்கழகம் தனது 48 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றது.

போட்டியின் தொடக்கமாக கயிறு இழுத்தல் போட்டி, தலையணைச் சண்டை போன்றன இடம்பெற்றது.

இப்போட்டிகளில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் A B முறையே 1 ஆம் மற்றும் 2 ஆம் இடங்களை பெற்றுக் கொண்டது. இப்போட்டியைப் பார்வையிட ஏராளமானோர் வந்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மரதன் ஓட்டப் போட்டி இடம்பெற்றது. மேலும் பல போட்டிகள் இடம்பெறவுள்ளன. (க)

# வலைப்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு கலைவாணி வி.கழகம் பெண்களுக்கான யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட (Netball) போட்டியினை நடத்த இருப்பதால் இப் போட்டிக்கு பங்குபற்றும் கழகங்கள் தமது பதிவினை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றனர் கலைவாணி வி.கழத்தினர்.

மேற்படி இவ் இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பதிவினை மேற்கொள்ளவும். குமார் - 077 617 6708, சுலக்சன் -077 164 2186. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் செயல்கள்; அவர்கள் சிந்தனை களுக்கு சிறந்த விளக்கங்கள் ஆகும்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நல்லூர் மஹோற்சவ காலத்தில் விளம்பரங்கள், ஒலிபெருக்கிகளுக்கு தடை

## யாழ்.மாநகர சபை ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மஹோற்சவ காலத்தில் வர்த்தக விளம்பரங்கள், அரசியல்வாதிகளின் புகைப்படங்கள், ஒலிபெருக்கிப் பாவனை என்பன ஆலய சூழலில் முற்றுமுழுதாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபை ஆணையாளர் தலைமையில் நல்லூர் மஹோற்சவம் தொடர்பான ஆயத்தக் கூட்டம் யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கலாநிதி ஆறு.திருமுருகன், சிந்மய மிஷன் சைத்தன்ய சுவாமிகள் ஆகியோர் நல்லூர் ஆலய சூழலின் புனிதத் தன்மை பேணப்பட வேண்டும்.

விளம்பரங்கள், ஒலிபெருக்கி பாவனைகள் அனுமதிக்கக் கூடாது என கோரிக்கை விடுத்ததை அடுத்து ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக் தொடர்ச்சியாக நடைபெற்ற கூட்டத்தில் யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எப்.யு.கே. வூட்லர் விடுத்த சில கோரிக்கைகளுக்கு அமைவாக நல்லூர் மஹோற்சவ காலங்களில் ஆலயத்திற்கு வருகை தரும் ஒழுங்குமுறைகள் தொடர்பாக பக்தர்களுக்கு முற்கூட்டியே பத்திரிகை வாயிலாக அறிவித்தல்கள் வழங்கப்படும் என்றும் ஒழுங்குமுறைகள் பற்றி நான்கு பக்க வாசல்களிலும் விளம்பரப் பலகை மூலம் அறிவிக்கப்பட்டிருக்கும் எனவும், அத்துடன் வெளிஇடங்களில் ஒலிபெருக்கி மூலம் பாதுகாப்பு, போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாக தொடர்ச்சியாக அறிவிக்கப்படும் என ஆணையாளர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள குடியிருப்பாளர்கள் மற்றும் அரச ஊழியர்களுக்கு நான்கு பக்கங்களினூடாகவும் செல்வதற்கான அனுமதிச் சீட்டு வழங்கப்படும்.

அத்துடன் ஆலயத்தின் புனிதத் தன்மையை பாதுகாக்கும் முகமாக பாதணிகளுடன் செல்வதும் வாகனங்கள் செல்வதும் அனுமதிக்கப்பட மாட்டாது.

ஆனால் இது தொடர்பாக ஆலயச் சூழலில் உள்ள திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அது தொடர்பாக கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

ஆலயச் சூழலில் கர்ப்பூரம் விற்பனையில் ஈடுபடுகிறவர்கள் ஆசார முறைப்படி விற்பனை மேற்கொள்வது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் சிறப்பான முறையில் நல்லூர் ஆலய திருவிழா நடைபெற்றதைப் போன்று இந்த வருடமும் சிறப்பான முறையில் நடத்துவதற்கு சகல தரப்பினருடனும் கலந்துரையாடி இன்றும் சில முடிவுகள் எடுக்கப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மஹோற்சவ ஆயத்த கூட்டத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், வீணாகான குருபீட தலைவர் சபா.வாசுதேவக் குருக்கள், சிந்மய மிஷன் ஜாக்கிரத சைத்தன்ய சுவாமிகள், கலாநிதி ஆறு.திருமுருகன் , யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எப்.வூட்லர் , நல்லூர் பிரதேச செயலர் , சங்கத் தலைவர்கள் , திணைக்களத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நல்லூர் மஹோற்சவம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 19ஆம் திகதி பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(செ-9)

# தமிழர்களின் தலைவிதியை தமிழர்களே தீர்மானிப்பர்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்ற முடிவை பெரும்பாலானவர்கள் இன்னமும் முடிவு செய்யவில்லை.

யாருக்கு வாக்களிப்பது என்ற தீர்மானத்திற்கு வருவதற்கு சில சான்றாதாரங்கள் தேவை.

இதற்கப்பால் முன்பு வாக்களித்து நாம் கண்டது என்ன என்ற கேள்வியும் வாக்களிப்பில் ஒரு மனச்சோர்வை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் மனச்சோர்வு-வாக்களிப்பதில் காட்டும் அசமந்தம் எதுவும் பாராளுமன்றத் தேர்தலைப் பாதிக்காது.100 பேர் வாக்களித்தாலும் போதும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு.

எனவே வாக்களிப்பதற்கு மனம் விரும்பவில்லை என்ற வெறுப்பு நிலையை தொடரவிட்டால் இன்னும் மோசமான சூழ்நிலை வந்துவிடலாம். எனவே வாக்களிப்பது என்பது மிகவும் முக்கியமானது.

இதுபற்றி முன்பும் இவ்விடத்தில் பிரஸ்தாபித்துள்ளோம். எனினும் கடந்த காலத் தேர்தல்களில் தமிழ் மக்கள் விட்ட தவறு என்ன என்பது குறித்து ஆராய்ந்தால்; தங்களின் அரசியல் தலைமை என்று நினைத்து தமிழ் மக்கள் யாருக்கு வாக்களித்தனரோ அந்தத் தமிழ்த் தலைமையை கட்டுப்படுத்த,கண்காணிக்க, அதன் செயற்பாடு தொடர்பில் ஆராயக் கூடிய இன்னுமொரு சக்தியை நாம் பாராளுமன்றம் அனுப்பாமல் விட்டது மிகப் பெரும் தவறாகும்.

அதாவது, ஒரு குழுவிடம்- அணியிடம் - கூட்டிடம் முழுப் பொறுப்பையும் வழங்கிவிட்டு அவர்கள் செய்வார்கள் என்று தமிழர்கள் பேசாமல் இருந்ததுதான் மிகப் பெரிய தவறு.

நாம் வாக்களித்து பாராளுமன்றத்திற்கு அனுப்பிய குழுவின்- அணியின் - கூட்டின் செயற்பாடு எங்ஙனம் உள்ளது என்பதை அறிவதற்கு இன்னுமொரு பலமான சக்தியை தமிழர்கள் தோற்றுவித்திருக்க வேண்டும்.

அப்படியொரு நிலைமை இருந்திருக்குமாயின்; தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே மிகவும் நிதானமாக நடந்திருப்பர். ஆனால் நாம் அது பற்றிச் சிந்திக்கவில்லை.

எனினும் எதிர்வரும் பொதுத் தேர்தல் தமிழ் மக்கள் நிதானமாகச் சிந்தித்து செயற்படுவதற்கான ஒரு களம் எனலாம்.

ஒரு பகுதியிடமே தங்கள் பிரதிநிதித்துவத்தைத் தாரை வார்த்துக் கொடுக்காமல் அவர்களை இவர்கள் மேற்பார்வை செய்வர். இவர்களை அவர்கள் மேற்பார்வை செய்வதென்பதான ஒரு பலமான சூழமைவை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அதாவது, பாராளுமன்ற உறுப்பினர் பதவியை எடுத்துக் கொண்டு மக்களை ஏமாற்றலாம்; அங்கொரு கதை; இங்கொரு கதை விடலாம் என்ற நினைப்பு எவரிடமும் இல்லாமல் போய்,

அடுத்த தேர்தலிலும் நாம் வெல்லவேண்டுமாயின் மக்கள் பணி செய்ய வேண்டும்; நேர்மையாக நடக்க வேண்டும் என்ற நிலைமை தோற்றுவிக்கப்படும்.

அதேசமயம் பலமான அணிகள் தமிழர்களின் உரிமை விடயத்தில் ஒன்று சேர்ந்து முடிவுகளை எடுக்கும்போது உண்மைநிலைமைகள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும்.

இதைவிடுத்து ஒரு அணியிடம் முழுவதையும் கொடுத்தால் அவர்கள் பேசுவார்கள்.அது வெளிவராது.

பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட தலைவருக்கு மட்டுமே பேசிய விடயம் தெரியும்.அந்த அணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே எதுவும் தெரியாமல் போகும்.இதுவே யதார்த்தம்.

எல்லாவற்றையும் வெளியில் சொல்ல முடியாது என்பது நியாயமானது. ஆனால் மறைத்ததால் நீங்கள் எதைச் சாதித்தீர்கள் என்று கேட்கும்போது, உங்கள் இரகசியம் சுயநலத்திற்கானதென்றாகி விடுகின்றது.

ஆகையால் நேர்மையான - தமிழினத்திற்கு விசுவாசமானவர்கள் வெவ்வேறு அணிகளில் இருந்தாலும் அவர்கள் பாராளுமன்றம் செல்லவேண்டும்.

அதுவே தமிழ் அரசியல் தலைமைகள் தமிழினத்தோடு நிற்பதற்கான கடிவாளமாகும்.

# வாழ்வின் எழுச்சி திட்டம் மூலம் ரூ.40 மில்.யாழுக்கு ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்துக்கு இந்த வருடம் வாழ்வின் எழுச்சி முதலீட்டு அபிவிருத்தி திட்டத்திற்கென 40 மில்லியன் ரூபாய் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சினால் கிடைக்கப்பெற்றுள்ளதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலக பிரிவுகளினூடாகவும் மக்களினால் முன்மொழியப்பட்ட பல்வேறு அபிவிருத்திப்பணிகள் இந்த நிதியினூடாக மேற்கொள்ளப்படவுள்ளது.

அந்த வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நாற்பது மில்லியன் மூலம் பாதை புனரமைப்பு, இணைப்பு வீதிகளை அமைத்தல், முன்பள்ளிகளை மேம்படுத்தல், சுகாதாரம் சம்பந்தமான மேம்பாடு, மீனவர் ஓய்வு மண்டபம் அமைத்தல், பாடசாலைகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல், பயிற்சி வழங்கல், போதைப் பொருள் அடிமையாதல் தொடர்பான விழிப்புணர்வு, மீன் ஏலம் மற்றும் விற்பனை மண்டபம் அமைத்தல், அறநெறி மற்றும் பெண் தலைமைத்துவ குடும்ப பெண்களுக்கு தும்பு தரம் பிரித்தல் பெறுமதி பார்த்தல் தொடர்பான பயிற்சி நெறி வழங்கல் போன்ற மக்களால் முன்மொழியப்பட்ட திட்டங்களை மாவட்டத்தின் பதினைந்து பிரதேச செயலக பிரிவுகளிலும் செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் எனும் திட்டத்திற்கென பதினொரு மில்லியன் ரூபாய் மற்றும் பின்தங்கிய கிராமங்களின் ஆரம்ப சுகாதார நிலையங்களினை மேம்படுத்துவதற்கென ஒரு மில்லியன் ரூபாய் கிடைக்கப்பெற்றுள்ளதெனவும் இத்திட்டங்களை செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகளும்செய்யப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.(செ-9)

# சித்திரத் தேர் வெள்ளோட்டம்

(சாவகச்சேரி)

தொண்டைமானாறு கெருடாவில் ஞான வைரவர் ஆலயத்திற்கென அமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்ட நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இச்சித்திரத் தேரினை இ.விமலேஸ் தனது சொந்த நிதியில் வடிவமைத்து அன்பளிப்பாக வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5-29)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



தைரியமாக இரு. நேர்மையுடன் இரு. எந்த நெறியானாலும் அதைப் பக்தி சிரத்தையுடன் பின்பற்று. அப்போது நீ இறைவனை அடைவது உறுதி.

எப்போதும் கொடுப்பவனின் நிலையில் இரு. பிரதியாக எதையும் எதிர்பார்க்காமல் அனைத்தையும் கொடு. அன்பைக்கொடு, உதவியைக் கொடு, சேவையைக் கொடு, சிறிது என்று கருதாமல், கொடுப்பதற்கென்று உன்னிடம் உள்ளவற்றை எல்லாம் கொடு. ஆனால் பண்டமாற்று நோக்குடன் கொடுக்காதே.

ஆன்மாவில் நிலைத்திரு. அப்போதுதான் உலகத்தை உண்மையில் நேசிக்க முடியும்.

ஒவ்வோர் இன்பத்திற்குப் பின்னரும் துன்பம் வருகிறது. ஆன்மா பக்குவமடையுந்தோறும் ஒன்று மற்றொன்றைத் தொடர்கின்ற வேகமும் அதிகரிக்கிறது. நமக்கு வேண்டுவது இன்பமும் அல்ல, துன்பமும் அல்ல. இரண்டும் நமது உண்மை இயல்பை மறக்கச் செய்கின்றன. இரண்டும் சங்கிலிகளே- ஒன்று இரும்புச் சங்கிலி, மற்றொன்று பொன் சங்கிலி. இரண்டின் பின்னணியிலும் இருப்பது ஆன்மா. அது இன்பம் துன்பம் இரண்டையும் அறியாதது.

துன்பம் இல்லாத இன்பமோ, தீமை இல்லாத நன்மையோ ஒருபோதும் இருக்கமுடியாது.

எதையும் தேடிச்செல்லாதே, விலக்கவும் செய்யாதே. வருவதை அப்படியே ஏற்றுக்கொள். எதனாலும் பாதிக்கப்படாமல் இருப்பதே சுதந்திரம். பொறுத்துக் கொள்வது மட்டும் போதாது, பற்றற்று இருப்பது அவசியம்.

எண்ணங்களுக்கு ஏற்ப நாம் உருவாகிறோம். ஆகவே என்ன நினைக்கிறாய் என்பதில் எச்சரிக்கையாக இரு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் துறையினருக்கு தேவையான விடுமுறையை வழங்குமாறு கோரிக்கை

## தேர்தல்கள் ஆணையாளர் விடுப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு தனியார் துறையினருக்கு தேவையான விடுமுறையை வழங்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கோரிக்கை விடுத்துள்ளார்.



வாக்காளர் பணிபுரியும் இடத்திலிருந்து 40 கிலோமீற்றர் அல்லது அதற்கு குறைவான தூரத்தில் அவரது வாக்களிப்பு நிலையம் காணப்படுமாயின் அரைநாள் விடுமுறை வழங்கவேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தவிடயம் தொடர்பில் தேர்தல்கள் செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள விசேட அறிக்கையிலேயே தேர்தல்கள் ஆணையாளர் இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை 40 கிலோமீற்றர் முதல் 100 கிலோமீற்றர் வரையான தூரத்தில் வாக்களிப்பு நிலையம் காணப்படுமாயின் வாக்காளருக்கு ஒரு நாள் விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

மேலும் வாக்காளர் பணிபுரியும் இடத்திலிருந்து 100 கிலோ மீற்றர் தொடக்கம் 150 கிலோமீற்றர் தூரத்தில் வாக்களிப்பு நிலையம் காணப்படுமாயின் ஒன்றரை நாள் விடுமுறையும் 150 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்தில் வாக்களிப்பு நிலையம் காணப்படுமாயின் இரண்டு நாள் விடுமுறை வழங்க வேண்டுமென தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை நாடளாவிய ரீதியிலுள்ள தனியார்துறை வாக்காளர்கள் தங்களின் வாக்குகளை பதிவுசெய்வதற்கு மூன்று நாள் கால அவகாசம் தேவைப்படுமாயின் அதனை வழங்கவேண்டுமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# இளைஞர்களுடன் செல்பி எடுத்த மகிந்த



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இளைஞர்கள் சிலருடன் செல்பி எடுத்து தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளார்.

கால்டன் இல்லத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்ட போதே மேற்படி இளைஞர்களின் வற்புறுத்தலின் பேரில் செல்பி எடுத்து கொண்டதாக பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# 26 இந்திய மீனவர்களின் மறியல் மீண்டும் நீடிப்பு

பருத்தித்துறைகடற்பரப்பில்அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டதாக கடந்த ஜூன் மாதம் 21 ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 26 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 21 ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பில் 3 படகுகளில் வந்து 26 இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர்.

அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் இவர்களை கைது செய்ததுடன் அவர்களுடைய படகுகளையும் கைப்பற்றி காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தனர். அன்றைய தினம் மாலை பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு ஜுலை மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. தொடர்ந்தும் நேற்றைய தினம் 27 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்றையதினம் இவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது இவர்களை விடுதலை செய்வது தொடர்பாக சட்டமாஅதிபர் திணைக்களத்திடமிருந்து எந்தவித ஆலோசனையும் கிடைக்கவில்லை என்பதால் 26 மீனவர்களையும் 4 ஆவது தடவையாக எதிர்வரும் ஓகஸ்ட் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-9)

# இலங்கை-இந்தியாவிற்கு இடையில் கப்பல் சேவை ஆரம்பிக்க தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் கப்பல் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் துறைமுக அதிகாரிகளிடம் கலந்துரையாடப்படுவதாகவும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சசி தனதுங்க தெரிவித்துள்ளார்.

கப்பல் சேவைக்கு தேவையான சுங்கம் உள்ளிட்ட ஏனைய துறைசார் உத்தியோகததர்களை இணைத்துக் கொள்ளவது தொடர்பிலும் கலந்துரையாடப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பயணிகள் கட்டணம் தொடர்பில் இதுவரையில் தீர்மானிக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பயணிகள் எண்ணிக்கை மற்றும் பரிமாற்றத்திற்குட்படும் பொருட்களின் அளவு என்பனவற்றை அடிப்படையாக கொண்டே கப்பல் சேவைக்கான பண அறவீடு தொடர்பில் அறிவிக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# நாளைய மேதைகளின் இன்றைய போசனை


"மெஞ்ஞானம் தனில் விஞ்ஞானம்
படைத்திடும்
ஆறிவொளிதனை ஆற்றலுடன்
இணைத்து
திறமைகளை வெளிக்கொணரும்
மாணவா - நீயே
நாளைய சமுதாயத்தின்முன்னோடி
செயற்றிற்னாளியும் கூட"

உன் ஒருங்கிணைந்த செயற்பாட்டினாலும், மனக்கட்டுப்பாட்டினாலும் அகிலமே வென்றிட, சாதனைகள் பல படைக்க, அறிவியல மேதை, விஞ்ஞான மேதை, கணித மேதை எனப் பற்பல வடிவங்களில் அகிலமே உனைப் போற்றிட மாணவர் சமுதாயமே, உன் இருக்கை நகர்த்தி எழுந்து நில் இமயம வரை சென்றிடலாம்.

சித்த மருத்துவத்தின் ஈடு இணையற்ற ஒரு பிரிவாக விளங்குவது யோகாசனமும் அதன் நன்மைகளுமாகும். மனதையும் உடலையும் இணைத்து ஒரு நிலைப்படுத்தி ஆன்மீக வழியில் இட்டுச் செல்வதே இதன் தனிச் சிறப்பாகும். ஆரோக்கிய வாழ்விற்கு வித்திடும் இவ்வாசனக் கல்வியை, அதன பலனை பெருமளவிற்குப் பெறுகின்ற முதன்நிலை, ஆரம்ப படிநிலையாக விளங்குவது சூரிய நமஸ்காரமாகும்.

"சூரியன் இல்லையேல் நாம்
இல்லை"

ஆகில உலகையே காத்திடும் சக்தி மிகுந்தவன் சூரியன். எம்முடலில சக்தியைப் பெருக்கு கின்ற அதாவது உடல், உள, சுவாச, ஆன்மீக பலத்தைப் பெரு க்குகின்ற ஆசனமே சூரிய நமஸ் காரம். பள்ளிபபருவ மாணவர்கள் சூரிய நமஸ்காரம் செய்வதனால் ஏற்படும் நன்மைகள் பற்றி எடுத்து நோக்குவோமாயின், அவர்களின் நரம்புமண்டல, அகஞ்சுரக்கும் செயற்பாட்டை ஒழுங்காக்குவதனால் 100 இற்கும் மேறபட்ட நன்மைகள் கிடைக்கின்றன. அவற்றில் ஆய்வு



ரீதியாக கூறப்பட்டவற்றில் சிலவற்றை எடுத்து நோக்குவோ மாயின்,

1. கிரகிக்கினற தன்மையை, கிரகிக்கின்ற மனப்பான்மையை அதிகரிக்கச் செய்கின்றது.

2. ஞாபக சக்தியைஅதிகரிக்கச் செய்கின்றது

3. ஒரு கருப்பொருளை மையப்படுத்தி பல்வேறு கோணங்களிலும் சிந்திக்கத் தூண்டுகின்றது.

4. அறியும் திறனை, கற்கும் திறனை அதிகரிக்கச் செய்கிறது.

5. சந்தோசமான மனநிலையில் இருப்பதையே விரும்புகிறது.

6. நோய் எதிர்ப்புசக்தி நல்ல முறையில் இருக்க உதவுகிறது.

7. உடல் இயக்கச் செயற்பாடுகள் நன்னிலையில் இருக்க உதவுகிறது.

8. உடலுக்கு சக்தியை வழங்குகிறது.

9. உடல் முழுவதும் சீராகத தொழிற்படுகிறது.

10. குருதிச் சுற்றோட்டம் சீராகத் தொழிற்பட உதவுகிறது.

11. ஆழமான சுவாச நிகழ்வுகள் மூலம் பிராணவாய முழுமையாக கிடைக்கச செயகிறது.

12. சமிபாட்டுத தொகுதி சீராகத தொழிற்பட உதவுகிறது.

13. நல்ல தூக்கத்தையும், உடல் வளர்ச்சியையும் ஏற்படுத்துகிறது.

இத்தகைய நன்மைகளை அள்ளித்தரும் சூரிய நமஸ்காரத்தை நாம் செய்ய உகந்த நேரம் காலை நேரம். எனினும் மாலையிலும் செய்யலாம். வெறும் வயிற்றில் செய்வதே சிறந்தது. தளர்வான உடை அணிந்து இதமான காற்றோட்டமுள்ள இடத்தில், சிறந்த குரு ஒருவரிடமிருந்தே பெற வேண்டும்.

எனவே தான் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சித்தர்களினால் தோற்றுவிக்கப்பட்ட இச சூரிய நமஸ்காரம் இன்றும் எம் 4 ஆம், 5 ஆம்




தர பாடப்புத்தகத்தில், பாடத்திட்டத்தில் இணைத்திருப்பது அதன் சிறப்பை மேலும் மேலும் வலுவூட்டி நிற்கின்றது.

"ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு"
"கூடி வாழ்ந்தால் கோடிநன்மை"

இணைதல், ஒன்றுசேர்தல் என்பதே யோகம். இணைகின்ற போதே சக்தியும் பலமும் அதிகரிக்கின்றது. அதன் நன்மைகளும் மடங்காகப் பெருக்கெடுக்கின்றன.

பன்னிரு படிநிலைகளை செயன் முறையாகக் கொண்ட இச் சூரிய நமஸ்காரத்தை சூரியனை நோக்கி கிழக்குப் பக்கமாக நின்று ஒழுங்காக, ஆறுதலாக, ஆரம் பத்தில் 2-4 சுற்றுகளும், படிப் படியாக அதிகரித்து 12 சுற்றுகள் / நாள் என்ற முறையில் செய்து வரலாம். இதனைத் தொடர்ந்து யோகாசனமும், பிரா்ணாயாமம், தியானம் செய்து வரலாம்.

குழந்தை நலன் காப்பதும், பள்ளிப் பருவமதில் சிறார்களை நன்னெறிப்படுத்துவதும், ஒழுக்கமுள்ள நற்சமுதாய உருவாக்கத்திற்கு வித்தடுவதும், இன்றைய சிறார்களை நாளைய மேதைகளாகவும், அறிவியல் ஆய்வாளர்களாகவும் உருவாக்குவதும் பெரியோாகளாகிய எம் கடமை யாகும்.

எனவே எம்பணியை சிறப்புடன் செய்ய சூரிய நமஸ்காரமும் அத்துடன் யோகாசனமும் சிறார்கள் செய்ய ஊக்குவிப்போம்.

Dr.(திருமதி)
J.J எட்ணா
மரியவிண்ணேற்றொனி
ஆயுள்வேத மருத்துவ
உத்தியோகத்தர்
(பொதுசுகாதாரம்)
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலி உறுப்பினர்...

அந்தத் தருணத்தில் கைதாகியுள்ளனர்.

அவர், இலங்கைக்கு வான்வழியாக பயணிக்க முற்படும் போதே தாம் அவரை கைது செய்ததாக திருச்சிராப்பள்ளி பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த வாரத்திலும் சயனைட் குப்பிகள் மற்றும் வெடிப்பொருட்களுடன் இலங்கையர் உள்ளிட்ட நான்கு பேர் தமிழகத்தில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## குழந்தை மரணம்...

ருடன் நீராட சென்ற போது காணாமல் போனதாக முறையிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சந்திரிகா இன்று...

தேர்தலில் வேட்பு மனு பெற்றுக்கொண்ட, ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட தரப்பினர் தொடர்பிலும் தகவல்களை வெளியிடவுள்ளார்.

சந்திரிகா கடந்த 9ஆம் திகதி வெளிநாட்டுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

வேட்பு மனு வழங்குவது தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சை காரணமாக அவர் வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை கடந்த 25ஆம் திகதி நாடு திரும்பிய அவர் நாட்டின் அரசியல் சூழ்நிலைகளை அவதானித்து இன்று விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார் என தகவல்கள் கிடைத்துள்ளன. (செ-12)

## அப்துல் கலாம்...

தின் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்.

இந்தியாவின் அணுத்திட்டத்தில் இவர் ஆற்றிய பங்களிப்புக்காக இவருக்கு பாரத ரத்னா விருதும் நாட்டின் சேவைக்காக பத்மபூஷன் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

2002இல் இந்திய குடியரசுத் தலைவராக அப்போதைய ஆளும் கட்சியாக இருந்த பாரதிய ஜனதாக் கட்சியினாலும் மற்றும் எதிர்க்கட்சியாக இருந்த காங்கிரஸினாலும் கூட்டாக நியமிக்கப்பட்ட அப்துல் கலாம் 5 ஆண்டுகள் அந்த பதவியில் நீடித்திருந்தார்.

இந்தியாவின் வடகிழக்கில் உள்ள சில்லோங்கில் நிகழ்வு ஒன்றுக்காக நேற்றுமாலை சென்றிருந்த அப்துல் கலாமுக்கு அங்கு திடீரென சுகவீனம் ஏற்படவே அவர் அங்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

கல்வி நிறுவனம் ஒன்றில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது அவர் மயங்கி விழுந்ததாக கூறப்படுகின்றது.

திருமணம் செய்யாமல் கடைசிவரை வாழ்ந்த அப்துல் கலாமின் மறைவு குறித்து பல முன்னணி அரசியல்வாதிகளும், தலைவர்களும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (செ-11)

## யாழ்.,கிளிநொச்சி...

பகுதியில் தரையிறங்கவுள்ளார்.

அவரை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வரவேற்று தனது இல்லத்துக்கு அழைத்துச் செல்வார்.

முற்பகல் 11 மணியளவில் யாழ்.நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறுகின்ற விசேட பூஜை வழிபாட்டிலும் அன்னதான நிகழ்விலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்பார்.

பின்னர் யாழுக்கான பயணத்தை நிறைவு செய்யும் ஜனாதிபதி, உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி மாவட்டத்துக்கான விஜயத்தை மேற்கொள்வார்.

அங்கு பிற்பகல் 2 மணியளவில் சதோச விற்பனை நிலையத்தை திறந்து வைத்து பின்னர் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்ட இடத்தில் தேநீர் விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் தனது வட மாகாண விஜயத்தினை நிறைவு செய்யும் ஜனாதிபதி அன்றைய தினம் மாலை கொழும்பு திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## ஐக்கிய மக்கள்...

என்ற ரீதியில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும் முன்னாள் ஜனாதிபதி கலந்துகொள்கின்ற கூட்டணியின் தேர்தல் செயற்பாடுகளில் தான் கலந்துகொள்வதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் ஆற்றிய விசேட உரையில் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கமைய இம்முறை பொது தேர்தலில் ஜனாதிபதி சுயாதீனமாக செயற்பட்டு வருகின்றார்.

ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட இத்தீர்மானத்தினால் இன்று இடம்பெறவுள்ள நிகழ்வில் ஜனாதிபதி கலந்துகொள்ள மாட்டார் என அரசியல் வட்டாரத் தகவல் தெரிவித்துள்ளது. (செ-11)

## தம்பிராசாவின்...

பில் பொலிஸார் தீவிர விசாரணைகளையும் தேடுதல்களையும் மேற்கொண்டு வருகின்றனர். (ந)

## விபத்துக்குள்ளானவர்...

சக்கர வண்டியும் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பின்னிருந்து பயணித்த அக்கராயன் குளத்தினை சேர்ந்த யேசுதாஸ் ஜெகதீபன் (வயது-31) என்பவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கிருந்தும் மேலதிக சிகிச்சைக்காக அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு கொண்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று மாலை பிரஸ்தாப நபர் உயிரிழந்தார். (செ-12, 277)

## 10 ஆயிரம்...

போது இரண்டு அதிரடிப்படையினர் தனக்கு பாதுகாப்பு வழங்கி வருவதாகவும் சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# யாழ்.மாவட்ட செயலக அபிவிருத்தி மடல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தின் இவ்வருடத்திற்கான முதலாவது செயலக மடல் நாளை 29ஆம் திகதி புதன்கிழமை வெளியிடப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் இடம்பெற்ற, இடம்பெறும் அபிவிருத்தி மற்றும் விசேட சேவைகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய மடல் காலண்டுக்கு ஒருமுறை மீண்டும் இவ்வருடத்திலிருந்து வெளியிடுவதாக மாவட்ட செயலகத்தால் தீர்மானிக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில் யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் மாவட்டத்தின் முதலாவது பிரதேச செயலகமாகிய நெடுந்தீவு பிரதேச செயலகம் ஆகியவற்றின் செயற்பாடுகளை உள்ளடக்கிய இவ்வருடத்துக்கான முதலாவது செயலக மடல் நாளை 29ஆம் திகதி புதன்கிழமை யாழ்.மாவட்ட அரசஅதிபர் நா.வேதநாயகனால் வெளியிடப்படவுள்ளது.

இம்மடல் இலங்கையின் அனைத்து மாவட்டச் செயலகங்களுக்கும் மத்திய மற்றும் மாகாண அரசின் திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-6)


# தேவை

ஜெயந்திநகர்,கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்க்காணும் பணிக்கு ஆட்கள் தேவைப்படுகிறது.

**சமையலாளர் – ஆண்**

இல்ல நடைமுறைகளுக்கு அமைவாக இல்லத்தில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய நல்ல தேகாரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.

**குடும்பப் பொறுப்பற்ற தனியாட்கள் விரும்பத்தக்கது.**

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

விண்ணப்பதாரிகள் 02-08-2015ற்கு முன்னர் நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**தொடர்புகளுக்கு:**

தி.இராசநாயகம், தலைவர்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி. (C-1674)

தொலைபேசி இலக்கம் 077-0604950, 021-4923118



# அங்கஜன் இராமநாதன் ஏற்பாட்டில் ஜனாதிபதி யாழுக்கு விஜயம்





வெற்றிலை சின்னத்தின் தலைவன் கௌரவ மைத்திரிபால சிறிசேன அவர்கள், அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் நல்லூரில் அமைந்துள்ள கைலாசபிள்ளையார் ஆலயத்தில் இன்று காலை 10.30 மணியளவில் நடைபெறவிருக்கும் விசேட பூசை வழிபாட்டில் கலந்து சிறப்பிக்கின்றார்.

எனவே கட்சியின் அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுவுடன் தங்களது தனிப்பட்ட பிரச்சினைகளை அவருடன் கலந்துரையாட விசேட ஒழுங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C-260)

அங்கஜன் இராமநாதன்
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர்



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் திருமதி
மயில்வாகனம் பொன்னம்மா

மண்ணகத்தில் 16 - 03 -1930
விண்ணகத்தில் 29 -06 - 2015

கடந்த 29.06.2015 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவி திருமதி மயில்வாகனம் பொன்னம்மா அவர்களின் திடீர் மரணச்செய்தி கேட்டு நேரில் வந்து நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையம் வைத்தவர்களுக்கும்,கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோர்களுக்கும், உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று 28-07-2015, செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C-1678)

தச்சந்தறை,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரீபியன் பிறிமியர் லீக் தொடர் ரிரினிடாட் & ரொபாக்கோ சம்பியன்

கரீபியன் பிறிமியர் லீக் 3 ஆவது பருவகாலத்துக்கான தொடரில் கம்ரன் அக்மல், டெல்பேர்ட்டின் துடுப்பாட்டம் செய்த வித்தையால் டுவைன் பிராவோ தலைமையிலான ரிரினாட் அன்ட் ரொபாக்கே ரெட் சீல் முதன் முதலாக சம்பியனாகியது.

இந்தியாவில் பிரபல்யமான ஐ.பி.எல். தொடரைப் போன்று மேற்கிந்தியத் தீவுகளிலும் கரீபியன் பிரிமியர் லீக் தொடர் கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து நடத்தப்படுகிறது.

இத்தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

பல்வேறு லீக் போட்டிகள், நொக் அவுட் சுற்றுகளுக்குப்பின் ரிரினாட் அன்ட் ரொபாக்கே - பார்படோஸ் டிரிடென்ட்ஸ் அணிகள் இறுதிப் போட்டிக்கு நுழைந்தன.

நாணயச்சுழற்சியில்வென்ற ரிரினாட் அன்ட் ரொபாக்கே அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அதன்படி அவ்வணி சார்பில் கலிஸ், டெல்போர்ட் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார். கலிஸ் 9 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து டெல்போர்ட்டுடன் கம்ரன் அக்மல் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி பார்படோஸ் பந்து வீச்சை துவம்சம் செய்தது.

இருவரும் இணைந்து 2 ஆவது விக்கெட்டுக்கு 102 ஓட்டங்கள் எடுத்த நிலையில், கிரான் பொலார்ட்டின் அடுத்தடுத்த பந்துகளில் முறையே டெல்போர்ட் 50, கம்ரன் அக்மல் 60 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

அதன்பின் வந்த அணித் தலைவர் டுவைன் பிராவோ அதிரடியாக விளையாடி 15 பந்துகளில் 29 ஓட்டங்கள் குவிக்க ரிரினாட் அன்ட் ரொபாக்கே அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களைக் குவித்தது.

179 ஓட்டங்களைக் குவித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பார்படோஸ் டிரிடென்ட்ஸ் அணியின் டுவெய்ன் ஸ்மித், ஸ்ரீவன் ரெய்லர் ஆகியோர் களம் இறங்கினார்கள்.




இவ்ஜோடி அதிரடியாக துடுப்பெடுத்தாடி 4.1 ஓவர்களில் 47 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப்பகிர்ந்திருந்த போது ரெய்லர் 20 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அதிரடியாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த ஸ்மித் 30 பந்துகளில் 49 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கார்பின் 20, மிஸ்பா உல் ஹக் 21 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

அதன்பின் வந்த அணித் தலைவர் பொல்லார்ட் அதிரடியாக துடுப்பெடுத்தாடினாலும் தனது அணியை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்ல முடியவில்லை.

இறுதியில் பார்படோஸ் டிரிடென்ட்ஸ் அணியால் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களை மட்டுமேஎடுக்க முடிந்தது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் பொலாரட் 14 பந்துகளில் 20, ஹோல்டர் 20 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

இதனால் ரிரினாட் அன்ட் ரொபாக்கே ரெட் சீல் 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.

போட்டியின் ஆட்டநாயகன், தொடரின் சிறப்பாட்டக்காரராக முறையே ரிரினாட் அன்ட் ரொபாக்கே ரெட் சீல்லின் காம்ரன் அக்மல், அணித் தலைவர் டுவெய்ன் பிராவோ ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க)







## வாக்காளர்களே விழிப்பாயிருங்கள்!

தேர்தல் கால சட்டமீறல்களுக்கு
உடந்தையாக இருக்காதீர்

- புதிய நியமனங்கள், இடமாற்றங்கள் வழங்குதல்.
- வாக்காளர்களை கவரும் நோக்கில் அன்பளிப்புக்களை உதவித் திட்டங்களை வழங்குதல், பெறுதல்.
- அரச சொத்துக்களை பிரசாரத்துக்கு பயன்படுத்தல்.
- வேட்பாளர்கள் பிரசார பதாகைகள், சுவரொட்டிகளை காட்சிப்படுத்தல்.
- போலி வாக்குச்சீட்டுக்களை பயன்படுத்தல்.
- ஊர்வலங்கள், ஒலிபெருக்கியை அனுமதியின்றி பயன்படுத்தல்
- வேறொருவரின் வாக்காளர் அட்டையை வைத்திருத்தல்.
- வேட்பாளர்கள் வீடுவீடாகச் சென்று வாக்கு கேட்டல்.
- தேர்தல் தினத்தன்று வாக்காளர்களை வாகனத்தில் ஏற்றி இறக்குதல்
- வாக்காளிக்க விடாமல் தடுத்தல், விரட்டுதல்.
- வாக்காளர் அட்டை விநியோகத்துக்கு ஊறு விளைவித்தல்.

அனுசரணை -
கரித்தாஸ் யாழ்ப்பாணம் கியூடெக்
(C-1666)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.